விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
(C-439)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (10.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356

## பங்காளிக் கட்சிகளுக்கு இடையேயான

# ஆசன பங்கீடு சுமுகமாக தீர்வு

## பிரச்சினைகள் தீர்ந்ததாக தலைவர்கள் கூட்டு அறிக்கை

(யாழ்ப்பாணம்) உள்ளூராட்சித் தேர்தல் ஆசனப் பங்கீடு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே காணப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப் பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரி வித்துள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

வட மாகாணத்திலுள்ள

## அரச வெற்றிடத்துக்கு ஏனைய மாகாணத்தை சேர்ந்தவர்கள் நியமனம்

(கொழும்பு)

தமது அமைச்சுக்களுக்கு உட்பட நிறுவனங்களின் வெற்றிடங்களை நிரப்பும்பொழுது வடக்கு கிழக்கு பிரதேசத்தை சேர்ந்தவர்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படவில்லை என்று 15☛

தேர்தல் திருத்தச்சட்டம்

## 137 வாக்குகளால் நிறைவேற்றம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகள் திருத்தச் சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு நேற்று பாராளுமன்றத்தில் 137 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்ட மூலத்துக்கு எதிராக 49 வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ம)

வவுனியா – நெளுக்குளத்தில்

## கஞ்சா விற்றவர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞர்களுக்கு கஞ்சா விற்பனை செய்து வரும் நபரை நெளுக்குளம் பொலிஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர். 16☛

## தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை தமிழரசுக்கட்சி நலினப்படுத்துகின்றது



### முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரட்ணம் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒட்டு மொத்த தமிழ் மக்களும்சேர்ந்து ஒரு சரியான தலைமைத்துவத்தை உருவாக்கினால் மட்டுமே தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை நூறுவீதம் பாதுகாக்கமுடியும் என ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் 15☛

## கடலில் மூழ்கி வயோதிபர் பலி

(கரணவாய்)

மரணச்சடங்கிற்கு சென்றுவிட்டு கடலில் நீராடிய வயோதிபர் ஒருவர் கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.


நேற்றுச் சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் வியாபாரி மூலை, பருத்தித்துறை 15☛

மங்களவின் வரவு செலவுத்திட்டம் வெற்றி

# 99 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் நிறைவேற்றம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் நிலப் பசுமை வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 99 மேலதிக வாக்குகளினால் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. வரவு செவுத்திட்டத்திற்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 56 வாக்குகளும் அளிக்கப்பட்டது. (15ஆம் பக்கம் பார்க்க)



## ஊழல் மோசடி குறித்து பேச நல்லாட்சிக்கு தகுதியில்லை

### அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்திற்கு ஊழல் மோசடிகள் தொடர்பில் பேசுவதற்கோ கடந்த ஆட்சியில் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கோ உரிமையில்லை என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அதன்தலைவர்அநுரகுமார திஸாநாயக்க நேற்று இதனை 15☛

## 2018 – பட்ஜெட்

## த.தே.கூட்டமைப்பு ஆதரவு சிவசக்தி ஆனந்தன் புறக்கணிப்பு

(கொழும்பு)

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. இவ் இறுதி வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பங்கேற்கவில்லை. 15☛



## மனோதத்துவ வைத்தியம்

**மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)**

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**



10.12.2017 முதல் 17.12.2017 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

**தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்** (C-648)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**நாதன் இன்**

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.


# தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவே விவாதம்

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்குவது தொடர்பான நாடாளுமன்ற விவாதம், தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக இடம்பெற்றுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பாதீடு தொடர்பிலான நேற்றைய நாடாளுமன்ற விவாதத்தின்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இதன்மூலம் நாடாளுமன்ற வரப்பிரசாதங்கள் மீறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கூட்டு உடன்படிக்கைக்கு அமைய அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பணிகளை நேற்று சீனா உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்தது.

இந்நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சீனாவின் இலங்கைக்கான தூதுவர் ஆகியோர் தலைமையில் நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதற்கமைய இலங்கைக்கு முதற்கட்டமாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சீனாவினால் வழங்கப்பட்டுளளது. குறித்த தொகை இலங்கைக்கு வழங்கப்படும் பணத்தின் நூற்றில் 30 சதவீதம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.(ம)


## நோயாளர் பராமரிப்பு சேவை

✦ உங்கள் வீடுகளுக்கே வந்து நோயாளர்/முதியோரை பராமரிக்கப்படும்.

✦ எங்கள் இடத்திலேயே உங்கள் நோயாளர்/முதியோரை வைத்துப் பராமரிக்கப்படும்.

**தொடர்பு: 0778730129** (1676)

## MATHS PERSONAL & GROUP CLASSES

தரம் 6 – 11 வரையான கணித வகுப்புகள் (Tamil & English Medium) பிரபல பாடசாலை ஆசிரியரால் வீடு வந்து பிரத்தியேகமாகவும் குழுக்களாகவும் கற்பிக்கப்படும்.

**தொடர்பு: 0774540529** (1671)

## காணி விற்பனைக்கு

தெற்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள முச்சந்திக்கு (அச்செழு நிலாவரை தெற்கு புன்னாலைக்கட்டுவன்) அருகில் 21 பரப்பு விவசாயக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0778449361** (1669)

## பிரத்தியேக வகுப்புக்கள்

A/L 2018, 2019 இணைந்த கணிதம், O/L கணிதம் என்பன தனியாகவோ, குழுவாகவோ கற்பித்துத் தரப்படும். (English/Tamil Medium)

**தொடர்பு: 0778324002** (1668)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் சி.சோ. சண்முகரத்தினம்



கடந்த (11.11.2017) சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி சோமசுந்தரம் சண்முகரத்தினம் அவர்களின் 31-வது தின வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (11.12.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

145/4, பிரப்பங்குளம் ஒழுங்கை,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர் (1674)


## A/L, 3 passes உடன் BIT degree

கொழும்பு பல்கலைக் கழகத்திடமிருந்து

Anyone can register @ www.bit.lk

Semester classes starts on 16.12.2017

By: T.Tharmmendra(BIT,MCSE,MBCS)

BIT 12 years experiences ☎ 0779785796

இதுவரை 77 பேர் Project இற்கு A+ 2nd Upper உட்பட BIT degree பெற்றுள்ளனர்

Registration URL: http://www.bit.lk/node/428 (1670)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு கணனி இயக்குநர், கணக்கு எழுதுநர், சிட்டை தயாரிப்பாளர், பொதி செய்தல், சீல் அடித்தல் போன்ற பணிகளுக்கு யாழ். நகரில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திற்கு உட்பட்ட வசிப்பிடத்தை கொண்ட பெண் பணியாளர்கள் தேவை.

**உடன் தொடர்பு கொள்ளவும்:**

**0212215777, 0779116108** (1676)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 24 . 04 . 1950



உதிர்வு 05 . 11 . 2017

### அமரர் வேலுப்பிள்ளை இராசதுரை

உரும்பிராயை சேர்ந்த வேலுப்பிள்ளை இராசதுரை கடந்த (05.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னார் வேலுப்பிள்ளை – நல்லமுத்து தம்பதியினரின் மகனும், மார்க்கண்டு – ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், கனகாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகளிலும், அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
கோண்டாவில் வீதி, கோப்பாய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர் (1649)


## யமஹா வழங்கும்...

## மாபெரும் வாகன சந்தை - 2017

பழையதை கொடுத்து புதியதை எடுத்துச் செல்லுங்கள் உங்களிடம் உள்ள அனைத்துவிதமான (Yamaha, Honda, Hero, TVS, Bajaj) பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய "யமஹா" மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு உரிமையாளராகுங்கள்.

YAMAHA RAY-ZR



இடம் – நல்லூர் பின் வீதி
[றியோ ஐஸ்கிறீம் அருகில்]

அனேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றும் நடைபெறுகிறது

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்

மாபெரும் விலைக்கழிவு ரூபா 5000/- முதல் 50000/- வரை

தொடர்புகட்கு :-
0776623824 / 021 222 4040
டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (1653)

# 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும்

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வித்துறையில் எந்தவொரு நியமனமும் அரசியல் அடிப்படையில் வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டிய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு விரைவில் தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.



பத்தரமுல்ல அப்பேகமவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய பாடசாலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது ஆயிரத்து 288 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து கல்வி வலயங்களிலும் மேலதிக ஆசிரியர்களுக்கான அமைப்பொன்று வழங்கப்படும்.

இதேபோன்று கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வெற்றிடங்களும் வருடந்தோறும் வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் கல்வித்துறையில் எந்தவொரு நியமனமும் அரசியல் அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (இ)

## அம்பாந்தோட்டை துறைமுகம் உத்தியோகபூர்வமாக கையளிப்பு




(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை உத்தியோகபூர்வமாக குத்தகைக்கு விடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது, சீனாவின் தலைமை நிறுவனம் ஒன்று துறைமுகத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டதுடன் இலங்கைக்கு குத்தகைப் பணத்தின் முதலாவது கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டதற்குப் பின் இந்தப் பரிமாற்றல் நிகழ்வு நடைபெற்றது.

99 வருட குத்தகை அடிப்படையில் கைமாற்றப்பட்டிருக்கும் துறைமுகத்துக்காக மொத்தம் 1.12 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது.

இதன் முதல் தவணைக் கொடுப்பனவான 293 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நேற்று இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டது.

இதனிடையே அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பணியாற்றுவோரின் உறவினர்கள் துறைமுக வளாகத்திற்கு எதிரே நின்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

துறைமுகத்தில் பணியாற்றும் தமது உறவினர்களின் தொழிலுக்கு உத்தரவாதம் வழங்கக் கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (இ)

## பிரதமர் 850 பிக்குகளுக்கு பணம் வழங்கியது தவறு

### பெங்கமுவ தேரர் எதிர்ப்பு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 850 பிக்குகளை அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களுக்கு பணம் வழங்கியது தவறான ஒரு நடவடிக்கை என தேசிய உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் தேர்தல் ஒன்றை எதிர்நோக்கியுள்ள நிலையில் இவ்வாறு தேரர்களை அழைத்து அவசரமாக அரசாங்கம் ஏன் நிதி வழங்கியது. இதற்காக 40 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

இந்த நிதி வழங்கல் முறையற்ற நடவடிக்கை அல்லவா? எனவும் நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில் தேரர் கூறியுள்ளார்.

மக்கள் செல்வாக்கு இல்லாத அரசாங்கம் விகாரைகள் மூலம் மக்களின் நல்ல அபிப்பிராயத்தைச் சம்பாதிக்க கனவு காண்கின்றது எனவும் தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ)

## வெளிநாட்டு பணியாளர்களுக்கு வரி இல்லை

(கொழும்பு)



வெளிநாட்டு பணியாளர்களிடம் வரி அறிவிடப்படவுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சர்ச்சைக்குரிய முறையில் 1 வீத வரி விதிக்கப்படுவதாக வெளியாகிய தகவல் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கமைய 2018ஆம் ஆண்டு வரவு- செலவு திட்ட யோசனையில் வெளிநாட்டு பணியாளர்களுக்கு எவ்வித வரியும் விதிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான போலியான தகவல்களை வழங்கி மக்களை திசை திருப்ப வேண்டாம் என அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## புகையிரத சேவைக்கு சமுகமளிக்காதவர்கள் பணியிலிருந்து விலகியவர்களாக கருதப்படுவர்

### அமைச்சர் நிமால் எச்சரிக்கை

(கொழும்பு)

புகையிரத சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பணியில் இருந்து விலகியவர்களாக கருதப்படுவர் என போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எச்சரித்துள்ளார்.


புகையிரத சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்று போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்றது. இதனையடுத்து இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

புகையிரத சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றி ஜனாதிபதியின் கையொப்பத்துடன் நேற்று முன்தினம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வேலையற்ற பட்டதாரிகள் மனிதச்சங்கிலி போராட்டம்

### தேர்தலை புறக்கணிக்கத் தீர்மானம்








அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதில் அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் வேலையற்ற பட்டதாரிகளின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும், மனிதச்சங்கிலிப் போராட்டமும் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. காரைதீவு சுற்று வட்டத்திற்கு அருகாமையில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இதன் போது அகில இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சங்கைக்குரிய தன்னே ஆனந்த தேரர் மற்றும் அம்பாறை முஸ்லிம் வேலையற்ற பட்டதாரிகளின் தலைவர் ஏ.ஜசீர் ஆகியோர் அடங்கலாக பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அகில இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் தன்னே ஆனந்த தேரர், எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் பட்டதாரிகள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் அவ்வாறு வழங்காவிட்டால் நாம் தேர்தலை முற்றிலும் புறக்கணிப்போம். மத்திய அரசும் மாகாண அரசும் விரைவில் எமக்கு உரிய தீர்மானத்தைப் பெற்றுத் தர வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ)



## ஹமில்டன் டெஸ்ட்

# கேப்ரியல், கமின்ஸ் அசத்தலான பந்துவீச்சு முதல் நாள் நிறைவில் நியூசிலாந்து 7/286

ஹமில்டன் செடான் பார்க்கில் நேற்று ஆரம்பமான நியூஸிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

நியூஸிலாந்து அணியில் ராவல் 84, கொலின் டி கிராண்ட் ஹோம் 58 ஓட்டங்களை எடுத்தனர். பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கேப்ரியல் 3, கமின்ஸ் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

ஆட்டநேர நிறைவில் பிளண்டெல் 12, நீல் வோக்னர் ஒரு ஓட்டத்துடன் களத்தில் இருந்தனர்.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

கொலின் டி கிராண்ட்ஹோம் 63 பந்துகளில் 5 பவுண்டரிகள் 4 சிக்ஸர்களுடன் 58 ஓட்டங்களை அதிரடி பாணியில் குவித்தார். ராவல் மிக அருமையாக நிதானத்தைக் கடைப்பிடித்து ஆடி 15 பவுண்டரிகளுடன் 84 ஓட்டங்கள் எடுத்தார்.

முதல் புதிய பந்தில் பவுண்டரிகளை வழங்கிய ஷனான் கேப்ரியல், 2ஆவது புதிய பந்தில் 76 ஓட்டங்கள் கூட்டணி அமைத்த கிராண்ட்ஹோம், சாண்ட்னர் கூட்டணியை பெவிலியன் அனுப்பினார்.

ஆரம்ப கட்டத்தில் நியூஸிலாந்து 154/1 என்று நல்ல நிலையில் இருந்தது. அதன் பிறகு கேப்ரியல், கிமார் ரோச், மிகுவெல் கமின்ஸ், ரேமன் ரெய்ஃப் ஆகியோர் புகுந்து நியூஸிலாந்தின் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அறிமுக இடது கை வேகப்பந்து வீச்சாளர் ரேமன் ரெய்ஃபர் சீரான முறையில் கட்டுக்கோப்புடன் வீசி 17 ஓவர்களில் 8 மெய்டன்களுடன் 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

ரொம் லேதம், கமின்ஸ் பந்தை புல் ஆடும் முயற்சியில் கிளவ்வில் பட்டு பிடியானது. கேன் வில்லியம்ஸனுக்கு புதிய வீச்சாளர் ரெய்ஃபர் சில இறுக்கமான ஓவர்களை வீச 96 பந்துகளில் 43 ஓட்டங்களை எடுத்த கேன் வில்லியம்ஸன் கமின்சின் லெக் திசை பந்தை விக்கெட் காப்பாளர் டவ்ரிச்சிடம் பிடிகொடுத்து வெளியேறினார். ராவலுக்கு கேப்ரியல் ஆக்ரோஷமான பந்து ஒன்றை வீச அவர் ஆடியே ஆக வேண்டிய நிலை ஏற்பட்டது, எட்ஜ் ஆனது. றோஸ் ரெய்லர் 16 ஓட்டங்களில் ரோச்சின் சற்றே கூடுதலாக எழும்பிய பந்தை கட் செய்ய முயன்று விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்தார்.

ஹென்றி நிகோல்ஸ் 13 ஓட்டங்களில் அறிமுக இடது கை வேகப்பந்து வீச்சாளர் ரெய்ஃபரிடம் எல்.பி.ஆனார். வெளியே வீசிக்கொண்டேயிருந்தவர் ஒரு பந்தை உள்ளே கொண்டு வந்தார். சாண்ட்னர் 2 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 24 ஓட்டங்களுடன் நன்றாக ஆடி வந்த நிலையில் கேப்ரியலின் நேர் பந்தில் பந்தைக் கோட்டை விட்டு மிடில் ஸ்ரம்பை இழந்தார்.

நியூஸிலாந்து அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 286 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

# திசரவின் தலைமையில் புத்துயிர் பெறுமா இலங்கை?

## முதல் போட்டியில் இந்தியாவுடன் தரம்சாலாவில் மோதல்

மந்தமான டெஸ்டில் இருந்து அனல் பறக்கும் ஒருநாள் போட்டிக்கு களம் மாறுகிறது. டில்லியில் காற்று மாசு பிரச்சினையால் கதிகலங்கிய வீரர்கள், இம்முறை இமய மலையின் பின்னணியில் சுத்தமான காற்றை சுவாசிக்கலாம். 'சரவெடியாய்' ஓட்டங்கள் சேர்க்கலாம். புது அணித் தலைவர் ரோகித் சர்மா தலைமையில் இன்று இந்திய அணி சாதிக்கும் பட்சத்தில், தொடரை வெற்றியுடன் தொடங்கலாம்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, டெஸ்ட் தொடரை பறிகொடுத்தது. இந்நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி இன்று இமாச்சலப் பிரதேசத்தின் தரம்சாலாவில் நடக்கவுள்ளது. இமயமலையின் பின்னணியில் அமைந்துள்ள இந்த மைதானத்தில் விளையாடுவதே ஒரு தனிசுகம் தான்.

ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்ட நிலையில் இந்திய அணியின தலைமைப் பொறுப்பை ரோகித் சர்மா ஏற்கிறார். இவர், தவானுடன் சேர்ந்து ஆரம்பம் கொடுக்கலாம். இந்த ஆண்டில் 18 ஒரு நாள் போட்டியில் 5 சதம் விளாசி அபார 'போர்மில்' உள்ளார் ரோகித். காய்ச்சலால் அவதிப்படும் தவான் விலகினால், ரகானே ஆரம்பம் தர வாய்ப்புள்ளது. ரகானேவின் 'போர்ம்' தான் கவலை தருகிறது.

**மாற்றம் தருவாரா தோனி**

டினேஷ்கார்த்திக், தோனி, ஜாதவ் 'நடுத்தர வரிசையில்' வலு சேர்க்க வேண்டும். தோனியை பொறுத்தவரை தரம்சாலா மைதானத்தில் இதுவரை 3 ஒரு நாள் போட்டியில் அதிகபட்சமாக 21 ஓட்டம்தான் எடுத்துள்ளார். இந்த ஏமாற்றத்தில் இன்று மாற்றம ஏற்படலாம். ஹோலி இல்லாத நிலையில், தோனியின் அனுபவம் ரோகித்திற்கு உதவும். ஹர்திக் பாண்ட்யாவின் 'சகலதுறை' பங்களிப்பு நிச்சயம் தேவை.

**குல்தீப் அசத்துவாரா?**

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் இங்கு நடந்த டெஸ்டில் 'சைனாமேன்' சுழல் பந்து வீச்சாளர் குல்தீப் (4 விக்.,) அசத்தினார். இவருக்கு இன்றைய போட்டியில் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. அஷ்வின், ஜடேஜா இல்லாத நிலையில், சகால் அல்லது அக்சருக்கு இடம் கிடைக்கலாம். 'வேகத்தில்' பும்ரா, புவனேஷ்வர் கூட்டணி மீண்டும் அசத்த காத்திருக்கிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கை மண்ணில் நடந்த ஒரு நாள் தொடரை இந்தியா 5-0 என கைப்பற்றியது. இதற்கு பதிலடி தர வேண்டிய நெருக்கடியில் இலங்கை உள்ளது. உபுல் தரங்காவுக்குப்பதில் இம்முறை திசரா பெரேரா தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். குசல் பெரேரா, அசேல குணரத்ன உள்ளிட்ட வீரர்களைத்தான் அதிகம் நம்ப வேண்டும். 'சகலதுறை வீரர்' மத்யூஸ் இன்று பந்துவீச்சிலும் கவனம் செலுத்த உள்ளார். வேகப்பந்துவீச் சில் லக்மல், சமீரா, நுவன் பிரதீப் மிரட்ட முயற்சிக்கலாம்.

**வருகிறார் வாஷிங்டன் சுந்தர்**

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் அரிய வாய்ப்பு தமிழக 'சகலதுறை வீரர்' வாஷிங்டன் சுந்தருக்கு கிடைத்துள்ளது. நேற்று நடந்த பயிற்சியில் கேதர் ஜாதவ், வலது தொடை பின்பகுதியில் காயம அடைந்தார். இதனையடுத்து தொடரிலிருந்து விலகினார். இவருக்குப்பதில், இந்திய அணியில் வாஷிங்டன் சுந்தர் சேர்க்கப்பட்டுள்ளார். இவர், இலங்கை அணிக்கு எதிராக வரும் 20ல் தொடங்கவுள்ள 'ரி20' தொடரிலும் இடம்பெற்றுள்ளார்.

**இதுவரை...**

இரு அணிகளும் இதுவரை 155 ஒரு நாள் போட்டியில் விளையாடி உள்ளன. இதில் இந்தியா 88 போட்டியில் வென்றுள்ளது. இலங்கை அணிக்கு 55 வெற்றி மட்டுமே கிடைத்துள்ளது. ஒரு போட்டி சமனிலையானது. 11 போட்டிக்கு முடிவு இல்லை. தரம்சாலா மைதானத்தில் இரு அணிகளும் முதல் முறையாக மோத உள்ளன.

**இந்தியா ஆதிக்கம்**

இரு அணிகளும் இதுவரை 17 ஒரு நாள் தொடரில் பங்கேற்றுள்ளன. இதில் இந்தியா 12, இலங்கை 2 முறை வென்றுள்ளன. மூன்று தொடர் சமனிலையானது.

**மழை வருமா?**

போட்டி நடக்கும் தரம்சாலா நகரின் இன்றைய வெப்பநிலையை பொறுத்தவரை அதிகபட்சம்18, குறைந்தபட்சம் 9 டிகிரி செல்சியசாக இருக்கும். மழை வர 20 சதவீதம் வாய்ப்புள்ளது.

**ஆடுகளம் எப்படி**

தரம்சாலா மைதானத்தின் ஆடுகளம் 'துடுப்பாட்டத்துக்கு சாதகமாக அமையலாம். மாலை நேரத்தில் இங்கு பனிப்பொழிவு காணபபடும் என்பதால், நாணயச் சுழற்சி முக்கிய பங்கு வகிக்கும்.

**ஐ.பி.எல்., அனுபவம் கைகொடுக்குமா?**

இந்திய அணியின் ரோகித் ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணியை வழி நடத்துகிறார். இத்தொடரில் மூன்று முறை (2013, 15, 17) கிண்ணம் வென்று கொடுத்துள்ளார். இந்த அனுபவம் இன்று இவருக்கு உதவியாக இருக்கும். இது



குறித்து ரோகித் கூறுகையில்," ஒரு நாள் மற்றும் 'ரி20' என போட்டியில் தான் வித்தியாசம் உள்ளது. மற்றபடி, எனது தலைமைப் பதவி இரண்டிலும் ஒன்றாகவே இருக்கும். ஐ.பி.எல்., போட்டியை சர்வதேச போட்டியுடன் ஒப்பிடுகையில் நெருக்கடி அதிகமாகத்தான் இருக்கும்," என்றார்.

# சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு யாழில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, கவனயீர்ப்பு போராடடம் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட செயலக முன்றலில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவு களால் முன்னெடுக்கப்பட வுள்ள இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக கப்பட்டவர்களின் உறவு கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு மாவட்டச்செயலக முன்றலில் ஒன்றுகூடி பின்னர் பேரணியாக யாழ் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள ஐநா அலுவலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான விபரங்களை வெளியிடக்கோரி கடந்த பல மாதங்களாக வடக்கு கிழக்கு மாவட்டங்களில் தொடர் போராட்டம் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இவ் விடயம் தொடர்பாக அரசு பாராமுகமாக இருப்பதால் சர்வதேசம் இதை கவனத்தில் கொள்ள வேண்டும் என கோரி இந்த போராட்டத்தை முன்னெடுகவுள்ளதாக உறவுகள் அறிவித்துள்ளனர். (ம-9)


# மரண அறிவித்தல்

## நாகநாதி கணபதிப்பிள்ளை (கணபதி)



10/1 B.A தம்பிலேன், வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி கணபதிப்பிள்ளை நேற்று (09.12.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி - பூபதி தம்பதியரின் அன்பு மகனும் முத்துத்தம்பி - காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சூரியகலாவின் அன்புக் கணவரும் நிரோசனா, டிபோசன், நிதுஷா, கேதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செல்லத்துரை, இராமு ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2017) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

10/1 B.A தம்பிலேன்,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
(C-655)

# போதையில் சாரதி; இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கடுவல - பத்தரமுல்ல பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் பாதசாரிகள் இருவர் பலியாகினர். இச்சம்பவம் மேற்படி வீதி யின் எட்டாவது மைல்கல்லருகே இடம்பெற்றது.

பத்தரமுல்ல நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டியொன்று, பாதையின் ஓரத்தில் சென்றுகொண்டிருந்த பாதசாரிகள் மீது மோதியதிலேயே இவ்வனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

படுகாயமடைந்த இருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்வழியிலேயே உயிரிழந்தனர்.

விபத்தையடுத்து பொலிஸார் நடத்திய விசாரணையில், ஜீப்பின் சாரதி மது அருந்தியிருந்தது தெரிய வந்துள்ளது. (இ)

# வீதியில் ஆணின் சடலம்! கொலையா? விபத்தா? குழப்பத்தில் பொலிஸார்

(கொழும்பு)

குருநாகல் - தம்புள்ளை வீதியில் தலகிரியாகம பகுதியில் பிரதான பாதைக்கு அருகில் கடும் காயங்களுடன் நபரொருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் யார் என்பது இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், 25 -30 வயது மதிக்கத்தக்க இளைஞர் எனவும் அவரது தலை, முகம் மற்றும் பாதங்களில் பாரிய காயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் விபத்துக்குள்ளானாரா? அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்ற கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கலேவலை பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



## சின்னையா நடராசா

ஆயிரம் "ராஜாக்கள்"
அகிலத்தில் மலர்ந்தாலும்
ஆனந்த "நடராஜனுக்கு"
அது நிகராகுமா?

(சி-641)

விநோபா பாலர் பகல் பராமரிப்பு இல்லம்,
விநோபா நகர், கச்சாய்.

துயருறும்
நண்பர் குழாம்

# மரண அறிவித்தல்

## திருமதி. உமாதேவி சிவசங்கரக்குருக்கள்



கந்தரோடையை பிறப்பிடமாகவும் தாவடிப்பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாதேவி சிவசங்கரக்குருக்கள் 09.12.2017 நேற்று சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சோமேஸ்வரசர்மா, காலஞ்சென்ற விமலாதேவி தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமசிவக் குருக்கள், அமிர்தவல்லி அம்மா ஆகியோரின் மருமகளும் சிவஸ்ரீ சிவசங்கரக் குருக்கள் (பிரதமகுரு, தாவடிப் பிள்ளையார் கோயில்) அவர்களின் அன்பு மனைவியும் சிவஸ்ரீ சி.கெஜரூபக்குருக்கள், சோபனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் வாகீஸ்வரக் குருக்கள், உஷாதேவி, சரஸ்வதிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காயத்திரி, சிவஸ்ரீ ஜெயக்குமார் குருக்கள், சிவஸ்ரீ கீதச்சந்திரக் குருக்கள், சிவஸ்ரீ இரத்தினேஸ்வர குருக்கள், கௌரி, ரவீந்திரசர்மா, ஈஸ்வரி, சிவஸ்ரீ இராஜேஸ்வரக்குருக்கள், சித்ரா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.12.2017 இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி.

(1660)

தகவல்,
குடும்பத்தினர்.

# வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 11.11.2017 சனிக்கிழமை
அன்று இறைபதம் அடைந்த
எமது அன்புத் தந்தை

அமரர் **தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (இந்துமதி)**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (10.12.2017) காலை 8.00 மணியளவில் சாட்டி வெள்ளைக்கடற்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.12.2017 நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

(1663)

இருபாலைச் சந்தி, பேச்சியம்மன் கோயிலடி.
தொ.இல: 077 548 8919

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இராசி பலன்

10.12.2017
கார்த்திகை 24, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
சப்தமி முற்பகல் 08.02 மணிவரை
அவிட்டம் முற்பகல் 08.03 மணிவரை
பூராம் முன்னிரவு 11.29 மணிவரை
சுபநேரம் 9.19-10.49 மணிவரை
இராகுகாலம் 4.49-6.19 மணிவரை
மனித உரிமைகள் நாள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம், அவிட்டம்<br>பின்னிரவு 5 மணிக்கு<br>சனி-சந் | | ராகு |
| கேது | | | சந் |
| | சூரி, சுக்<br>சனி, புத | குரு,<br>செவ் | |

**மேடம்:** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு மகத்துவம் தரும்.

**இடபம்:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், விருந்தினர் வருகையுண்டு. எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்:** புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், நல்லவர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**துலாம்:** உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**தனுசு:** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியத்தில் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், நண்பர்களின் சந்திப்புகள் கைகூடும், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, போசன நன்மையுண்டு.


**மீனம்:** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தினரிடையே ஒற்றுமை மேலோங்கும் நாள், எடுத்த காலத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.






வலிகாமம் வலய பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடை பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட் டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் , வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாணவர்களுக்கான காப்புறுதித்திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாணவர்களுக்கான " சுரக்ஷா" காப்புறுதித்திட்டத்தின் அறிமுக நிகழ்வுகள் பல பாடசாலைகளிலும் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மற்றும் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் மற்றும் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்ற காப்புறுதித் திட்ட அறிமுக நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டார்.

கடந்த வியாழக்கிழமை காலை 8 மணியளவில் யாழ்.இந்துக்கல்லூரியிலும் காலை 9 மணியளவில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்திலும் முற்பகல் 11 மணியளவில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்திலும் நடந்த காப்புறுதித்திட்ட அறிமுக நிகழ்வுகளில் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில் வடமாகாணசபை உறுப்பினருடன் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள சுமார் 45 இலட்சம் பாடசாலை மாணவர்கள் பயனடைய உள்ளதுடன், மாணவர்களுக்கோ அல்லது, அவர்களின் பெற்றோர்களுக்கோ ஆபத்துகளோ, உயிரிழப்புகளோ ஏற்படும் சந்தர்ப்பத்தில் உரிய இழப்பீடுகள் வழங்கும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சரஸ்வதி முன்பள்ளியின் மழலைகள் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த மழலைகள் கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முன்பள்ளி அரங்கில்முன்பள்ளிமுகாமைத்துவ குழுத்தலைவர் சு.வைகுந்தநாதன்தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.செவ்வேள், சிறப்பு விருந்தினராக கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ப்.கௌரி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆசிரியை ம.குயிந்தா, கல்வியங்காடு ஜே/259 கிராம உத்தியோகத்தர் சி.சுபாகரன் மற்றும் சரஸ்வதி முன்பள்ளி பழைய மாணவனும் கிளிநொச்சி ஹற்றன் நஷனல் வங்கி உத்தியோகத்தருமான எஸ்.துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

# காரைநகரில் கலாசாரப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும், கலாசாரப் பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்தும்- 2017 ஆம்ஆண்டுக்கான பிரதேச கலாசாரப் பெருவிழா நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபை ஆகியவற்றின் தலைவருமான ஈ. தயாரூபன் தலைமையில் இடம்பெறும்.

இப் பெருவிழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம், சிறப்பு விருந்தினராக காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி க. இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் புதுக்குடியிருப்பு கைவேலி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட 8 மாணவர்களுக்கு இலவசமாக துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் ஆச்சிரமத்தில் வைத்து வழங்கப் பட்டன.




# ஆயுத முனையில் குடும்பப் பெண்ணை அச்சுறுத்திய இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வீடொன்றில் புகுந்து ஆயுத முனையில் குடும்பப் பெண்ணை அச்சுறுத்திய இரு இளைஞர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் கொக்குவில் பகுதியிலுள்ள வீடொன்றில் ஆயுதங்களுடன் நுழைந்த இளைஞர்கள் குறித்த வீட்டு குடும்பத்தலைவர்எங்கே எனக் கேட்டு குடும்பப் பெண்ணை அச்சுறுத்திச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு தகவலளிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்து சந்தேகத்தின் பேரில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் பத்துப்பேரை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-10)

# சிவமயானந்தஜி மகராஜ் ஆசியுரை

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண நலன்புரி நிலையத்திற்கு நாளை திங்கட்கிழமை மாலை 4.45 மணியளவில் கொல்கத்தா வேலூர் மடம் இராமகிருஷ்ண மடத்தின் துணைத்தலைவர் பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி சிவமயானந்தஜி மகராஜ் வருகை தந்து ஆசியுரையாற்றவுள்ளார். (இ-10)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பண்டாட்டுப் பெருவிழா மருதங்கேணி பிரதேச செயலர் க.கனேஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

(படங்கள்:-தும்பளை செய்தியாளர்)

# ஒரு வருடத்தில் ஒன்றே முக்கால் இலட்சம் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் கடந்த ஓராண்டு காலப் பகுதியில் மட்டும் ஒரு இலட்சத்து 76,248 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்ப தாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் மேல் மாகாணத் தில் இருந்தே அதிக எண்ணிக் கையிலான நோயாளிகள் அடையா ளம் காணப்பட்டிருப்பதாகவும் மொத்த நோயா ளர்களின் எண்ணிக்கையில் அது 42.93 சதவீதமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப்பட்டதாகவும் கடந்த நவம்பர் மாதத்தில் மட்டும் 8 ஆயிரத்து 340 நோயாளர்கள் இனங் காணப்பட்டிருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# பொலித்தீன், பிளாஸ்ரிக் இறக்குமதிகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் தொடர்பில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புக்களை முன்னெடுக்கப் போவதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவித்துள்ளது. மேலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் இறக்குமதிகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகளை தற்போது ஆரம்பித்துள்ளதாகவும் அச்சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ)


## வீட்டுப்பணிப்பெண் தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (1661)

தொலைபேசி இலக்கம்:
077 354 8552

## வைத்தியம்

நோய் எதுவாயினும் தீர்வு உண்டு. தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டுப் பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடற்பருமன் குறைத்தல் (வயிறு/ மார்பு/கை) அல்லது கூட்டுதல், ஆண்மைக் குறைபாடுகள், குழந்தை யின்மை போன்றவற் றிற்கு மருந்தின்றி பக்கவிளை வின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும்.

தொடர்பு: (ACU)Dr.Sanker
T.P: 077 035 7307

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.
தர்மகுலசிங்கம் கோகுலதாசன்

யாழ்.
பல்கலைக்கழகத்தின்
33ஆவது பட்டமளிப்பு
விழாவில் BBA பட்டம் பெற்ற
கோகுலன் அவர்களை
மனதார பாராட்டி அவர்
மென்மேலும் பல
பட்டங்களைப் பெற்று
நீடூழி வாழ
வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்;
Cousin Family

Address: Bavi Micro Smart, Hospital Road, Manthikai.

(1660)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.
ஹாசினி மகிந்தன்

யாழ்.
பல்கலைக்கழகத்தின்
33ஆவது பட்டமளிப்பு
விழாவில் BBA பட்டம் பெற்ற
ஹாசினி அவர்களை
மனதார பாராட்டி அவர்
மென்மேலும் பல
பட்டங்களைப் பெற்று
நீடூழி வாழ
வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்,
Cousin Family

Address: Bavi Micro Smart, Hospital Road, Manthikai.

(1660)

## FLORENCE NIGHHTINGAALE
School of Nursing

புளோரன்ஸ் நைற்றிங் கேள் தாதியர் பாடசாலை



படித்துவிட்டு ஒரு கௌரவமான தொழில் ஒன்றை எதிர்பார்க் கின்றீர்களா? ஒருவருட தாதியர் பயிற்சிப் பாடநெறி ஊடாக உங் கள் கனவை நனவாக்கி கொள்ளவும் நிரந்தர தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளவும் முடியும் என நாங்கள் உறுதியளிக்கின் றோம்.

- ஒரு வருட பயிற்சிப் பாடநெறி
- 03 மாத தனியார் வைத்தியசாலையில் முழுமையான பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலை வாய்ப்புக்கள்

**நீங்கள் எம்முடன் இணைவதற்கான தகைமைகள்**

- O/L - 6 பாடம் சித்தி
- வயது 17-35 வரை

அரச வைத்தியசாலையில் உள்ள வைத்தியர், சிரேஷ்ட தாதியர் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படும்.
பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

முகவரி:
கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம். (1664)

மேலதிக தொடர்புகளுக்கு :
077 718 6438

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 45 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L/சுவிஸ் PR<br>தொ.இ: B/8029 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 11 செவ் 8 இல்<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/8085 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 175CM<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/8030 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:HND IT/ அரசதொழில்<br>தொ.இ: G/8087 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8031 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 30 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/தாதி பெல்ஜியம்<br>தொ.இ: G/8091 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 60 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:NDT, BSc பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/8033 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8092 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விபரங்களைத் திரட்டும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விபரங்களைத் திரட்டும் பணிகளை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு ஆரம்பித்துள்ளது.

குறித்த விபரங்களைத் திரட்டும் பணிகள் அரசாங்க அதிபர்கள் ஊடாக தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம் பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்துக்கு தகவல்களை திரட்டும் நோக்கில், இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை கடந்த மாதம் சந்தித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களை விநியோகித்து, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தகவல்களை சேகரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தமைக்கு அமைய குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அறநெறிப் பாடசாலையின் 6 ஆவது கலைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயத்தின் ஏற்பாட்டில் சரஸ்வதி முன்பள்ளியின் 32 ஆவதுமற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 6 ஆவது கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கொக்குவில் கிழக்கிலுள்ள பொற்பதி அறிவாலயத்தின் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கே. சுரேஸ்குமார் வாசுகி தம்பதியினர், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.நச்சினார்க்கினியன் சரோஜா தேவி தம்பதியினர், யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நல்லூர் தொகுதி அமைப்பாளர் கே. குகானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10)

## அறநெறியை கட்டாயமாக்க அரசாங்கம் நடவடிக்கை!

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டளவில் பாசல என்ற அறநெறிக் கல்வி கட்டாயமாக்கப்படும் என வன ஜீவராசிகள் அமைச்சரும் புத்த சாசன அமைச்சருமான காமினி விக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற புத்தசாசன அமைச்சிற்கான வரவு- செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


பௌத்த கோட்பாடு சிந்தனைகளை உலகில் முன்னெடுக்கும் கேந்திர நிலையமாக இலங்கையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.

கொள்கையை மதிக்கும் சமூகமொன்றை உருவாக்க முடியாவிட்டால் எமது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தியான வகுப்பொன்றை ஏற்படுத்த வேண்டும்.

பௌத்த கொள்கையை மதிக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்ப பல திட்டங்கள் ஆரம்பிக்கப்படுள்ளன என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ)

## மற்றொரு திருமணம் பற்றியே பேசினோம் மைத்திரியுடனான சந்திப்பு குறித்து மகிந்த



(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு எதிரணி இணைந்து போட்டியிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவின் மகனின் திருமண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியிருந்த போதிலும், அரசியல் இணைவு பற்றி அவருடன் எந்தப் பேச்சும் நடத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

"நாங்கள் அரசியல் பேசவில்லை. தாம் மற்றொரு திருமணத்தில் பங்கேற்க வேண்டியிருப்பதாக மைத்திரிபால சிறிசேன என்னிடம் கூறினார்.

நானும் கூட இன்னொரு திருமணத்தில் பங்கேற்க வேண்டியிருப்பதாக கூறினேன்." என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, பொதுஜன முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கூட்டு எதிரணி தனித்துப் போட்டியிடும் முடிவு இறுதியானது என்றும், வேட்புமனுக்களை இறுதி செய்வதில் தாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ)

## குப்பை அகற்றும் தொழில்முறைக்கு கொரிய வங்கி 14 மில்லியன் கடனுதவி

(கொழும்பு)

குப்பை அகற்றும் தொழில் முறைக்கு உதவும் வகையில், கொரியாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி 14 மில்லியன் டொலர் பெறுமதியான கடன் உதவிகளை இலங்கைக்கு வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

இத் தகவலை, இலங்கைக்கான கொரியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், அனைத்து மாகாணங்களுக்கும் 190 குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

திடக் கழிவுகளை திறமையான முறையில் அகற்றுவதே இத் திட்டத்தின் பிரதான நோக்கம். அதன்படி, வழங்கப்படவுள்ள வாகனங்கள் அனைத்தும் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில் பாரியளவு குப்பைகளை திறமையான முறையில் அகற்றும் வல்லமை கொண்டன என்று கூறப்படுகிறது.

வட்டியில்லாக் கடன் முறையில் வழங்கப்படவுள்ள இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த மொத்தமாக நாற்பது ஆண்டு கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. (இ)

## ஏற்றுமதி கைத்தொழிலை மேம்படுத்த நடவடிக்கை!

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்டத்துறை உள்ளிட்ட ஏற்றுமதி கைத்தொழிலுக்கு முன்னுரிமையளித்து அவற்றுக்குத் தேவையான வளங்களை குறைவின்றி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு தாமரைத் தடாகம் கலையரங்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தேசிய தேயிலை விருது விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் தேயிலை கைத்தொழில் துறைக்கு 150 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு தேயிலை கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைப் பலப்படுத்தும் நோக்குடன் பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சினால் முதன்முறையாக இவ்விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி " உயர்ந்த நியமங்கள் மற்றும் தரத்துடன் ஏற்றுமதிக்கு பொருத்தமானவற்றை உற்பத்தி செய்யும் போது அதிக இலாபம் சம்பாதிக்கும் நோக்குடன் சில வியாபாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கை காரணமாக எமது உற்பத்திகளுக்கான சர்வதேச சந்தையில் அங்கீகாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

வெளிநாட்டு சொத்துக்கள் மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தை பலப்படுத்தும் போது பெருந்தோட்டத்துறை உள்ளிட்ட ஏற்றுமதி கைத்தொழிலுக்கு முன்னுரிமையளித்து அவற்றுக்குத் தேவையான வளங்களைக் குறைவின்றி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், கடந்த இரண்டு வருடங்களைப் போன்று இவ்வருட வரவு-செலவுத்திட்டத்திலும் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது " எனத் தெரிவித்துள்ளார். (இ)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 140 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 350 | 400 | 400 |
| தக்காளி | 120 | 100 | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 60 | 40 | 60 |
| கோவா | 140 | 160 | 140 | 160 | 120 |
| கரட் | 180 | 250 | 200 | 200 | 100 |
| பூசணி | 80 | 80 | 70 | 80 | 60 |
| புடோல் | 120 | 140 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400 | 500 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 140 | 200 | 140 |
| பாகற்காய் | 250 | 250 | 200 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 120 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 250 | 150 | 140 | 200 | 300 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 250 | 50 |
| பீற்றூட் | 180 | 150 | 200 | 200 | 140 |
| குடைமிளகாய் | 450 | 500 | 300 | 320 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 180 | 300 | 240 | 200 | - |
| கத்தரிநம்புள்ள | 80 | 50 | 140 | 100 | 120 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 100 | 50 | 50 |
| தேசிக்காய் | 60 | 40 | 80 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 90 | 60-100 | 100 |
| இராசவள்ளி | 450 | 600 | — | 300 | - |
| வெங்காயப்பூ | 400 | - | — | - | - |
| முள்ளங்கி | 80 | - | 100 | 120 | 40 |
| பொன்னாங்காணி | 50 | - | 60 | 40 | 40 |
| வல்லாரை | 30 | - | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | - | 100 | 120 | 120 |

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 19.12.2017-28.03.2020

# கண்டகச் சனியின் ஆதிக்கம்; கடவுள் அருள்தான் சாதிக்கும்!



சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தங்கள் இயல்புகளை மாற்றிக் கொள்ளும் மிதுன ராசி வாசகர்களே!

அனுபவத்தின் வாயிலாக அனைவரையும் எளிதில் பழக்கம் வைத்துக் கொள்ளும் உங்களுக்கு இதுவரை 6இல் சஞ்சரித்து வந்த சனிபகவான் இனி 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இந்த சப்தம ஸ்தான சனியை 'கண்டகச் சனி' என்று அழைப்பது வழக்கம்.

கண்டகச் சனி என்றாலே நல்லது நடக்காது என்று முடிவு கட்டி விடக் கூடாது. விதி விலக்குகளும் ஜோதிடத்தில் இருக்கின்றது. கெடுபலன்கள் மாறி நற்பலன்கள் நடைபெற வேண்டுமானால் உங்கள் இராசி நாதனுக்கு சனி நட்புக் கிரகமாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி ஓரளவு நற்பலன்களைக் கொடுக்கும்.

ஏழாமிடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் பொழுது நேரிடையாக உங்கள் இராசியைப் பார்க்கப் போகின்றார். எனவே ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். எதைச் செய்தாலும் பதற்றமின்றி நிதானத்துடன் செய்வது நல்லது.

விரயங்கள் அதிகரிக்கும் நேரமிது. பொதுவாக இதுபோன்ற கண்டகச் சனியின் ஆதிக்க காலத்தில் வாக்குறுதி கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. விரோதிகளை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதும் உங்கள் புத்திசாலித்தனமாகும்.

**இனிய பலன்தருமா?**
**ஏழாமிடத்துச் சனி!**

சனி பகவான் 4ஆம் இடத்திலோ, 7ஆம் இடத்திலோ சஞ்சரித்தால் திடீர் திடீரென நட்பு பகையாகும். விரோதிகளின் கூட்டம் பெருகிக் கொண்டே போகும். குடும்பத்திலும் சரி, வெளிவட்டாரத்திலும் சரி தேவையற்ற பிரச்சினைகள், கருத்து வேறுபாடுகள் வரலாம். முன்கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளைக் கூட நழுவ விடுவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

மற்றவர்களுக்காகவே உங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்துகொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். வரும் வருமானத்தைக் கணக்கிட்டு அதை எந்தெந்த வழிகளில் செலவு செய்யலாம் என்று யோசித்து முடிவெடுத்து செயலாற்றுங்கள். நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். குழந்தைகளுக்குரிய கடன், கடமைகளை முறையாகச் செய்வதன் மூலம் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளலாம்.

சனி தாக்கும் கிரகமல்ல, அது நம்மைக் காக்கும் கிரகம் என்பதால் ஒவ்வொரு சனிக்கிழமையும் நீங்கள் விரதமிருந்து சனி பகவான் ஆலயத்திற்குச் சென்று எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்யுங்கள். திருநள்ளாறு சென்று சனீஸ்வரர் வழிபாட்டையும் மேற்கொள்ளலாம். அல்லது விஸ்வரூப ஆஞ்சநேயரை தரிசித்து வரலாம்.

சப்தம ஸ்தானம் தன்னில்
சனி என்னும் கிரகம் வந்தால்
எப்போதும் அதனின் பார்வை
இயல்பாகப் பதியும் அன்றோ!
அப்படிப் பார்க்கும் மந்தன்
அனுதினம் நன்மை செய்ய
ஒப்பில்லா அனுமன் தாளை
உள்ளத்தில் நினைத்துக் கொள்வோம்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

எனவே, ஏழாமிடத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது வழிபாட்டின் மூலமே வளர்ச்சியைக் காண இயலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மாபெரும் கிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் சனிபகவான். அவர் இதுவரை உங்கள் இராசிக்கு 6ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். அப்பொழுது உத்தியோகத்தில் பிரச்சினை, உடல் ஆரோக்கியத்தில் பிரச்சினை, உடனிருப்பவர்களால் பிரச்சினை என்று ஒவ்வொரு நாளும் வந்து கொண்டே இருந்திருக்கும்.

இப்பொழுது சனிப் பெயர்ச்சியாகிவிட்டது. சப்தமச் சனியாக இருந்தாலும் குரு வீட்டில் இருப்பதால் எழுபத்தி ஐந்து சதவீதம் நற்பலன்களையே வழங்கும். ஒரு காரியத்தை ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். உற்சாகக் குறைவும், சலிப்பும் அடிக்கடி உங்களை வந்து அலைமோதலாம்.

உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் ஏழாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணையோடு கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அதே நேரத்தில் இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம் என்று அடிக்கடி மாற்றங்கள் வந்து கொண்டே இருக்கும். தம்பதியர்களில் கணவர் ஓர் ஊரிலும், மனைவி ஓர் ஊரிலும் பணி நிமித்தமாக வசிக்கும் சூழ்நிலை உருவாகலாம்.

**மந்தனின் பார்வையால் ஏற்படும்**
**மகத்தான பலன்கள்!**

உங்கள் இராசிக்கு 8, 9 இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் தற்சமயம் 7-ம் இடத்தில் சஞ்சரித்து 1, 4, 9 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே உடல் ஆரோக்கியம், அறிவாற்றல், முன்னேற்றம், உற்சாகம், வாகன யோகம், தாய்வழி ஆதரவு, சுகம், தந்தை வழி உறவு, பூர்வீக சொத்து அனைத்திலும் ஒரு நல்ல மாற்றத்தை வழங்கப் போகின்றது.

குறிப்பாக இராசியைச் சனி பார்ப்பதால் ஆரோக்கியத்தில் சிறுசிறு அச்சுறுத்தல்கள் ஏற்படும். கால் கைவலி, மூட்டுவலி, தோள்பட்டை வலி என்று ஏதாவது ஒரு வலியைக் கொடுத்து சிந்தனையைச் சிதறடிப்பார். நீங்கள் மருத்துவரிடம் சென்று காட்டினால் உடம்பில் எந்த நோயுமில்லை, சோதித்துப் பார்த்ததில் எல்லாமே நன்றாக இருக்கிறது. ஏன் கவலைப்படுகிறீர்கள் என்பார். உங்கள் ஜாதகத்தில் யோக திசை நடந்தால் உங்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால் உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு மருத்துவச் செலவுகள் வரலாம்.

4ஆம் இடத்தைச் சனி பார்ப்பதால் கட்டிய வீட்டைப் பழுதுபார்க்கும் சூழ்நிலை உருவாகலாம். புதிதாக வீடு வாங்கும் யோகம் ஒருசிலருக்கு உண்டு. தாய் வழி ஆதரவும், தந்தையின் அரவணைப்பும் கிடைக்கும். வாகன யோகம் உண்டு. தொழிலில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். விலகிச் சென்ற சகோதரர்கள் இப்பொழுது பாசம் காட்டுவர். பிள்ளைகளுக்கு வெளிநாட்டு யோகம் அமையும்.

சனியின் பார்வை 9ஆம் இடத்தில் பதிவதால் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாக இருக்கும்.

**குதூகலம் தரும்**
**குருப்பெயர்ச்சிக் காலம்!**

4.10.2018இல் விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அதன் பிறகு 28.10.2019இல் தனுசு இராசிக்கு குரு செல்கின்றார். தனுசு இராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது இரண்டு முறை குருப்பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதன்விளைவாக நல்ல மாற்றங்களும் உங்களுக்கு ஏற்படும்.

சனிப்பெயர்ச்சியின் தொடக்கத்தில் குரு முழுமையாக உங்களைப் பார்க்கின்றது. அதன் பிறகு விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் பொழுது உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களைப் பார்க்கின்றது. எனவே குடும்பப் பிரச்சினைகள் தீரும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் புதிய திருப்பங்கள் ஏற்படும். உடல்நலம் மற்றும் மனநலம் சிறப்பாக அமையும். கூட்டுக்குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். வரவு திருப்தி தரும்.

தனுசு இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது மீண்டும் அதன் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. சப்தம பார்வையாக குரு பார்ப்பதால் இக்காலம் ஒரு பொற்காலமாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறப்புகள் உறுதுணைபுரிவர். தொழில் வளர்ச்சி மேலோங்கும். இலாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக கிடைக்கும்.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

13.2.2019இல் மிதுன இராசியில் ராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகின்றார்கள். உங்கள் இராசியிலேயே இராகு சஞ்சரிக்கின்றார். சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கின்றார். ஜென்ம இராகு நன்மைகளைச் செய்யுமா என்று நீங்கள் நினைக்க வேண்டாம். 'கூறுகின்ற கேந்திரத்தில் இராகு-கேது நின்றால் குணவானும், தனவானாய் மாறுவானாம்' என்று சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சிந்தித்து செயலாற்றிய காரியங்களில் வெற்றி கிடைக்கும். வேலை நிமித்தமாக வெளிநாடு செல்லக்கூடிய வாய்ப்பு உருவாகும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையோடு விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. இக்காலத்தில் ஜென்ம இராகு, சப்தம கேது நற்பலன்களைத் தர நாகசாந்தி பரிகாரங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.




**சனியின் வக்ர காலம்!**

25.4.2018 முதல் 21.8.2018 வரை மூல நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார். 8.5.2019 முதல் 3.9.2019 வரை மீண்டும் பூராடம் நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார்.



இக்காலத்தில் உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ரம் பெறுவதால் மிகப்பெரிய முன்னேற்றங்கள் வந்து சேரும். மித மிஞ்சிய பொருளாதாரம் உருவாகும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். உறவினர் பகை மாறும். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்வீர்கள்.

9ஆம் இடத்திற்கு அதிபதி வக்ரம் பெறுவதால் முன்னோர் சொத்துகள் அல்லது வாங்கிய சொத்துகளை ஒருசிலர் விற்க நேரிடும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது.

**தொட்ட காரியங்களில் வெற்றி**
**பெற வழிபாடு!**

சனிக்கிழமை தோறும் சிவாலயத்திற்குச் சென்று சனி பகவானை வழிபட்டு வாருங்கள். மேலும் வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சிறப்பு வழிபாடாக சிவகங்கை மாவட்டம் திருப்பதூர், கண்டரமாணிக்கம் அருகில் உள்ள பெரிச்சிக் கோவிலுக்குச் சென்று நவபாஷாண வைரவரையும், வன்னிமரத்தடியில் வீற்றிருக்கும் தன ஆகர்ஷன சனியையும் வழிபட்டு வந்தால் வளர்ச்சி அதிகரிக்கும்.

**பெண்களுக்கான சிறப்பான**
**பலன்கள்!**

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் உடல் நிலையில் கொஞ்சம் கவனம் தேவை. அடிக்கடி கடன் தொல்லைகளால் அவதிப்படலாம். குரு பார்வை இருப்பதால் பணப் புழக்கம் நன்றாக இருக்கும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். இதுவரை செய்த பரிகாரங்களுக்குப் பலன் கிடைத்து மண வாழ்க்கை அமையும்.

கணவன்- மனைவிக்குள் அன்பும், பாசமும் கூடும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தலைமைப் பொறுப்புகள் தானாக வந்து சேரும். கல்வி முன்னேற்றம் கருதி வாய்ப்பைத் தொடர நினைத்தவர்களுக்கு வாய்ப்பு கைகூடும். குழந்தைகள் இசை, நடனம் போன்ற கலைகளில் ஈடுபட்டு புகழையும், செல்வத்தையும் பெற்றுத் தருவர். சர்ப்ப சாந்திப் பரிகாரங்கள் செய்துகொள்வது நல்லது. குரு, தனுசு இராசியில் சஞ்சரிக்கும் நேரம் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுகள் முடிவாகும். (தொடரும்)

- சிவல்புரி சிங்காரம் -

# போராளிகளைப் போன்று ஆசிரியர்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும்

## கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தங்கள் இன்னுயிர்களை அர்ப்பணித்த போராளிகளைப்போல ஆசிரியர்களும் எமது இனத்திற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வலிகாமம் வலய பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அதிபர், ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வில் கடந்த வியாழக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது இனத்தின் விடிவிற்காக ஆயிரமாயிரம் போராளிகள் தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்கள் எமது எதிர்கால சந்ததியின் நல் வாழ்க்கைக்காகவே தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

அவர்களைப்போலவே ஆசிரியர்களும் எம் இனத்தை கல்வியில் உயர்த்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். உங்கள் அனைவரையும் எமது இனத்தின் கல்வியை உயர்த்துவதற்காக பாடுபடும் போராளிகளாகவே நான் பார்க்கிறேன்.

புனிதமான ஆசிரியர் சேவையை வைத்துக்கொண்டு உங்களைப்போன்ற பலரை நீங்கள் அனைவரும் எம்மினத்திற்காக உருவாக்கித் தரவேண்டும்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஞானக்குழந்தை இல்லங்களின் பட்டமளிப்பும் கலைவிழாவும்

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழகம் மற்றும் 9 ஞானக் குழந்தை இல்லங்கள் இணைந்து நடத்தும் 52ஆவது பட்டமளிப்பும் வருடாந்த கலைவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் ஹம்சிகா மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்) பாலர் கல்விக் கழகத்தலைவர் பி.காசிநாதன் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட விசேட மத்தியஸ்தர் சபை (காணி) தவிசாளர் கு.சண்முகநாதன் கலந்து கொள்வார். (இ-10)

# ஒரு கோடி கடத்த முயன்ற சீனப்பிரஜை தடுத்து வைப்பு

(கொழும்பு)


பெருமளவு வெளிநாட்டு நாணயத் தாள்களை வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாகக் கொண்டு செல்ல முயன்ற சீனப் பிரஜை ஒருவரை சுங்கத் துறையினர் நேற்று தடுத்து வைத்தனர்.

25 வயது நிறைந்த இந்தப் பிரயாணி சிங்கப்பூர் செல்லும் விமானத்தில் பயணம் செய்ய ஏற்பாடாகியிருந்தது.

எனினும் அவரது பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இலட்சம் சிங்கப்பூர் டொலர்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இலங்கை மதிப்பில் இதன் பெறுமதி சுமார் ஒரு கோடியே 15 இலட்ச ரூபாவாகும் எனத் தெரிய வருகிறது. (இ)

# கட்டுக்கடங்காத காட்டுத்தீ! 439 கட்டடங்கள் எரிந்து நாசம்



(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் சாண்டியாகோ, சாண்டா அனா உள்ளிட்ட பகுதிகளில் காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது. இப்பகுதியில் 439 வீடுகள் மற்றும் கட்டடங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத் தீ பரவி வருகிறது. இதனால் வனப்பகுதியை ஒட்டியுள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து 2 இலட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வீடுகள் மற்றும் தங்கும் விடுதிகள் எரிந்து நாசமாகின. பல லட்சம் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. மேலும் லொஸ்ஏஞ்சல்ஸ் வடகிழக்கில் உள்ள வெஞ்சுரா கண்ட்ரி பகுதியில் 466 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் காட்டுத் தீ எரிகிறது.

சாண்டியாகோ, சாண்டா அனா உள்ளிட்ட பகுதிகளில் காட்டுத் தீ வேகமாக பரவி வருகிறது. இப்பகுதியில் 439 வீடுகள் மற்றும் கட்டடங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

சாண்டியாகோவில் பந்தய குதிரைகள் பயிற்சி மையம் உள்ளது. காட்டுத் தீயில் சிக்கி 15 பந்தய குதிரைகள் கருகி உயிரிழந்தன.

அந்த மையத்திலுள்ள குதிரைகள் வெளியேற்றப்பட்டன. தீ கட்டுக்கடங்காமல் எரிகிறது. தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். (இ)

# ஏமனில் சவுதி கூட்டுப்படையினரின் விமான தாக்குதலில் 23 பேர் பலி!



(சனா)

ஏமன் நாட்டின் சடா பகுதியில் சவுதி கூட்டுப்படைகள் நேற்று நடத்திய விமானத் தாக்குதலில் 23 பேர் பரிதாபமாக பலியாகினர்.

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்தி புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் சனா உட்பட பலபகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்கள் வைத்து அந்த பகுதிகளை சுற்றி சோதனைச் சாவடிகள் அமைத்துள்ளனர்.

சர்வதேச ஆதரவு பெற்றுள்ள ஏமன் அரசுக்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் ஆதரவு அளித்து வருகின்றன. அவர்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து விமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த தாக்குதலில் சில நேரங்களில் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்நிலையில், ஏமனின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள சடா நகரில் ஹவுத்தி புரட்சிப் படையினரை குறிவைத்து சவுதி கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் விமானத் தாக்குதல் நடத்தினர். இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 23 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர்.

மத்திய கிழக்கு நாடுகளான ஏமன், சிரியா, ஈராக் மற்றும் லெபனானில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஈரான் மற்றும் சவுதி அரேபியா நாடுகள் முயற்சித்து வருகின்றன. அரசுப் படைகளுடன் புரட்சிப் படையினர் நடத்திவரும் மோதலில் இதுவரை பத்தாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வடகொரியா மிரட்டலால் ஜப்பான் அதிரடி திட்டம்



(டோக்கியோ)

வட கொரியாவின் மிரட்டலை சமாளிக்க ஜப்பான் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணைகளை அமெரிக்க நிறுவனத்திடமிருந்து வாங்க திட்டமிட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு வடகொரியா சிம்ம சொப்பனமாகவுள்ளது. இந்த நாடுகளை மிரட்டும் வகையில் தொடர்ந்து அணுகுண்டு சோதனைகளையும், ஏவுகணை சோதனைகளையும் நடத்துகிறது.

இதனால் கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றம் நிலவுகிறது. சமீப காலமாக பசுபிக் கடலிலுள்ள அமெரிக்க பிராந்தியத்தை தாக்கும் வகையில் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் நீண்ட தூர ஏவுகணைகளை வீசி சோதனை நடத்தி வருகிறது.

இந்த ஏவுகணைகள் ஜப்பான் மேலாக பறந்து சென்று குறிப்பிட்ட இலக்கை அடைகிறது. வடகொரியாவின் இந்த கைய நடவடிக்கை ஜப்பானுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

எனவே வட கொரியாவின் மிரட்டலை சமாளிக்க ஜப்பான் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணைகளை அமெரிக்க நிறுவனத்திடம் இருந்து வாங்கத் திட்டமிட்டுள்ளது.


ஜெ.ஏ.எஸ்.எஸ்.எம். மற்றும் எல்.ஆர்.ஏ.எஸ்.எம். எனப்படும் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைகளை அமெரிக்காவிடம் இருந்து வாங்குகிறது. இவை விண்ணில் இருந்து பூமியை நோக்கி செலுத்தக் கூடியது. 900 கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த இந்த ஏவுகணைகளை போர் விமானங்களில் இருந்து செலுத்த முடியும்.

அதே போன்று 500 கி.மீ தூரம் பறந்து சென்று தாக்கும் காங்ஸ்பெர்க் என்ற ஏவுகணையை நோர்வேயிடம் இருந்து வாங்குகிறது. இத்தகவலை ஜப்பான் இராணுவ அமைச்சர் இட்சுனோரி அனோடெரா தெரிவித்துள்ளார்.

அதற்கான தொகையை அடுத்த ஆண்டு (2018) ஏப்ரல் மாதம் நடைபெறும் பாராளுமன்ற கூட்டத்தில் சிறப்பு பட்ஜெட் மூலம் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது.

போர் ஒழிப்பு கோட்பாட்டில் பல்லாண்டுகளாக உறுதியுடன் இருக்கும் ஜப்பான் வட கொரியா மிரட்டலை சமாளிக்கவும் நாட்டின் பாதுகாப்புக்காகவும் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் இராணுவ அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (இ)

# மாவாவுடன் இருவர் கைது



(கொழும்பு)

புத்தளம் நகரிலுள்ள எலுவான்குளம் பகுதியில் மாவா என்ற போதைப் பொருட்கள் அடங்கிய பொதிகளுடன் இருவரைக் கைது செய்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸார் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பேருந்துத் தரிப்பிடத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பேருந்துகளின் சாரதிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கில் கஞ்சா கலந்த மாவா என்ற போதைப் பொருட்களை வைத்திருந்த நிலையில் அவர்களிடமிருந்து கைப்பற்றியதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

# சிங்கப் படையணியின் புதிய கொமாண்டர் பதவியேற்பு



(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் சிங்கப்படையணிகேணல் கொமாண்டராக மேஜர் ஜெனரல் பியல் விக்கிரமரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

அபேபுஸ்ஸவிலுள்ள இலங்கை இராணுவ சிங்கப் படையணித் தலைமையகத்தில் 10ஆவது தளபதியாக தமது கடமைகளை நேற்று முன்தினம் பொறுப்பேற்றார்.

படைத் தலைமையகத்திற்கு வருகை தந்த தளபதிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டு இலங்கை இராணுவ சிங்கப் படையணித் தலைமையகத்தின் சென்டர் கொமாண்டர் பிரிகேடியர் கித்திசிறி லியனகே வரவேற்றார். இதன் போது மத வழிபாடுகள் மற்றும் ஆசீர்வாதங்கள் வழங்கப்பட்டதுடன், படைத் தலைமையக வளாகத்தில் மர நடுகை இடம் பெற்றது. (இ)

# காணாமல் போனோர் பணியக ஆணையாளர்களாக 7 பேர் தெரிவு

## நிமல்காவுக்கு ஜே.வி.பி.எதிர்ப்பு

(கொழும்பு)

காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிப்பதற்கு ஏழு பேரின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, அரசியலமைப்பு சபை முன்மொழிந்துள்ளது.

காணாமல் போனோர் பணியகத்தின் ஏழு ஆணையாளர்களைத் தெரிவு செய்வதற்காக, அரசியலமைப்பு சபை விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதற்கமைய, 100இற்கும்மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜெயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்டோரைக் கொண்ட அரசியலமைப்பு சபை, ஆணையாளர்களாக நியமிக்கத் தகுதி வாய்ந்த 7 பேரின் பெயர்களைத் தெரிவு செய்து, ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவர்களின் நியமனங்களை அங்கீகரித்த பின்னர், காணாமல்போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

இதனிடையே, காணாமல் போனோர் பணியகத்தின் ஆணையாளர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஏழு பேரில் மனித உரிமை செயற்பட்டாளர் நிமல்கா பெர்னாண்டோவும் ஒருவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இவரை இந்தப் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு, அரசியலமைப்பு சபையில் இடம்பெற்றுள்ள ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (இ)

# பாலஸ்தீனுக்கான ஆதரவு தொடரும் இலங்கை அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் முழுமையான உறுப்புரிமையை பெற்றுக்கொடுப்பதில் பாலஸ்தீனுக்கான தமது ஆதரவினை இலங்கை தொடரும் என வெளியுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன் குடியரசு கொழும்பில் அதன் புதிய தூதரகத்தை நிர்மாணிப்பதற்கான காணி ஒன்று இலங்கை அரசினால் நேற்று முன்தினம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்தக் காணி உறுதியை இலங்கைக்கான பாலஸ்தீன் தூதுவர் சுஹைர் எம்.எச். சயிட்டிடம், வெளியுறவுத் துறை அமைச்சர் திலக் மாரப்பன கையளித்தார். (இ)

# கட்டுநாயக்க பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம்

## இருவர் காயம்



(கொழும்பு)

கட்டுநாயக்க - ஹினடிய பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 25 மற்றும் 58 வயதுடைய இருவரே காயமடைந்துள்ளதாக தெரிவிக்கும் பொலிஸார், சம்பவம் தொடர்பில் இருவரை கைது செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக தலைநகர் கொழும்பை அண்டிய பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனினும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கமும், பொலிஸாரும் தொடர்ந்து தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ரூ.8 கோடி பெறுமதியான சிகரெட்டுக்கள் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக நாட்டுக்குள் எடுத்துவரப்பட்ட ஒரு தொகை வெளிநாட்டு சிகரெட்டுக்களை சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் மாலை பறிமுதல் செய்தனர்.

மொத்தமாக 16 இலட்சம் சிகரெட்டுக்கள் அடங்கிய இந்தத் தொகையின் பெறுமதி சுமார் எட்டுக் கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சிகரெட்டுக்கள் டுபாயில் தயாரிக்கப்பட்டவை என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ)

# ஆளுமை விருத்தி விரிவுரை



(கொழும்பு)

ஆளுமை விருத்தி தொடர்பான விரிவுரை ஒன்று பாதுகாப்பு செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி கபில வைத்தியரத்ன தலைமையில் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் அத்தநாயக எம் ஹேரத்தினால் விஷேட விரிவுரை நிகழ்த்தப்பட்டது.

இதன்போது, பாதுகாப்பு அமைச்சின் நலன்புரி சங்கத்தினால் அமைச்சில் பணிபுரியும் பணியாளர்களின் பிள்ளைகள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஏஜஏ காப்புறுதி நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்விப் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (இ)

# சர்வதேச மீன் மற்றும் கடலுணவு கண்காட்சி ஜனாதிபதி மைத்திரி தலைமையில் ஆரம்பம்



(கொழும்பு)

சர்வதேச மீன் மற்றும் கடலுணவு கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு விகாரமஹாதேவி திறந்த கலையரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமான இந்த கண்காட்சி இன்று வரை இடம் பெறும்.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் கடலுணவு மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் மீன்பிடி, நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

கண்காட்சியை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, உள்நாட்டு வெளிநாட்டு மீன் மற்றும் கடலுணவு கண்காட்சி கூடங்களை பார்வையிட்டார்.

மீன் மற்றும் கடலுணவு மேம்பாட்டுக்காக நீண்டகாலம் பணியாற்றிய நாரா நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சர் மகிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம் பௌசி, மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் மங்கலிகா ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கும் யோசனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திற்கு கையளிப்பதற்கான மூலோபாய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் இரண்டு வர்த்தமானி அறிவித்தல்கள் மேலதிக வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த மூலோபாய அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு ஆதரவாக 72 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை முன்னணியின் ஐந்து உறுப்பினர்களும், கூட்டு எதிரணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இருவரும் எதிராக வாக்களித்துள்ளனர்.

துறைமுக மற்றும் கடற்றொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க முன்வைத்த இந்த யோசனைக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை விஸ்தரித்து, அதனை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை துறைமுக அதிகார சபைக்கும், சைனா மேர்ச்சன்ட் போர்ட் ஒஸ்டிங்ஸ் நிறுவனத்துக்கும் இடையில் கடந்த ஜூலை 29 ஆம் திகதி கூட்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது.

இந்த நிலையில் மூலோபாய அபிவிருத்தி சட்டமூலத்திற்கு அமைய அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 65 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளன. (இ)

# வடக்கு–கிழக்கில் ஆழ்கடலில் மீன்பிடிக்க இன்னும் அனுமதியில்லை

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் ஆழ்கடலில் மீன்பிடி நடவடிக்கைகள் இன்னும் முழுமையாக வழமைக்குத் திரும்பவில்லை என்று வடக்கு-கிழக்கிலுள்ள இடர் முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீர்றகாலநிலையின் காரணமாக வடக்கு கிழக்கில் கடந்த 4 தினங்களுக்கு மேலாக மீனவர்கள் தமது தொழிலுக்காக கடலுக்கு செல்லவில்லை.

இருப்பினும் வடக்கு-கிழக்கில் குறிப்பிட்ட சில எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டதாக தெரிய வருகிறது.

ஆழ்கடல் மீன்பிடி தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அறிவிப்பு வந்த பின்னரே அது தொடர்பாக மீனவர்களுக்கு அறிவிக்கப்படும் என்று வடக்கு-கிழக்கிலுள்ள இடர் முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீன்பிடி நடவடிக்கையில் கடற்றொழிலாளர்கள் ஈடுபடாததால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மாந்தை மனித புதைகுழி வழக்கு விசாரணை மீண்டும் ஜனவரிக்கு ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தைப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனித புதைகுழி வழக்கு சம்பந்தமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விசாரணையின்றி வழக்கு தொடர்ந்து பிறிதொரு தினத்துக்கு தவணையிடப்பட்டது.

கடந்த 2013ஆம் ஆண்டு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பகுதியிலிருந்து மாந்தை பகுதி குடி மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு அமைவாக வீதியோரமாக குழாய்கள் நிலத்தடியில் பதித்துச் சென்ற வேளையில் மனித எச்சங்கள் தென்பட்டிருந்தன.

இதைத்தொடர்ந்து மன்னாரில் அப்போதைய நீதிபதியாக இருந்த செல்வி கனகரட்ணம் ஆனந்தியின் முன்னிலையில், சட்ட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டீ.எல்.வைத்தியரத்தின தலைமையில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியை 05.03.2014 வரை 33 தினங்கள் அகழ்வு செய்யப்பட்டபோது சுமார் 84 மனித எச்சங்களும் மண்டையோடுகளும் கண்டுபிடிக்கப் பட்டன.

இவற்றை பகுப்பாய்வு செய்யும் நோக்குடன் அநுராதபுரம் வைத்தியசாலையில் தற்பொழுது பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை வெளிநாட்டிலுள்ள குறிப்பிடப்படும் நிறுவனத்தின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் சார்பாக நீதிமன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் கடந்த தவணைகளின்போது மன்றை கோரியிருந்தனர்.

இவ் வழக்கை விசாரனை செய்த முன்னைய நீதிபதியின் நாட்குறிப்பின் படியும் குற்ற புலனாய்வினர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் ஆகியோர் சமர்ப்பித்த மேலதிக சமர்ப்பணத்தை வைத்துக் கொண்டு தற்பொழுது வழக்கை விசாரித்து வரும் நீதிபதி கட்டளை பிறப்பிக்க இருந்த சமயத்தில் இவ் வழக்கை வேறொரு நீதிமன்றுக்கு மாற்றி விசாரணையை மேற்கொள்ளுமாறு குற்ற புலனாய்வு பிரிவினர் நீதி சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக கடந்த தவணையின் போது மன்றில் தெரிவித்திருந்தனர்.

இதனால் கட்டளை பிறப்பிக்கப்படாத நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இம்மனுவேல் கயஸ் பல்டானோ முன்னிலையில் இவ் வழக்கு மீண்டும் எடுக்கப்பட்ட போது எதிர்வரும் 29.01.2018 வரை இவ் வழக்கு ஒத்திவைக் கப்பட்டது. (2-281)

# கூட்டத்தீர்மானத்தை மீறி 94 ஏக்கரில் விவசாயிகள் நெற்செய்கை விதைப்பு

## உதவித்திட்டங்கள், உரமானியக் கொடுப்பனவை நிறுத்திவைக்க முடிவு

(மல்லாவி )

பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட பகுதியில் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையின் போது, கூட்டத் தீர்மானத்தை மீறி 33 விவசாயிகள் 94 ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொண்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவு உட்பட பல்வேறு உதவித் திட்டங்களை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட வவுனிக்குளத்தின் நீரைப் பயன்படுத்தி நடப்பாண்டுக்குரிய காலபோக நெற் செய்கையை மேற்கொள்வதற்கான இறுதி விதைப்புத் திகதி கூட்டத் தீர்மானத்தின் படி கடந்த நவம்பர் மாதம் 20 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

இந் நிலையில், கூட்டத் தீர்மானத்திற்கமைய காலபோக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளின் நெற்பயிர்கள் தற்போது 60 நாட்களைக் கடந்துள்ளது.

இவ்வாறான நிலையில், வவுனிக்குளத்தின் நீரைப் பயன்படுத்தி வவுனிக்குளம் இடது கரை கால்வாய்ப் பகுதியில் கூட்டத் தீர்மானத்தை மீறிய பூவரசங்குளம் கமக்கார அமைப்புக்களுக்குட்பட்ட 30 விவசாயிகள் 91 ஏக்கரிலும், கரும்புள்ளியான் குள கமக்கார அமைப்புக்களுக் குட்பட்ட 3 விவசாயிகள் 3 ஏக்கரிலுமாக மொத்தம் 33 விவசாயிகள் 94 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ளனர்.

இவர்களின் இந்த செயலானது ஏனைய விவசாயிகளுக்கு இடையூறாக அமைந்துள்ளதுடன், எதிர்வரும் சிறுபோக வேளாண்மையை இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, கூட்டத் தீர்மானத்தை மீறி அனுமதியின்றி காலபோக நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு உரமானியம் உட்பட ஏனைய உதவித் திட்டங்களை நிறுத்துவது குறித்து இறுதி முடிவு முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மற்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசனக் திணைக்களத்தின் பொறியியலாளர், குறித்த பகுதியில் உள்ள கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட சட்டவிரோதமான முறையில் நெற் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கு நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)



## பன்னாட்டு விசாரணையே அவசியம்

# நிலைமாறும் காலநீதிக்கான அமைப்பின் பிரதிநிதியிடம் உறவினர்கள் வலியுறுத்து



(பனிக்கன்குளம்)

தமது உறவுகளுக்கு தீர்வு கிடைக்கும்வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை நிலைமாறு காலநீதிக் கான அமைப்பின் பிரதிநிதி சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 276 ஆவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்த, இராணுவத்திடம் கையளித்த கைதுசெய்யப்பட்ட மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி தொடர்கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் இவர்களின் போராட்டத்துக்கு எந்தவித பதில்களும் கிடைக்காத நிலையில் அடைமழைக்கு மத்தியிலும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் அரசால் தமக்கு எந்த தீர்வும் வழங்கமுடியவில்லை எனவும் சர்வதேச விசாரணையே தமக்கு தேவை எனவும் உறவுகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட காணாமல் போனவர்களின் உறவினர் களை நியூயோர்க் ஐ தலை மையகமாக கொண்டியங்கும் நிலைமாறு கால நீதிக்கான அமைப்பின் பிரதிநிதிசந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பிலான அலுவலகம் தேவை இல்லை என்பதையும் காணாமல் போனவர்கள் தொடர்பில் அரசிடம் எதையும் முறையிடவில்லை என்றும் பன்னாடுகளுக்கே முறையிடவுள்ளதாகவும் காணாமல் போனவர்கள் வலியுறுத்தி தெரிவித்தனர். (2-281)

# இடமாற்றம்

புதுக்குடியிருப்பு மத்திய ஸ்தர் சபை வழமையாக மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெற்று வந்தது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகவுள்ள நிலையில் இன்றில் இருந்து சிறிசுப்பிரமணிய வித்தி யாசாலையில் காலை 9 மணி முதல் நடைபெறும் என தவிசாளர் அறிவித்துள்ளார்.(2)


# பரிசளிப்பு விழா

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பொது நூலகத்தால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நூலக மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும். பூநகரி பிரதேச சபையின் செயலாளர் மு. இராசகோபால்தலைமையில் நடைபெறவுள்ள விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினர் களாக கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்ணேந்திரன், பூநகரி கோட்ட கல்விப் பணிப்பாளர் சு.தர்ம ரத்தினம் ஆகியோர் கலந்து கொள் ளவுள் ளனர்.

இந்நிகழ்வில் "பல்லவம் சஞ்சிகை வெளியீடும் நடைபெறும். நிகழ்வின் இறுதியில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (2-84)

# முல்லையில் கட்டுப்பணம் செலுத்தியது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நேற்று முன்தினம் செலுத்தியது.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தங்களது கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர்.

முன்னாள் வடமத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம், வட க்கு மாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரத்தன உள் ளிட்ட பலர் சென்று கட்டுப்பணத்தை செலுத்தினர். (2-281)

# ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வவுனியாவில் கட்டுப்பணம்



(குருமன்காடு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா நகரசபையில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இன்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல்கள் திணைக்களத்திலேயே கட்டுப்பணத்தை நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் செலுத்தியுள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலக தேர்தல் அலுவலகத்தில் வவுனியாவில் வைப்புக்கள் வைக்கப்பட்டிருந்தன.

வடக்கு மத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் தலைமையிலான குழுவினர் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர். (2-250)

# 'பெண்களுக்கெதிரான வன்முறையை தடுப்போம்' வவுனியாவில் வாகன விழிப்புணர்வு பேரணி




(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுப்போம் எனும் தொனிபொருளிலான வாகன விழிப்புணர்வு ஊர்வலப் பேரணியும், பொதுமக்களிடம் கையச்சு பெறும் நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த வாகன விழிப்புணர்வு ஊர்வலப் பேரணி நேற்று முன்தினம்பிற்பகல் 3 மணியளவில் மன்னார் வீதியிலுள்ள வவு/காமினி பாடசாலைக்கு முன்பாக மோட்டார் சைக்கிள், ஆட்டோக்கள் சகிதம் ஒன்றிணைந்து ஆரம்பித்த பேரணியானது மன்னார் வீதியூடாக குருமன்காட்டு சந்தியை சென்றடைந்து மணிக்கூட்டு வீதியூடாக காமினி பாடசாலையை மீண்டும் வந்தடைந்து முடிவுற்றது.

அதன் பின்னர் பொதுமக்கள், இளைஞர்கள் கையில் ஒரேஞ் நிறத்திலான மையை பூசி கையச்சு பதியும் நிகழ்வும் வாகனத்தை கழுவி சுத்தம் செய்யும் நிகழ்வும் நடைபெற்றது.

"பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் தடுப்போம்" எனும் தொனிப் பொருளிலான செயற் பாட்டை ஐக்கிய அபிவிருத்தி நிதியம், ஜேர்மன் நிதி வழங்கும் நிறுவனம் ஆகியன இணைந்து இப் பேரணியை மேற் கொண் டிருந் தனர். (2-281)

ஆழ்ந்த, கருத்தற்ற பேச்சாளர்கள் பேச்சை வளர்த்துக் கொண்டே போவர்.

- மான் டெஸ்க்கியு

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாநாடுகள் என்ற மாபெரும் பெயரைக் காப்பாற்றுங்கள்

'மாநாடு' என்ற சொற்பதத்தின் கனதி மிகவும் பெறுமதியானது. மாநாடு என்ற பதம் சூட்டுவதாக இருந்தால் அதற்கென்றொரு வரன்முறைகள் உண்டு.

அறிஞர் பெருமக்கள், ஆட்சித் தலைவர்கள், சமயப்பெரியவர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள் என்போர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்வர்.

மாநாட்டில் துறைசார் நிபுணர்கள் அந்த நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வரும் ஆர்வலர்கள், பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பர்.

ஆனால் இன்று அந்த நிலைமை கிடையாது. மாநாடு என்ற சொற்பதத்தை சர்வசாதாரணமாக சூட்டிவிட்டு பத்துப் பேருடன் அந்த மாநாட்டை முடித்து விடுகின்ற துன்பம் மாநாடு என்ற சொல்லின் கனதியைக் கடுமையாகக் குறைவுபடுத்தியுள்ளது.

அதேநேரம் மாநாட்டை ஏற்பாடு செய்வோர் அந்த மாநாட்டை நடத்தி முடிப்பதற்காகக் கடுமையாகப் பாடுபடுகின்றனர் என்ற உண்மையையும் நாம் மறந்துவிட முடியாது.

இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு நடத்தப்படுகின்ற மாநாடுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது எங்கள் இனத்தின் எதிர்காலம் எப்படியாகும் என்ற ஏக்கம் எழவே செய்யும்.

இப்போதெல்லாம் சமயம், மொழி சார்ந்த கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பங்குபற்றுவோர் மிகக்குறுகிய அணியினராக இருப்பதுடன் எல்லா இடங்களிலும் இவர்களே பங்குபற்றுபவர்களாகவும் உள்ளனர்.

ஆக, மாநாடுகள், கூட்டங்களில் கூறப்படும் அருமந்த கருத்துக்கள் மக்களை சென்றடையாமல் போகின்றது.

இதுதவிர, கூட்டத்தில் கதிரை நிரப்புதல் என்பதற்காக சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த மாணவர்களை அழைத்து வந்து அவர்களை இருத்தி விட்டு கூட்டத்துக்கு வந்தவர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுப்பு நடத்துவதும் ஏற்புடையதன்று.

நிகழ்ச்சிகளில், கூட்டங்களில், மாநாடுகளில் மாணவர்கள் கலந்து கொள்வதென்பது அவசியம்.

எனினும் மாநாட்டின் பேசுபடு பொருள் என்ன; அங்கு கூறப்படும் கருத்துக்களை உய்த்தறியக்கூடிய மாணவர்களின் வயதெல்லை யாது என்பனவெல்லாம் ஆராய்ந்தே மாணவர்களின் பங்கேற்பு அமைய வேண்டும்.

ஆனால் அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநாடுகளில் சிறுவர் இல்லத்துப்பிள்ளைகளை இடநிரப்புக்காகப் பயன்படுத்தும் முறை அமுலாகி வருவது போலத் தெரிகிறது. சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது கட்டாயம்.

ஆனால் அந்தப் பங்குபற்றல் இடநிரப்பலுக்காகவோ அன்றி மாணவர்களும் கலந்து கொண்டனர் என்பதைக் காட்டுவதாகவே அமையுமாக இருந்தால், அது ஒரு துன்புறுத்தலாகவே மாறிவிடும்.

எனவே மாநாடுகளை, கூட்டங்களை நடத்துவதற்கு முன்னதாக குறித்த மாநாட்டின் இலக்கினர் யார்? மாணவர்களின் பங்கேற்பு எத்தனை வீதமாக இருக்க வேண்டும்? பொதுமக்களை வரவழைப்பதற்கான உபாயம் யாது? என்பது பற்றியெல்லாம் ஆராய்ந்து;

பார்வையாளர்களின் வருகையை உறுதி செய்யும் பொறுப்புக்களைப் பிரித்துக்கொடுத்து, பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அவர்களின் முழுமையான பங்குபற்றுகை என்பன உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலமே மாநாடுகள், கூட்டங்கள் பெறுமதிமிக்கவையாக அமையும்.

### கொள்ளையர்களை பிடிப்பதற்காக

## மோப்பநாயின் உதவியுடன் பொலிஸார் தீவிர தேடுதல்

வவுனியா குருமன்காடு, கரப்பன்காட்டில் நேற்று முன்தினம் இரவு இரு வீடுகளில் புகுந்த திருடர்கள் அங்கு தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இதையடுத்து நேற்று பொலிஸார் சம்பவ இடத்தில் மோப்பநாயின் உதவியுடன் தீவிர தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் இரவு 8.45 மணியளவில் குருமன்காடு, கரப்பன்காட்டிலுள்ள இரு வீடுகளுக்குள் சென்ற திருடர்கள் அங்கு வீட்டு உரிமையாளர்கள் முன்னிலையில அவர்களின கைபேசிகளையும் மணிப்பையிலிருந்த பணத்தினையும் திருடிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து குறித்த வீட்டு உரிமையாளர் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு முறையிட்டுள்ளார்.

இதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வரும்போது அதே பகுதியிலுள்ள இன்னொரு வீட்டிற்குள் புகுந்த குறித்த திருடர்கள் அங்கிருந்த மின்சார தொழிநுட்பப் பொருட்களை (ஐபாட்) கைபேசிகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து இரு வீட்டு உரிமையாளர்களும்பொலிஸ நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதிகமாக நேற்று சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் திருடர்களை தீவிரமாக தேடி வருகின்றனர். (ம-250)

## போலி நாணயத்தாளை அச்சிட்டவர் கைது

திருகோணமலை - குச்சவெளி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கும்புருபிட்டி - 8ம் வட்டாரத்தில் போலி நாணயத்தாள் அச்சிடும் இடமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதனபோது புல்மோட்டை பொலிஸ் விஷேட அதிரடி படையினர், சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

கடற்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், சந்தேகநபர் 24 வயதுடைய இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், இவர் வசம் இருந்து போலி நாணயத் தாள்களை அச்சிடும் கணனி இயந்திரம், பிரதி எடுக்கும் இயந்திரம் மற்றும் 1000 ரூபாய் போலி நாணயத் தாள்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ம)

## பொலிஸாரின் இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

### பொலிஸ்மா அதிபர் பணிப்புரை

(கொழும்பு)

அனைத்து பொலிஸ் அதிகாரிகளினது இடமாற்றங்களையும் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பணிப்புரை விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவுள்ளமையினாலேயே குறித்த இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கை சிரேஷ்ட உப பொலிஸ் மா அதிபர்கள், உப பொலிஸ் மா அதிபர்கள், பொலிஸ் அதிகாரிகள், உதவிப் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலைய பரிசோதகர்களுக்கும் பொலிஸ் மா அதிபரினால் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவு கடந்த எட்டாம் திகதி முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அதற்கிணங்க வருடாந்த இடமாற்றம் உட்பட சகல இடமாற்றங்களும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வீடுகளுக்கு வரி அறிவிடப்படாது

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின்போது, நிதியமமைச்சர் மங்கள சமரவீர, மாடி வீடுகளுக்கான திருத்தப்பட்ட யோசனையை முன்வைத்தார்.

பாதீடு கடந்த 9ஆம் திகதி நிதியமைச்சரினால் முன்வைக்கப்பட்டபோது, மாடிவீடுகளுக்கு வரி அறவீடு செய்யப்படும் என்ற யோசனையை முன்வைத்தார்.

எனினும் நேற்றைய திருத்தப்பட்ட யோசனைக்கு அமைய 10 மில்லியன் ரூபாய் குறைந்த பெறுமதி கொண்ட வீடுகளுக்கு வரி அறவீடு செய்யப்பட மாட்டாது என மங்கள சமரவீர தெரிவித்தார். (ம)

### தருமபுரம் பொலிஸ் பிரிவில்

## வெவ்வேறு குற்றச்சாட்டு தொடர்பில் 6 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் 21 மணித்தியாலங்களுக்குள் 03 வெவ்வேறு குற்றச் சம்பவங்களின்போது 6 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன், தடயப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ண தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 07 மணி தொடக்கம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி வரையான 21 மணி நேர காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 07 மணியளவில் கல்லாறுப் பகுதியில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனத்தை தருமபுரம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.


இதேவேளை, நேற்று சனிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மயில்வாகனபுரம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை கைப்பற்றி நிர்மூலமாக்கியதுடன்,

600 லீற்றர் கசிப்புக் கோடவையும், கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றிய நிலையில் சம்பவ இடத்தில் வைத்து தருமபுரம் பொலிஸார் 03 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வட்டக்கச்சி மாயனூர் என்னும் இடத்தில் வைத்து தமது உடைமையில 20 லீற்றர் கசிப்பை வைத்திருந்த சந்தேக நபர்கள் 02 பேரைக் கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைத்துள்ளனர்.

இச சம்பவங்களின்போது, கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந் தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ண தெரிவித்துள்ளார். (ம-15)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சிசுவை எவ்வாறு கவனிக்க வேண்டும்?**

பிறந்த குழந்தைக்கு பழைய காலந்தொட்டு முதலில் பொன்னும் தேனும் கொடுப்பது வழக்கம். தங்கத்தை உரசி தேனில் கலந்து பிறநத குழந்தையின் நாக்கில் தடவி விடுவார்கள்.

சிலர் வசம்பைத் தேனில் கலந்து கொடுப்பார்கள். வசம்பு ஒரு சிறந்த மருத்துவக் குணமுள்ளதாகும். அறிவுக்கூர்மையை அதிகரிப்பதற்கும் தொண்டையைச் சுத்தப்படுத்தி குரல் வளத்தைப் பெருக்குவதற்கும் வசம்பு உதவும்.

(தொடரும்)

JSAC
பெண்களுக்கெதிரான
வன்முறை ஒழிப்புச் செயற்பாடு
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16 2017
பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே சமத்துவ உரிமைக்காய் நாமும் ஒன்றிணைவோம்.
யாழ் சமூக செயற்பாட்டு மையம்

# எனது சாதனை தகர்க்கப்படும் அதுவும் வெகு விரைவில்-சங்கக்கார

இலங்கை அணியின் முன்னாள் வீரரான சங்கக்கார என்னுடைய சாதனையை அடுத்த வருடம் இந்திய அணியின் தலைவரான விராட் கோலி முறியடிப்பார் என்று தெரிவித்துள்ளார்.

விராட் கோலி தலைமையிலான இந்திய அணி தற்போது வெற்றி மேல் வெற்றிகளை குவித்து வருகிறது. இதனால் இந்த குறுகிய காலகட்டத்திலே கோலி, பல அணித் தலைவர்களின் சாதனையை முறியடித்து விட்டார்.

அவுஸ்திரேலிய அணியின் வெற்றித் தலைவர் என்றழைக்கப்படும் ரிக்கி பொண்டிங்கின் சாதனையை, கோலி முறியடித்தார். இப்படி தொடர்ந்து சாதனைகளை முறியடித்து வரும், விராட்




கோலி, தன்னுடைய சாதனையை அடுத்த வருடம் முறியடிக்கலாம் என்று இலங்கை அணியின் முன்னாள் வீரரான சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், என்னுடைய சாதனையை முறியடிக்க விராட் கோலி நீண்ட ஆண்டுகள் எடுப்பார் என்று நினைக்கவில்லை. அடுத்த வருடம் என்னுடைய சாதனையை அவர் முறியடிக்கலாம். அதன் பின் மீண்டும் என்னைவிட அதிக ஓட்டங்கள் சேர்ப்பார். விராட் கோலி ஒரு மாறுபட்ட கிளாஸ் பட்ஸ்மேன் என்று கூறியுள்ளார். (க)

# பாண்டியாவா? சர்மாவா? குழப்பத்தில் கோலி





தென் ஆபிரிக்கா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரோகித் சர்மா தேர்வாகியுள்ளதால் கோலிக்கு தலைவலி ஏற்பட்டுள்ளது.

இந்திய அணி தற்போது இலங்கை அணிக்கு எதிரான தொடர்களில் விளையாடி வருகிறது. இத்தொடர் முடிந்த பின்பு இந்திய அணி தென் ஆபிரிக்காவிற்கு பறக்கிறது.

அங்கு 3 டெஸ்ட், 6 ஒரு நாள், 3 இருபதுக்கு-20 தொடர்களில் பங்கேற்கவுள்ளது.

சொந்த மண்ணில் சுலபமாக வெற்றியை குவித்து



வரும் இந்திய அணிக்கு, உண்மையான சோதனை தென் ஆபிரிக்க மண்ணில் தான் காத்திருக்கிறது.

இதற்கிடையில் தென் ஆபிரிக்கா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இதில் இந்திய அணியின் தொடக்க வீரரான ரோகித் சர்மாவும் தேர்வாகியுள்ளார்,

ஹர்திக் பாண்ட்யாவும் தேர்வாகியுள்ளார்.

இது தான் கோலிக்கு தற்போது தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

தென் ஆபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக இருக்கும் என்பதால், நான்கு பந்து வீச்சாளர்களுடன் ஒரு சகலதுறை வீரர் இருந்தால் சிறப்பாக இருக்கும் என கிரிக்கெட் வல்லுநர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அந்த வகையில் 8-வது வீரராக களமிறங்கி சதம் விளாசி அசத்தி, பந்து வீச்சிலும் கைகொடுத்து வருகிறார் பாண்ட்யா.

அதே போன்று ரோகித் சர்மாவும் தற்போது நல்ல போர்மில் உள்ளதால் நிச்சயம் அவரது அனுபவம் தென் ஆபிரிக்காவில் தேவைப்படும். இதனால் கோலிக்கு யாரை தேர்வு செய்வது என்பதில் நிச்சயம் குழப்பம் இருக்கும் என்று கூறப்படுகிறது. (க)

# ஒரு வெற்றி போதும் அணித் தலைவர் பெரேரா

இலங்கை- இந்திய அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரில் ஒரேயொரு வெற்றி போதுமானது என்று இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திசர பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான தோல்விகளை தழுவிக் கொண்டிருக்கும் இலங்கை அணிக்கு



அந்த மனநிலையிலிருந்து விடுபட வேண்டுமாயின் ஒரேயொரு வெற்றி போதுமானது.

சிம்பாவே அணியுடனான போட்டியில் தோல்வியை தழுவியதிலிருந்து, இலங்கை அணி தொடர்ச்சியான 12 ஒருநாள் போட்டிகளில் தோல்விகளை சந்தித்துள்ளது.

இந்தநிலையில் அதிலிருந்து விடுபடுவதற்கு, இந்திய அணியுடன் எதிர் வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் இலங்கை அணிக்கு ஒரேயொரு வெற்றி போதுமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# சமரபாகு நியூட்டன் சுற்றுப்போட்டி முடிவுகள்

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கழக விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த 40 அணிகள் பங்குபற்றுவதுடன், அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றது.

இங்கே சுற்றுப் போட்டியில், அண்மையில் நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

கலைமதி ஏ அணியை எதிர்த்து மைக்கல் அணி மோதியது. இதில் கலைமதி அணி, 5:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

கொலின்ஸ் அணியை எதிர்த்து திக்கம் பி அணி மோதியது. இதில் கொலின்ஸ் அணி, 1:0 என வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

மனோகரா அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணியை மோதியது. இதில் ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன. தொடர்ந்து, இடம்பெற்ற சமநிலை தவிர்ப்பு உதையில் அவ்வாய் மனோகரா அணி, 5:4 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

பலாலி விண்மீன் அணியை எதிர்த்து உடுப்பிட்டி யூத் அணி மோதியது. இதில் விண்மீன் அணி 2:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் ஏ அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் ஏ அணி மோதியது. இதில் றேஞ்சர்ஸ் ஏ அணி, 9:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)

# அதிக சிக்சர்கள் அடித்தார் அதிரடி மன்னன் கெயில்

இருபதுக்கு 20 போட்டிகளில் 800 சிக்சர்களை விளாசி மேற்கிந்திய தீவுகள் வீரர் கிறிஸ் கெயில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

வங்கதேசத்தில் ஐபிஎல் போன்று நடத்தப்படும் வங்கதேச பிரிமியர் லீக்கில் கிறிஸ் கெயில் ராங்க்பூர் ரைடர் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்தத் தொடரின் நாக் அவுட் சுற்றில் ராங்க்பூர் ரைடர் அணி குல்னா டைட்டன்ஸ் அணியை எதிர்த்து விளையாடியது

இதில் ரைடர்ஸ் அணி 15.2 ஓவர்களிலேயே வெற்றி இலக்கான 171 ஓட்டங்களை எடுத்து குல்னா அணியை வீழ்த்தியது.

இந்தப் போட்டியில் கெயில் 51 பந்துகளில் 126 ஓட்டங்களை குவித்தார். இதில் 14 மெகா சிக்சர்கள் அடக்கமாகும்.



இதன் மூலம் இருபதுக்கு 20 போட்டிகளில் 800 சிக்சர்கள் விளாசிய முதல் வீரர் என்ற புதிய உலக சாதனையை கெயில் படைத்துள்ளார். (க)

## ஆசனப்பங்கீடு...

இந்த பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் நேற்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி பிரதிநிதிகளோடு கலந்துரையாடியதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினை சுமுகமாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசு கட்சி, ரெலோ மற்றும் புளொட் ஆகியவற்றுக்கு இடையில் கடந்த நாட்களில் நடைபெற்ற ஆசனப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை இணக்கப்பாட்டுடன் நிறைவடைந்திருந்தது.

இந்த இணக்கப்பாடு எட்டப்படாமைக்கு தமிழரசு கட்சியின் விட்டுக்கொடுப்பற்ற செயற்பாடே காரணம் என கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளான ரெலோவும் புளொட்டும் வெளிப்படையாக குற்றஞ்சாட்டியிருந்தன.

இதன்எதிரொலியாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கீழ் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை எதிர்கொள்ளப் போவதில்லை என பங்காளிக் கட்சியான ரெலோவும் அறிவித்த நிலையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையாக பிளவுபடும் நிலைமை உருவாகியிருந்தது.

இந்த நிலையில் இந்தப் பிரச்சினையை சுமூகமாக தீர்க்கும் முயற்சியில் இறங்கியிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ரெலோ கட்சி சார்பில் நாடாளுமன்றத்திற்கு தெரிவான செல்வம் அடைக்கலநாதனுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததுடன், அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுடனும் கலந்துரையாடியிருந்தார்.

இதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழரசு கட்சி பலமாக இருக்கின்றது என்ற போதிலும் ஒற்றுமையின் நிமிர்த்தம் சில விட்டுக்கொடுப்புக்களை செய்ய தாம் தயாராக உள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளுக்கு இடையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான ஆசன பங்கீடு தொடர்பில் நிலவி வந்த பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு நேற்று அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளது.

இந்த பிரச்சினை தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் நேற்று ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி பிரதிநிதிகளோடு கலந்துரையாடியதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினை சுமுகமாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தேர்தலுக்கான விண்ணப்பங்கள் இலங்கை தமிழரசு கட்சியின் பெயரிலும், வீட்டுச் சின்னத்திலும் கையளிக்கப்படும் என ஊடகப்பிரிவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கிலுள்ள வாக்காளர்களிடம் இலங்கை தமிழரசுக் கட்சியின் கீழ் அதன் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு முழுமையான ஆதரவை வழங்குமாறும் அந்த அறிக்கையின் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தாம் தமிழரசு கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட மாட்டோம் என அறிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல். எவ் தற்போது வீ.ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## த.தே. கூட்டமைப்பு...

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியானது எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்று புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி உள்ள நிலையில் சிவசக்தி ஆனந்தன் இவ்வாறு 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின இறுதிவாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## 99 மேலதிக வாக்கு...

2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நீல பசுமை பொருளாதாரத்தை கருப்பொருளாக கொண்டு நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் கடந்த மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் செலவீனமாக 3 ஆயிரத்து 982 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதங்கள் இடம் பெற்றதை தொடர்ந்து நேற்று மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது வரவு செலவுத் திட்டம் மூன்றில் இரண்டு மேலதிக பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 154 வாக்குகளும் எதிராக 56 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன், மேலதிக 99 வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த வரவு செலவுத் திட்டத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன ஆதரவாக வாக்களித்ததுடன் மக்கள் விடுதலை முன்னணியும் கூட்டு எதிர்க்கட்சியான மகிந்த ஆதரவு அணியும் எதிராக வாக்களித்தன.

நேற்றைய வாக்களிப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தன், மகிந்த ராஜபக்ச உட்பட 13 பேர் வாக்களிப்பின்போது சபைக்கு சமூகமளிக்கவில்லை.

கடந்த மாதம் 16ஆம் திகதி நடத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டதுடன், அதற்கு ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இதற்கான விவாதங்கள் கடந்த 10,11,13, 14,15, 16ஆம் திகதிகளில் நடத்தப்பட்டதுடன் அதற்கான வாக்கெடுப்பில் கூட்டு எதிர்க்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகியன எதிராக வாக்களித்திருந்தன.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், நாடு முன்னோக்கி செல்வதை இலக்காக கொண்டு வரவு செலவுத் திட்டம் இதுவென பொருளாதார நிபுணர்கள் பாராட்டியிருந்தனர்.

மங்கள சமரவீரவின் வரவு செலவுத் திட்ட யோசனை ஐக்கிய நாடுகள் சபையாலும் வரவேற்கப்பட்டிருந்தது.

தொழில்முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள பலமான நீலப் பசுமை வரவு செலவுத் திட்டம் ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக, வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தன்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தரவதிவிடப் பிரதிநிதி தனது டுவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் நீல பசுமை வரவு செலவுத் திட்டம் தொழில் முனையும் இலங்கை என 2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனையானது இலங்கை வரலாற்றில் குறைந்தளவு திருத்தங்களுக்கு உட்பட்ட வரவு செலவுத் திட்டமாக பதிவாகியுள்ளது. (ம)

## தமிழர்களின் ஆயு...

முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் மட்டக்களப்பில் ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி போட்டியிடுவது தொடர்பாக ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் உள்ள கட்சி காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை நலினப்படுத்துவதாக தமிழரசு கட்சியின் போக்கு அமைந்திருக்கின்றது.

எனவே தமிழர் விடுதலைக்கூட்டணியுடனான கூட்டு என்பது தமிழர்களை பலப்படுத்துவதற்கான கூட்டே தவிர யாரையும் பலவீனப்படுத்துவதற்கான கூட்டு அல்ல.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணிக்கும் தமிழரசு கட்சிக்கும் இடையே ஏற்பட்ட கொள்கை ரீதியான முரண்பாடுகளும் தமிழரசுக் கட்சியின் ஒரு சிலரது செயற்பாடுகள் காரணமாகவும் மேலும் பல விடயங்களை உள்ளடக்கி கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பல கட்சிகள் ஒன்று சேர்ந்து கட்சி உருவாக்கியுள்ளோம்.

இதன் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர முன்னணி, ஜனநாயக தமிழரசு கட்சி, புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழவர் ஜனநாயக அமைப்பு என 5 கட்சிகளும் ஒன்றிணைந்து வடக்கு கிழக்கில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவதாக தீர்மானித்துள்ளோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை ஏறாவூர் பற்று பிரதேச சபை, ஏறாவூர் நகரசபை, கோறளைப்பற்று பிரதேச சபை, மண்முனைப்பற்று பிரதேச சபை ஆகிய 4 சபைகளுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியிருக்கின்றோம்.

7 சபைகள் உட்பட 1 பிரதேச சபைக்கும் எதிர்வருகின்ற குறிப்பிட்ட தினங்களுக்குள் கட்டுப்பணத்தை செலுத்தி தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளோம்.

எமது கட்சியை பொறுத்தமட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக மண்முனைப்பற்று, பிரதேச சபையில் 2 இடங்களும், ஏறாவூர் நகரசபையில் இரண்டு இடங்களும், வாழைச்சேனையில் 3 இடங்களிலும் செங்கலடியில் ஒரு இடமும், பட்டிப்பளை பிரதேச சபையில் ஒரு இடமும், கோறளைப் பற்று மேற்கு ஓட்டுமாவடியில் ஒரு இடத்திலும் போட்டியிடவுள்ளது.

அதேவேளை கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையில் வடமுனை., உன்னிச்சை, ஊத்துச்சேனை. வாகனேரி, அதேபோல பட்டிப்பளை பிரதேச சபை கெவிலியாமடு, செங்கலடியில் மங்களகம, வாழைச்சேனையில் இரண்டு வட்டாரங்கள், ஏறாவூரில் இரண்டு வட்டாரங்கள், ஆரையம்பதியில் இரண்டு வட்டாரங்களில் என இந்த 6 பிரதேச சபைகளிலும் தமிழ் வேட்பாளர்கள் சில இடங்களில் இல்லாமல் போகக்கூடிய நிலை இருக்கின்றது.

எனவே இந்த உள்ளூராட்சி சபைகளிலுள்ள தமிழ் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக தமிழ் கட்சிகளுடன் பேசி உடன்படிக்கைக்கு வரத்தயாராக இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒட்டு மொத்த தமிழ் மக்களும் சேர்ந்து ஒரு சரியான தலைமைத்துவத்தை உருவாக்கினால் மட்டுமே தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை நூறு வீதம் பாதுகாக்கமுடியும்.

எனவே தமிழர் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய கட்சிகள் கிழக்கு மக்களின் கருத்தை வலுவடைய செய்வதற்கான செயற்பாட்டை எந்த விட்டுக் கொடுப்பையும் விட்டுக் கொடுக்க தயாராக இருக்கின்றோம் ஆனால் கொள்கையை விலைபேசி விற்பதற்கோ ஒரு சிலரின் நலனை பாதுகாக்கவோ எந்த சந்தர்ப்பதிலும் இடமளிக்கமாட்டோம் என மேலும் தெரிவித்தார். (ம)

## ஏனைய மாகாணத்தை...

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் சபையின் முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவுசெலவுத்திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றினார்.

வரவு செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதம் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏனைய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவதாக சபையில் உரையாற்றிய வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதற்கு பதில் அளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிடைப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் எழுத்து மூலமான பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதிகள் பரிசோதிக்கப்பட்டன. தகுதியை கொண்டிருந்த பெரும் எண்ணிக்கையானோருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் கீழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 40 பேரும், கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு 74 பேரும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு 27 பேருக்கும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்டதான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் 80 பேருக்கும் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 151 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்து கொண்ட நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன,

2015 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை மூன்று இலட்சம் பேருக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். தேர்தல் காலப்பகுதியில் வழங்கப்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க உரையாற்றுகையில் ,

புதிய ஊடகக் கலாசாரத்தை கட்டியெழுப்பும் சூழ்நிலையில் நாம் தற்பொழுது இருக்கிறோம் என்று தெரிவித்தார். சமூகத்தின் எதிர்கால நலன் கருதி, ஊடகங்கள் கொண்டுள்ள அதிகாரங்கள் குறித்து கூடுதலான கவனம் செலுத்த வேண்டுமென்றார். அரச ஊடகங்களைப் போன்று தனியார் ஊடகங்களும் அரசியல் மயத்தை நோக்கி சென்று கொண்டுள்ளன. அரசியல் ரீதியிலான செய்திகளை இன்று ஊடகங்களில் காணக்கூடியதாக உள்ளது. சீர்குலைந்திருந்த பிரஜைகள் சமூகத்தை சிறப்பான சமூகமான மேம்படுத்துவதற்கு ஊடகங்களைப் போன்று ஊடக உரிமையாளர்களும் செயற்பட வேண்டும்.

சமூகத்தை ஊடகங்கள் தரம் குறைந்த வகையில் முன்னெடுக்கும் ஊடகக் கலை தற்போது உருவாகியுள்ளது. நாட்டில் புத்திஜீவிகளைக் கொண்ட அரசியல் பொருளாதார கலந்துரையாடல்கள் இடம்பெறுவதில்லை. பொதுமக்களை தரம் குறைந்த வகையில் இட்டுச் செல்வதற்கு சில ஊடகங்கள் முயற்சிக்கின்றன. இவ்வாறான நிலையை நீக்குவது ஊடகங்களின் பொறுப்பாகும் என தெரிவித்தார். (ம)

## ஊழல் மோசடி குறித்து...

நாடாளுமன்றத்தில் வைத்து தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றவர்கள் தனிப்பட்ட முறையில் எந்த மோசடியிலும் ஈடுபடாமல் இருந்தாலும் அவர்கள் ஊழல் மோசடியில் இருந்து விடுபட்டவர்களாக முடியாது.

அரசாங்கம் ஊழல் செய்தவர்களையும் ஊழல் மிக்க அரசாங்கம் ஒன்றையும் பாதுகாக்க முயற்சிக்குமானால், அதன் பொறுப்பை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் ஏற்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஊழல்தாரர்களை பாதுகாப்பதற்கான முயற்சிகளை அரசாங்கத்தின் சில தரப்பினர் மேற்கொண்டதுடன், ஊழல்களை கண்டுகொள்ளாமல் விடுகின்றவர்களையும் அவதானித்துள்ளனர்.

எனவே தற்போதைய அரசாங்கத்திற்கு ஊழல் மோசடிகள் தொடர்பில் பேசுவதற்கு தர்க்க ரீதியான உரிமை கிடையாது.

ஊழல் மோசடியில் ஈடுபட்ட ஒருவரை தண்டிப்பதற்கு ஊழல் அற்ற ஒரு அரசாங்கத்திற்கே உரிமையுள்ளது.

எனவே கடந்த அரசாங்கத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படுகின்றவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு முன்னர் தற்போதைய அரசாங்கத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். (ம)

## கடலில் மூழ்கி...

பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மகாதேவன் பிள்ளை கஜானந்தன் (வயது 69) என்ற வயோதிபரே மரண மடைந்தவராவார்.

வழமையாக மரணச் சடங்கிற்கு சென்றுவிட்டு வரும் அவர் தமது வீட்டிற்கு அருகாமையில் உள்ள வியாபாரி மூலைக் கடலில் குளித்துவிட்டு வருவதாகவும் அவ்வாறே நேற்று இடம்பெற்ற மரணச் சடங்கிற்கு சென்றுவிட்டு வந்த அவர் கடலில் குளித்த போது நீரில மூழ்கியதாகவும் கூறப்படுகிறது.

அருகில் நின்றிருந்த சிலர் அவரைக் காப்பாற்ற முயற்சி எடுத்தும் அது பலனளிக்கவில்லை. மரணமடைந்தவரின் சடலம் நேற்று மாலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கஞ்சா...

நெளுக்குளம் குழுமாட்டுச்சந்தி, காத்தான் கோட்டம், தாஸ்கோட்டம், ஊர்மிளா கோட்டம், கூமாங்குளம் போன்ற பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு கஞ்சா விற்பனைசெய்வதாகநெளுக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம். எஸ். அத்தநாயக்க தலைமையில் பொலிஸார் குறித்த நபரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நேற்று முன்தினம் குழுமாட்டுச் சந்தி கள்ளுத் தவறணைக்கு அருகாமையில் கஞ்சாவியாபாரத்தில் ஈடுபட்டுகொண்டிருந்த சமயம் காத்தான கோட்டம் பகுதியை சேர்ந்த 32 வயதுடைய மகேஸ்வரராஜா (டிமேஸ்) என்பவரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து ஒரு பொதியில் 10 கிராம் வீதம் பொதி செய்யப் பட்டிருந்த 5 பொதிகளை பொலிஸார் கைப்பற்றியதுடன் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் ஏதும் இடம் பெறும் பட்சத்தில் நெளுக்குளம் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்திற்கு (024-3242467) தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-250)

---

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மனிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us cnrworldwideexpress
(C-617)

---

## நியூ பிறைற் கல்வி நிலையம்

(இல 95, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)

### புதிய கல்வியாண்டு - 2018

தரம் 06 முதல் O/L வரை
தமிழ்மொழி மூல, ஆங்கில மொழிமூலமான வகுப்புக்கள் ஆரம்பம்.
2017.12.10 ஞாயிற்றுக்கிழமை
தரம் 9 - 11 காலை 10 மணி
தரம் 6 - 8 மாலை 3.00 மணி
2017 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.
குறிப்பு : லிகிதர் (பெண்) தேவை (A/L) படித்தவர்கள் விரும்பத்தக்கது. (மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)
(1665) தொடர்புகளுக்கு : 077 224 7781

---

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (1641)

---

## GENIUS Maths and Science

Group Classes/ Genius are made not born

தரம் 6–11 வரையான தமிழ்மொழி மூல வகுப்புக்கள் English Medium Classes

கணிதம் S.சுதர்சன் (B.Sc) 0777589826

விஞ்ஞானம் K.கலைவாணன் (B.Sc.UG) 0713438442

தட்டாதெரு சந்தி, அரசடி றோட், யாழ்ப்பாணம். (1672)

---

## NEW COLLEGE OF SCIENCE

Navalar Road, Jaffna

ENGLISH MEDIUM CLASSES
Grade 6-11 11.12.2017 5.00 P.M
Science:-A.Aravinthan (B.Sc)
Maths:-R.S.Mayooran (N.D.T)
T.P:-0771275275 (1651)

---

## IT Spot

185, V.M. றோட், பருத்தித்துறை.

## ICT

ஆரம்பம் : 03.01.2018
ஆங்கிலம், தமிழ் மொழிமூல வகுப்புக்கள்

தரம் - 10,11 & A/L வடமராட்சியில்

க.செந்தூரன் (B.Sc (Hons) BIT)
077 087 1456
(1647)

---

## வீடு விற்பனைக்கு

பாலவுடையார் வீதியில் (புதுமை மாதா கோவிலுக்கு அருகாமையில்) உள்ள வீடு விற்பனைக்குண்டு. (1567)
தொடர்புகளுக்கு : 077 005 5607

---

## வீடு வாடகைக்கு தேவை

வண்ணார் பண்ணை, கொக்குவில் பகுதிக்கு அண்மையில் சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவைப்படுகிறது (C-551)
தொடர்புகளுக்கு : 077 6900564

---

## காணி விற்பனைக்கு

பிறவுண் வீதியில் ஆடியபாத வீதிக்கு அண்மையில் 1 பரப்பு 16 குளிகாணி விற்பனைக்குண்டு. (1662)
தொடர்புகளுக்கு : 0759366108


---

## SCIENCE GROUP CLASS

Tamil and English Medium
Theater Lane Chankanai
P.Shobiya (Faculty of Science)
0713438442 (1672)
தியேட்டர் ஒழுங்கை, சங்கானை

---

## உங்களின் வெளிநாட்டு பிரயாணம் சம்பந்தப்பட்ட அனைத்து தேவைகளுக்குமான தீர்வுகள் தற்போது யாழ்ப்பாணத்திலேயே....



இலங்கையின் முன்னணி மற்றும் அனுபவம் வாய்ந்த நிறுவனங்களில் ஒன்றான Hemas Travels இன் யாழ்ப்பாணக் கிளை இல.14, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது.

**எமது கிளையின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய சேவைகள்**

- அனைத்து நாடுகளுக்குமான விசா மற்றும் விசா சம்பந்தப்பட்ட ஆலோசனைகள் (Tourist, Business, Family Visit, Settlement and all Other Categories)
- அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்கள் - Air Tickets
- அனைத்து நாடுகளுக்குமான ஹோட்டல் முன்பதிவுகள் - Hotel Reservations
- அனைத்து நாடுகளுக்குமான பிரயாணக் காப்புறுதி - Travel Insurance
- சுற்றுலா வசதிகள் - Tour Packages
- கப்பல் சுற்றுலா வசதிகள் - Cruise Packages

Hemas Travels (PVT) ltd
(யாழ்ப்பாண கிளை)
இல.14, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 4501 000 / 077 4387 521
www.hemastravels.com
HEMAS (1658)

---

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை (C-609)
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | நீர்வேலி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை

---

## COllege of Science

(11/1 Eachchmoddai Beach road, Jaffna)

தமிழ்மொழி மூல, ஆங்கில மொழி மூல விஞ்ஞான குழு வகுப்புக்கள்
(Science Group Class)
தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை
ஆரம்பம்:13.12.2017 (புதன்கிழமை)
மாலை 6.30 மணி
ஆசிரியர்:-S.Kobinath (1665)
(St.Patrick's College)
தொடர்புகளுக்கு:-0772259542/ 0772247781
English Literature, Commerce ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
English Literature:-V. தயாகரன் (யா/வைத்தீஸ்வரா கல்லூரி)
Commerce:-K.கிரிதா

---

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- [illegible]

UK-550/=Kg
DELIVERY IN 3-5 DAYS
V2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

---

## வாடகைக்கு

சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கச்சேரி என்பனவற்றுக்கு அருகாமையில் சகல வசதியுடன் கூடிய (இணைந்த குளியலறை, போதியளவு வாகனத்தரிப்பிடம் மற்றும் A/C வசதியுடன்) 5 அறைகளைக்கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு உள்ளது. மேலதிக விபரங்களுக்கு
(1623) T.P :- 0777 776 004

---

## விசேட விலைக்கழிவு

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்த சகல விதமான உடுப்பு வகைகளையும் மிக மலிவு விலையில் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
(நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு இவ் விலைக்கழிவு வழங்கப்படுகின்றது.)
தொடர்புகளுக்கு : 077 0055 607
69. வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (1616)

---

## புதிய வகுப்புக்கள் 'The World of Hopes'

- "மெல்லக் கற்கும்" மாணவர்களிற்கு மட்டுமேயானது.
- தரம் 4, தரம் 5 இற்கான புதிய குழு வகுப்புக்கள் ஆரம்பம்.
- புலமைப் பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டது.
- ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- [illegible]

மேலதிக விபரங்களுக்கு : 075 333 9904
இல : 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-605)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 146

வள்ளுவர் ஆண்டு 2048 | 10.12.2017 | தொலைபேசி : 021 222 3378







## உள்ளூராட்சி சபைத் தேர்தல்

# வெல்லப் போவது யார்?

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# தமிழர்களின் இன்றைய அவலநிலைக்கு த.தே.கூட்டமைப்பே மூலகாரணம்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு முதலில் சிதறுண்டு சின்னாபின்னமான பெருமை தமிழர் தரப்பிற்கே உண்டு. இலங்கையின் தேர்தல் மட்டங்களில் மிகவும் அடிமட்டத் தேர்தல் உள்ளூராட்சி சபைக்கானது என்று கூறிக்கொள்ளலாம்.

ஓர் அடிமட்டத் தேர்தலின் போது, கூட தமிழர் தரப்பு ஒற்றுமையாக நின்று நிலைக்க முடியவில்லை எனும் போது தமிழ்மக்களின் உரிமை விடயத்தில் இவர்கள் எங்ஙனம் உறுதியாகவும் திடமாகவும் நின்று நிலைப்பர் என்று நம்ப முடியும்.

ஆக, ஈழத் தமிழ் மக்களின் இன்றைய முதன்மைப் பிரச்சினை சரியான அரசியல் தலைமை இன்மை என்பது உறுதியாகின்றது.

விடுதலைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் தமிழ்மக்களைச் சரியான பாதையில் வழிப்படுத்திச் செல்வதற்கு உறுதியான, நேர்மையான தமிழ்த் தலைமை இருந்திருக்குமாயின் தமிழர்களின் உரிமைப் பிரச்சினை என்பது மிகச் சுலபமாகத் தீர்ந்திருக்கும்.

வன்னிப் பெரு நிலப் பரப்பில் போர்க்குற்றம் நடந்துள்ளது. அங்கு தமிழின அழிப்பு இடம் பெற்றுள்ளது. சிறுவர்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர் என்பதற்கான அத்தனை ஆதாரங்களும் இருந்தும் எதுவும் செய்ய முடியாமல் போனமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே முக்கிய காரணம் என்றால் அதில் எந்தத் தவறும் இருக்க முடியாது..

விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தில் தமிழ் மக்களுக்கான பாதுகாப்பு இருந்தது. விடுதலைப் புலிகளின் போராட்ட உன்னதம் உலகம் முழுவதையும் எம்பக்கம் திருப்பியிருந்தது. எனினும் சர்வதேச நாடுகள் சிலவற்றின் சூழ்ச்சியும் போர் விதிக்கு முரணான ஆயுதப் பிரயோகமும் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விட, சுமார் 30 ஆண்டு காலப் போராட்டம் பேரிழப்பு என்பதையே தந்து போனது.

ஆயுத பலம் இல்லாமல் போக, தமிழ்மக்கள் அனுபவித்த இழப்புக்கள் ஒன்றுதான் அவர்களுக்கான பலம் என்றாயிற்று.

இருந்தும் இழப்பைப் பலமாக்கி எங்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு சரியான அரசியல் தலைமை தமிழ் மக்களிடம் இல்லாமல் போனதன் காரணமாக, தமிழர்கள் எல்லாவற்றையும் தொலைக்க வேண்டியவர்களாக ஆகினர்.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை இன அழிப்புச் செய்தனர் என்று சர்வதேச பொது அமைப்புகள் கூறும் போது அதற்கு உரம் கொடுக்காமல் நாம் இழந்து விட்டோம்.

எனவே எதிர்காலத்தில் ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சென்று அவர்கள் தருவதை ஏந்திப் பெற்று பிழைப்பு நடத்துவதுதான் ஒரே வழி என்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முடிவு செய்தது.

30 ஆண்டுகாலப் போராட்டம்; அதற்கு முன்பான அரசியல் தலைமை என்ற மிகப் பலமான தமிழர் சக்திகள் எல்லாம் இல்லாது போக, ஆட்சியாளர்களிடம் ஏந்திப் பெற்று வாழும் ஒரு அரசியல் தலைமையே தமிழர்களுக்குக் கிடைத்தது. கொழும்பை மையப்படுத்திய அரசியல் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளர்களுடன் சேர்ந்து போவதை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்ததுடன் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்கையும் அவர்கள் கொண்டிருந்ததால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான எந்த அமைப்புக்களும் தமிழ் மண்ணில் இருக்கக்கூடாது என நினைத்தனர்.

இதனால் தமிழர் தாயகத்தில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கவோ அன்றி தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவோ, காணாமல் போனவர்கள் பற்றி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரவோ கூட்டமைப்பினர் விரும்பவில்லை.

மாறாக அரசாங்கத்துடன் இணைந்து போய் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் தமிழர் தரப்பில் தமக்கு ஏற்படும் எதிர்ப்புக்களை வெல்வதற்கு அரச ஒத்துழைப் பையும் பெற்று விடுவதே அவர்களின் அரசியல் இராஜதந்திரமாக இருந்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு தமிழர் தரப்பு உடைந்து சின்னாபின்னப்படுகின்றது எனில் அதற்கு காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றால் அதில் எந்தத் தவறும் இருக்கமுடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாம் கூறுவதற்கு அவர்கள் மீது எமக்கு தனிப்பட்ட காழ்ப்புணர்வோ அன்றி உள்நோக்கமோ கிடையாது.

மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழ்மக்களின் வாக்குகளைப் பெற்று அவர்களின் அரசியல் தலைமை என்று புறப்பட்ட நீங்கள் தமிழ்மக்களிடையே- தமிழ்த் தரப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்க வேண்டுமல்லவா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிந்து தமிழ்மக் களின் பலம் ஒற்றுமை என்பதை நிலை நிறுத்தி அதனைக் காப்பாற்றியிருக்க வேண்டுமல்லவா? கூட்டமைப்பு என ஒன்று சேர்ந்து விட்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை வெளியேற்றுவது, தமிழரசுக் கட்சியின் வாக்குப் பலத்தால் ஏனைய கட்சிகள் சீவியம் நடத்துகின்றன என்பது போல நடந்து கொள்வது, கூட்டமைப்பின் அரசியல் தீர்மானங்களை தனித்து ஒரு சிலர் மட்டும் எடுப்பது, சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்வது, தமிழ்மக்களின் வாக்குப் பெற்றுப் பதவிக்கு வந்துவிட்டு சைவசமயத்தை அழிப்பதற்கு திட்டம் தீட்டுவது, மதவாதக் குழுவை தனது சக்தியாக வைத்துக் கொண்டு சைவத்தையும் சைவ சமயம் சார்ந்த பேராசிரியர்கள், அதிகாரிகள், சமயப் பெரியார் களைத் தூற்றி இணையத்தளங் களில் எழுதுவது என இவை எல்லாம் எந்த வகை யில் நியாயமாக முடியும்.

ஆக, இன்று தமிழினம் இத்துணை தூரம் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிப்பதற்கும் தமிழ்த் தரப்புகள் சின்னாபின்னப்பட்டு உடைந்து நிற்பதற்கும் முழுக்காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்பதே உண்மை.



## மதவாதிகளின் ஒரு கூட்டம் சைவத்தை இழிவுபடுத்துகிறது

விதுரன்

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்தி லிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப் பம் என்று வாத்தியார் அறிவி க்க அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தென்பகுதியை விட, வடக்குக் கிழக்கில தான் சூடு பிடித்திருக்குப் போல. மூப்பர் மெல்ல ஆரம்பித்தார்.

இன்றைக்கு ஆலடி மாநாட் டில தேர்தல் சூடு கிளப்பப் போகுது என்று மாநாட் டுத் தலைவர் வாத்தியார் வைத்திலிங்கம் தனக்குள் நினைத்துக்கொண்டார். எனினும் தேர்தல் பற்றிக் கதைக்கத் தானே வேணும் என்பதால் நடப்பதைப் பார்ப்பம் என்று நினைத்து அமைதியாக இருந்தார். தேர்தல் சூடு பறக்குது எண்டு மூப்பர் சொன்னது தான் தாமதம் விதானை யார் விசுவலிங்கத்தின் கண்கள் நெருப்பாகின.

**விதானையார்:** உள்ளூ ராட்சித் தேர்தல் என்றவு டன எப்படியெல்லாம் கூத்து நடக்குது பார்த்தியளோ.

**சாத்திரியார்:** அண்மை யில தென்மராட்சியில நடந்த கூட்டமொன்றில சுமந்திரன் எம்.பிக்கும் அருந்தவபாலனுக்குமிடை யில கடும் வாக்குவாதம் நடந்தது. அருந்தவபாலன் ஒரு கருத்தைக் கூறிய போது அங்கிருந்தவர்கள் கைதட்டி கரகோசம் செய்த னர். இதைப்பார்த்த சுமந்தி ரன் எம்.பி. கைதட்டுறதுக்கு ஆட்களைக் கூட்டிக்கொ ண்டு வந்திருக்கிறார் அருந்த வபாலன் எண்டு சொன்ன வரல்லோ...ஆனால் இப்ப..

**கங்காணி:** என்ன சாத் திரியார் சொல்லுறியள் ஆனால் இப்ப எண்டால்...

**சாத்திரியார்:** உள்ளூரா ட்சி சபைத் தேர்தலில சாவகச்சேரி நகர சபைக் கான கட்டுப்பணம் செலுத் திய குழுவில அருந்தவபா லனும் சயந்தனும் சேர்ந்து போயிருக்கினம். அதுமட் டுமல்ல கூட்டமைப்பின்ர தேர்தல் குழுவில அருந்தவ பாலனையும் ஒரு முக்கிய பிரதிநிதியாக அறிவித்தி ருக்கினம்.

**கங்காணி:** அட சங்கதி அப்படியோ, அருந்தவபா லனை ஓரங்கட்டி சயந் தனை முன்னிறுத்த நினைத்த வியள். ஆனால் இப்ப அரு ந்தவபாலனை நீக்கினால் தென்மராட்சி மக்கள் கவுட் டுக் கொட்டிப் போடுவி னம் எண்டு கூட்டமைப் பார் பயந்து போயிற்றினம் போல.

**விதானையார்:** அப்ப இரண்டரை வருடப் பாராளு மன்றப் பதவிக் காலத்தை அருந்தவபாலனுக்குக் கொடுப் பினம்தானே.

**மூப்பர்:** பின்ன... குடுக் காமல் விட்டால் எல்லாம் அம்போ என்றாகி விடுமல்லோ.

**பண்டிதர்:** அது சரி. தெரியாமல்தான் கேட்கிறன் இப்பவும் கூட்டமைப்பு இருக்குதோ.

**வாத்தியார்:** அப்பவும் கூட்டமைப்பு என்பது இலங் கைத் தமிழரசுக் கட்சி தானே. அப்ப எந்தக் கட்சி வெளி



## கூட்டமைப்பின் யாழ்.மாநகர மேயர் வேட்பாளர் யார் என்று தெரியுமோ?

யேறினாலும் தமிழரசுக் கட்சியின்ர இன்னொரு பெயர் கூட்டமைப்பு என்பது போல சனங்கள் நினைப்பினம்.

**மூப்பர்:** என்ன இருந் தாலும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆனோல் ட்டை கூட்டமைப்பு இப்படி ஏமாற்றியிருக்கக்கூடாது.

**விதானையார்:** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:** யாழ்ப்பாண மாநகர சபையின்ர முதல்வர் பதவி ஆனோல்ட்டுக்குத் தரப்படும் எண்டு அப்பவே அவருக்கு கூட்டமைப்பின்ர முக்கிய எம்.பி. ஒருத்தர் உத்தரவாதம் கொடுத்தவர். ஆனால் இப்ப இன்னொருத் தருக்கு முதல்வர் பதவி தரலாம் எண்டு கூட்டமைப் பின்ர அந்த முக்கிய எம்.பி. கூறியிருக்கிறாராம்.

**கங்காணி:** நான் நினைக் கிறன் முந்தின எம்.பி சிறிலுக்குத்தான் யாழ். மாநகர மேயர் பதவியைக் கொடுக்கப் போகினம் எண்டு.

**வாத்தியார்:** என்னவோ எனக்குத் தெரியல்ல. நான் அறிந்தமட்டில மூத்த ஊடக வியலாளர் என். வித்தியாதர னுக்குத்தான் மேயர் பதவி.

**பண்டிதர்:** ஒவ்வொருத ரும் ஒவ்வொருதராகச் சொல் லுறியள். நான் கேள்விப்பட் டது யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் ஜெயசேக ரத்துக்குத்தான் மேயர் பதவி எண்டு.

**பண்டிதர்:** என்ர முருகா ஒரு மேயர் பதவியை எத்தனை பேருக்குத்தான் தரலாம் எண்டு சொல்லப்ப டுகுது பார்த்தியளோ.

**விதானையார்:** என்ன இருந்தாலும் யாழ்ப்பாண மாநகர சபையின்ர முதல்வர் வேட்பாளர் யார் என்பதை கூட்டமைப்பு முதலிலேயே அறிவிக்க வேணும். மக் களை ஏமாற்றுகிறமாதிரி நடக்கக்கூடாது.

**பண்டிதர்:** கூட்டமைப் பைக் குறை சொல்லாதீங்க. எங்கட மக்கள் நிதானமாக இரு ந்தால் எல்லாம் சரியா வரும்.

**வாத்தியார்:** என்ன பண்டிதர் ஐயா சொல்லுறியள்.

**பண்டிதர்:** ஈ.பி.டி.பி யைச் சேர்ந்த சி.தவரா சாவை தமிழரசுக் கட்சி தன் னோட சேர்த்துக்கொள்ளப் போகுதாம்.

**கங்காணி:** அப்ப கூட் டமைப்பில ஈ.பி.டி.பியும் அங்கம் பெறுகுது எண்டு சொல்லுறியள்.

**விதானையார்:** கூட்ட மைப்பில ஈ.பி.டி. அங்கத்து வம் பெறல்ல. இலங்கைத் தமிழரசுக் கட்சியிலதான் ஈ.பி.டி.பி. சேருது.

**சாத்திரியார்:** அட நாசமறுப்பு எதற்கெடுத் தாலும் டக்ளஸ் தேவானந் தவை எதிர்க்கிற தமிழரசுக் கட்சியும் அதில இருக்கிற எம்.பிக்களும் ஈ.பி.டி.பி. தவராசாவை தங்கட கட்சி யில சேர்க்க ஓமாமோ.

**மூப்பர்:** தமிழ்மக்கள் தங்களுக்குத்தான் வாக்களிப் பினம் எண்ட நம்பிக்கை இருக்கும் வரைக்கும் தமிழ ரசுக் கட்சி எதுவும் செய்யும்.

**சாத்திரியார்:** வாத்தி யார் நான் தெரியாமல்தான் கேட்கிறன். இணக்க அரசி யல் என்பதை முதன் முத லில் சொன்னவர் டக்ளஸ் தேவானந்தா. இப்ப டக் ளஸ் தேவானந்தா சொன்ன தைத் தானே இலங்கைத் தமி ழரசுக் கட்சியும் செய்யுது.

**மூப்பர்:** டக்ளஸ் தேவா னந்தாவோட மிக நீண்ட காலம் இருந்த தவராசாவை தங்கட கட்சியில சேர்க்கி னம். அதேநேரம் டக்ளஸ் தேவானந்தாவைக் குறை சொல் லுகினம் எண்டால் இவர்க ளின்ர கொள்கை கோட்பாடு என்ன மாதிரி இருக்குது.

**வாத்தியார்:** நான் நினைக்கிறன். இனிமேல் டக்ளஸ் தேவானந்தாவை தமிழரசுக் கட்சி குறை சொல்லாது. அப்படி ஏதும் குறை சொன்னால் அப்ப தவராசாவுக்கும் இது பொருந்துமோ எண்டு சனங்கள் கேட்குமல்லோ.

**பண்டிதர்:** அட, இப்பிடி யும் ஒரு சங்கதி இருக் குத்தான்.

**விதானையார்:** நான் நினைக்கிறன் இனி தமிழ ரசுக் கட்சிக்கும் ஈ.பி.டி. பிக்கும் தான் கடும் போட்டி நிலவும் எண்டு.

**கங்காணி:** எல்லாம் இருக்கட்டும். நடக்கப் போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில, தமிழ் மக்கள் பேரவையின்ர நிலைப்பாடு என்ன?

**வாத்தியார்:** தமிழ் மக்கள் பேரவை மிக நிதானமாக இருக்குது. பேரவையில அங்கத்துவம் பெற்றுள்ள அரசியல் கட்சிகள் தேர்தலில போட்டி யிடுகிற உரிமை அவர்க ளுக்கு உண்டு. அந்த உரி மையில பேரவை தலையிட மாட்டாது எண்டு மிகத் தெளிவாகப் பேரவை அறிவித்துப்போட்டுது.

**பண்டிதர்:** என்னைப் பொறுத்தவரை தமிழ்மக் கள் பேரவை தேர்தல் களத்தில குதித்திருந்தால் வேற ஒருத்தரும் தலை நிமிர்த்தியிருக்க முடியாது.

**மூப்பர்:** அதெண்டால் உண்மைதான்.

**சாத்திரியார்:** எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வ ரன் ஐயா வாய் திறந்து இவர்களுக்குத்தான் வாக்க ளியுங்கள் எண்டு சொல் லுவாராக இருந்தால், எங்கட சனங்கள் முழுக்க அதன்படி தான் செயற்ப டுவினம்.

**விதானையார்:** முதல மைச்சர் அப்படியேதே னும் சொல்லுவாரோ.

**சாத்திரியார்:** அவர் சொல்லமாட்டார். நேர்மை யான, நீதியான வேட்பா ளர்களுக்கு வாக்களியுங் கள் எண்டு சொல்லக்கூடும்.

**வாத்தியார்:** என்ன இருந்தாலும் தேர்தலில ஈடுபடுகிறதில்லை என்ற தமிழ் மக்கள் பேரவை தன்ர கொள்கையை மாற்ற வேணும். இல்லையெண் டால் பேரவையின்ர ஏற்பாட் டில ஒரு புதிய அரசியல் கட் சியை ஆரம்பிக்க வேணும். இதைச் செய்யாவிட்டால் எங்கட தமிழ் அரசி யல் கட்சிகள் அனைத் தும் குழம்பியடித்து கூத் துப் போடத்தான் செய் வினம்.

இப்படி வாத்தியார் கூற அதனை அங்கீகரிப்பது போல ஆலடிப்பிள்ளை யார் கோவில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்த வர்கள் எழுந்து கோவி லுக்குச் சென்றனர்.

ஆதித்தன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## பட்டுச் சட்டை போட்ட பூச்சி!



அந்த அடர்ந்த காட்டில திருவிழாவுக்கு ஏற்பாடு நடந்துச்சு. சிங்க ராஜாவுக்குக் குட்டிகள் பிறந்ததை முன்னிட்டு நடக்கப்போகும் பெரிய்ய்ய திருவிழா அது. ஆடல் பாடல் பல்வேறு கலை நிகழ்ச்சிகளோடு நடக்கப்போகும் திருவிழான்னா சும்மாவா? எல்லா விலங்குகளும் ரொம்ப குஷியாகிடுச்சு. 'மத்தவங்களைவிட நாம அழகா தெரியணும், அசத்தலா பெர்பாமன்ஸ் செய்யணும்னு பயங்கரமா பிளான் போட ஆரம்பிச்சுட்டாங்க. அதுக்காக விதவிதமா புதுப்புது டிரெஸ்களுக்கு தையல்காரரான தூக்கணாங் குருவிகிட்டே ஆர்டர் குவிய ஆரம்பிச்சுது.

அதே காட்டின் மரத்தில் ஒரு குட்டிப் புழுவும் இருந்துச்சு. அதுக்கு அப்பா, அம்மா இல்லே. அதனால, புதுத் துணியை வாங்கிக் கொடுக்கவும் ஆளில்லை.இருந்த பழைய டிரெஸ் ஆங்காங்கே கிழிஞ்சிருந்துச்சு. மத்த எல்லா விலங்குக் குட்டிகளும் புழுவைப் பார்த்து கிண்டல் பண்ணிச்சுதுங்க.

"நாங்க எல்லோரும் திருவிழாவுக்குப் போயிட்டா உனக்குத் தனியா இருக்க பயமா இருக்குமே என்னசெய்யப்போறே?"எனக் கேட்டுச்சு அணில்பிள்ளை.

"அவன் ஏன் தனியா இருக்கப்போறான்? அவனும் திருவிழாவுக்கு வருவானே" என்றது கிளிக்குஞ்சு.

"இந்தக் கிழிஞ்ச டிரெஸ்ஸோடு வந்தா துரத்தி அடிச்சிடுவாங்க" என்று சிரித்தது முயல்குட்டி.

(தொடரும்...)

## விடுகதைகள்

1. கண்ணில் தென்படுவான், கையில் பிடிபட மாட்டான். அவன் யார்?

2. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?

3. கழுத்து உண்டு, தலையில்லை உடல் உண்டு, உயிர் இல்லை, கையுண்டு, விரல் இல்லை. அது என்ன?

4.ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது. அவை யாவை?

5. ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?

6. அண்டமென்ற பெயரும் உண்டு. அடைகாத்தால் குஞ்சுமுண்டு. அது என்ன?

7.வந்தும் கெடுக்கும், வராமலும் கெடுக்கும். அது என்ன?

8. பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?

9.முழு உலகமும் சுற்றி வரும். ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?

10. வளைந்து நெளிந்து செல்பவள் வழியெங்கும் தாகம் தீர்ப்பாள் அவள் யார்?

விடைகள்:
1. புகை 2. வியர்வை 3. சட்டை 4.எறும்பு
5. கொடி 6. முட்டை 7. மழை 8. பெற்றோல்
9. முத்திரை 10. ஆறு அல்லது அருவி

கி.குவலயா
திருநெல்வேலி.

## உள்ளம் குளிர அருள்பவர்




தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்பார்கள். இதனை நிலைநாட்டும் விதத்தில் சிவனே தாயாக அருள்புரியும் தலம் திருச்சி. இத் தலத்திலுள்ள சிவன், ரத்னாவதி என்னும் கர்ப்பிணி பெண்ணுக்கு பிரசவம் பார்க்க அவளுக்கு தாய் போல உதவியவர் என்பதால் "தாயுமானவர்" எனப் பெயர் பெற்றார். சமஸ்கிருதத்தில் "மாத்ருபூதேஸ்வரர்" என்று அழைப்பர்.

திருச்சி மலைக் கோட்டையில் வீற்றிருக்கும் தாயுமானவரை மனதில் நினைத்தாலே உள்ளம் குளிர அருள்புரிவார் என ஞானசம்பந்தர் தேவாரத்தில் போற்றுகிறார். சாரமா முனிவர் நாகலோகத்திலுள்ள மலர்களால் தாயுமானவரைப் பூஜித்ததாக தல வரலாறு கூறுகிறது.


சிவனின் 64 வடிவங்களில் ஒன்றான கங்காள மூர்த்தியை இங்கு தரிசிக்கலாம். திரிசிரன் என்னும் அசுரன் இங்குள்ள சிவனை வழிபட்டதால் இவ்வூர் திரிசிரபுரம் என்றானது. பெருமாள் பள்ளி கொள்ள தேர்ந்தெடுத்த தலம் என்பதால் "சிராப்பள்ளி" என்ற பெயரும் உண்டு. காலப்போக்கில் திருச்சிராப்பள்ளியாகி தற்போது திருச்சி என்றானது.

குழந்தைகளே! மறைந்து இருக்கும் உருவத்தை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.





## அமேசான் காடுகள்-நதிகள்



அமேசான் மழைக் காடு என்பது தென்னமெரிக்காவின் அமேசான் ஆற்றுப் படுக்கையில் அமைந்துள்ள ஒரு பெரிய மழைக்காடு ஆகும் அமேசானியா அல்லது அமேசான்படுக்கை என்றழைக்கப்படும் இதன் பரப்பளவு ஏழு மில்லியன் சதுர கிலோமீற்றர்கள் ஆகும். இதில் காடு மட்டும் 5.5 மில்லியன் ச.கி.மீ. ஆகும். மேலும் இது ஒன்பது நாடுகளில் பரவியுள்ளது. அந்நாடுகள் பிரேசில் (ஏறத்தாழ 60 சதவீத மழைக்காட்டினை உள்ளடக்கியது), கொலம்பியா, பெரு, வெனிசுலா, ஈக்வடோர், கயானா, பொலிவியா, சுரிநாம், பிரெஞ்சு கயானா ஆகியனவாகும். இவற்றில் நான்கு நாடுகளில் உள்ள அமேசானாஸ் என்ற மாநிலங்கள் இக்காட்டின் காரணமாகவே ஏற்பட்டது.


வருடமெல்லாம்கொட்டும் மழை. சூரிய வெளிச்சமே பார்க்காத தரை. இறுக்கமும் நெருக்கமுமாய் கண்ணுக்கெட்டிய தூரம் வரை மரங்கள் பின்னிப் பிணைந்த அடர்ந்த காடு. அதில் வசிக்கும் எண்ணற்ற அபூர்வமான பறவைகள், விலங்குகள். இவற்றோடு இதுவரை வெளி உலகத்தையே பார்த்திராத சில ஆயிரம் பழங்குடியினர். இங்கு மழை மிக அதிகமாகப் பெய்வதால் இதனை 'மழைக்காடுகள்' என்றும் அழைப்பர்.

அமேசான் காடுகளின் ஜீவாதாரமாய் விளங்கும் அமேசான் நதி உலகின் மிகப் பெரிய நதியாகும்.

உலகின் உயிரினங்களில் மூன்றில் ஒரு பங்கு விலங்கினங்கள் இக்காடுகளில் தான் வசிக்கின்றன. எண்ணற்ற செடிகொடிகளையும், மூலிகைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அதிசய உலகம் அமேசான் மழைக்காடுகள். அமேசானில் கிடைக்கும் 3000 பழவகைகளில் 200 வகை மட்டுமே நம் பயன்பாட்டுக்கு வருகிறது. ஆனால்அங்கேவாழும் மக்கள் சுமார் 2000 இந்த அரிய பழ வகைகளை உண்ணும் பேறு பெற்றவர்களாய் உள்ளனர். இன்றளவும் இயற்கைக்கு மிக இணக்கமாக வாழ்ந்து வருகின்றனர். விலங்குகளை வேட்டையாடிபச்சையாகவே உண்டு வருகின்றனர். இவர்களுக்கு சமைப்பது என்றால் என்ன என்றே தெரியாது.

உலகின் மிகப் பெரிய பாம்பினமான அனகொண்டா வகைப் பாம்புகள் அமேசான் நதிக்கரைகளில் வெகு சாதாரணமாய் காணப்படுகின்றன. பெரும்பாலும் இவை நீரிலேயே வாழ்கின்றன. இதன் மூக்குப் பகுதியை மட்டும் நீர் மட்டத்துக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்.

இன்றும், அமேசான் காடுகளிலும் நதிகளிலும் மனிதர்களால் கண்டு பிடிக்கப்படாத மர்மங்கள் நிறையவே உள்ளன.









## வடக்கில் நடக்கும் அசம்பாவிதங்கள் பற்றி?

## வியாசரும் சுயேட்சையில் நிற்பதாக அறிந்தேன் உண்மையோ?

## போர்க்குற்ற விசாரணை நடக்குமா?

**கமல்** — **சண்டிலிப்பாய்**

**ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடும் மனிதன் பற்றி?**

மகா அலெக்சாண்டர் தான் இறந்த பின்பு இறுதி ஊர்வலத்தில் தனது இரண்டு கைகளையும் பிரேதப் பெட்டிக்கு வெளியே விட்டு விட்டுத்தான் செல்ல வேண்டும் என கட்டளையிட்டார்.

புரியாத அதிகாரிகள் ஏன் என வினவ, உலகத்தையே கட்டி ஆண்ட மகா அலெக்சாண்டர் கூட இறந்தபின்பு வெறுங்கையுடன்தான் சென்றான் என இந்த உலகம் உணரட்டும் அதற்காகதான் என்றான்.

இனம்புரியாத பலர் வட்டி வட்டி அதற்கு குட்டி குட்டி என்று காசு மேல் பேயாய் அலைகிறார்கள் இறுதியில் வெறுங்கையுடன்தான் போக வேண்டும் என்ற நியதி அறியாதவர்கள்.

**டிலா** — **முல்லை**

**போர்க்குற்ற விசாரணை நடக்குமா?**

நல்ல கேள்வி. ஆனால் போர்க்குற்ற விசாரணை எப்பாவோ முடிஞ்சுதெண்டு ஒரு ஐயா சொல்லிப்போட்டாரெல்லோ.அது உங்களுக்குத் தெரியாதே.

கை இழந்தவனுக்குத்தான் கையின் அருமை புரியும். கண் இழந்தவனுக்குத்தான் கண்களின் அருமை புரியும்.

இழப்பு என்ற வார்த்தையை அகராதியில் கூடப் பார்க்காதவர்கள் ஏசியில் இருந்து கொண்டு விடும் அறிக்கைகளுக்குத் தான் இப்போது மவுசு. அது தான் ஏன் என்று புரியவில்லை.

**நண்பன்** — **யாழ்ப்பாணம்**

**பெண்ணின் பின் திரிவது தவறா?**

வீதியில் வரிசை கட்டித்திரியும் நாய்களைப் பார்த்ததுண்டா? அதைப் பார்த்தும் இந்தக் கேள்வியை கேட்க உமக்கு மனம் வந்ததோ? வரம்புகளில் நடக்கும் போது அவதானம் தேவை.

கொஞ்சம் சறுக்கினாலும் உயிருள்ள பயிர்கள் மிதிபட்டு விடும் கவனம்.

**சாயா** — **யாழ்ப்பாணம்**

**காதலின் சுவை எப்படிப்பட்டது?**

ஓ..இப்ப இதுக்கெல்லாம் சுவை வந்திட்டுதோ? காதலியுடன் கூல் பாருக்கு போனா கூலாத் தான் இருக்கும் கல்யாணத்திற்கு பிறகு தெரியும் அடுப்பங்கரையாள் சூடு எப்படியென்று.

அடேட எல்லாம் பட்டுணர்வடா சொன்னால் திருந்துங்கடா பிளீஸ்.

**சுதன்** — **குப்பிளான்**

**கூட்டமைப்பின் இறுதிக் கட்டம் எப்படி இருக்கும்?**

ஒரு காட்டில புலி பவரில் இருந்ததாம். காட்டிலுள்ள மிருகங்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு கட்டமைப்பை உருவாக்கிச்சாம். ஆரம்பத்தில் நல்லாத்தான் போனது. இடையில புலி இல்லாமல் போக சிங்கம் சினந்து எழுந்ததாம்.

காட்டின்ர கட்டமைப்பில் உள்ள முயல், மயில், குதிரை, கரடி எல்லாத்தையும் அடிச்சுத் திண்ண ஆரம்பிச்சதாம்.

இதற்கிடையில நரியும் சிங்கத்தோட இணைஞ்சுச்சாம். அதுக்குப்பிறகு ஒவ்வொரு தொகுதியா காட்டை முழுக் கொன்ரோல்ல கொண்டு வர நினைச்சு அனைத்து மிருகங்களையும் அடக்கி ஆள நினைச்சிச்சாம்.

கட்டமைப்பில இருந்த காட்டு மிருகங்கள் ஒன்று சேர்ந்து இன்னொரு கட்டமைப்பை உருவாக்கிச்சாம். ஆனா இந்தச் சிங்கமும் நரியும் இப்பவும் தாங்கதான் கூட்டமைப்பு என்று கொக்கரிச்சுக் கொண்டே இருக்குதாம். (அனைத்தும் கற்பனையே வெறும் கதையே)




**இதயராஜ்** — **மானிப்பாய்**

**வியாசரும் சுயேட்சையில் நிற்பதாக அறிந்தேன் உண்மையோ?**

அடச் சீ... வேடிக்கை பார்க்கப் போறவனெல்லாம் வேட்பு மனுத் தாக்கல் செய்யப் போறதா கதையக் கட்டி விடுறாங்கள். பணம் சம்பாதிக்க வேண்டுமென்றால் என்னிடம் இருக்கும் பத்தேக்கர் நிலத்தில் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்வேனே தவிர இந்த அரசியலுக்கு வந்துதான் பிழைக்க வேணுமெண்ட தேவை எனக்கில்லைக்காணும்.

**கர்ணசீலன்** — **வியாபாரிமூலை**

**நடிப்பு என்றால்?**

ஐம்பதுகளில் தியாகராக பாகவதரிடம் கற்றுக் கொண்டவர்கள் அறுபதுகளில் சிவாஜிக்கணேசனிடம் கற்றுக் கொண்டார்கள். எண்பதுகளில் கமலிடம் கற்றுக் கொண்டவர்கள் இரண்டாயிரத்தில் விக்ரமிடம் கற்றுக்கொண்டார்கள். ஆனால் அவர்களை எல்லாம் தூக்கி சாப்பிடும் அளவில் எம் தமிழ் அரசியல்வாதிகளின் நடிப்பு இருப்பது இப்போது தானே தெரிகிறது.

**தர்மா** — **மந்துவில்**

**வடக்கு அரசியலை நினைத்துப்பார்த்தால் ?**

தலை முடிக்க மறைந்து கிடந்த குருக்கள்மாற்ற கொம்பு இப்பதான் வெளித்தெரிய ஆரம்பிச்சிருக்கு. இனிப் பங்காளிக்களின்ர கதை அவ்வளவுதான். இதில என்ன வேடிக்கை எண்டா என்ன நடந்தாலும் எங்களுக்கு ஒற்றுமைதான் முக்கியம் எண்டுரினம் சிலர். முட்டவார மாடுட்ட சமரசம் பேசுறத விட இலாவகமா விலகி விடுறது தான் எல்லோருக்கும் நல்லமெண்டு நான் நினைக்கிறன்.

**கருணானந்தன்** — **மாணிக்கபுரம்**

**ஓகி புயலின் தாக்கம் பற்றி?**

ஓகி புயல் ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கு தேர்தல் புயல் அடிக்கிறது அதைப் பாருங்கள். கதிரையின் நான்கு காலையும் ஒவ்வொருவர் பிடித்து இழுக்க ஆசனத்தில் யார் இருப்பது என்று திக்குமுக்காடிக் கொண்டிருப்பவர்களைப் பாரும். வாய்விட்டு ஓவென்று சிரியும்.

இதுக்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா? பார் நன்றாகப் பார்... கதிரை படும் பாட்டை பார். இவர்களிடம் பாரைக் கொடுத்தால் பார்படும் பாட்டை நினைத்துப் பார் பார் பார்...

**விதுஷா** — **மாதகல்**

**வடக்கில் நடக்கும் அசம்பாவிதங்கள் பற்றி?**

பொம்மைகளைப் பிடிப்பவர்கள் அதை ஆட்டுவிக்கும் ஆளைக் கண்டுபிடிக்க அதன் நூல் வழி சென்றால் போதும்.

என்ன செய்ய, போராடிய இனம் ஒன்று அழிவது தெரியாமல் அழிந்து கொண்டிருக்கிறது. எம் வீர மறவர் தியாகங்கள் எல்லாம் வீண்போய் விடுமோ என்று நினைக்கும் போது இதயம் விம்மி வெடிக்கிறது.

**நிலாஜினி** — **சுழிபுரம்**

**ஆலயங்களில் தீபம் ஆண்டவன் பக்தி என்றார்கள். வீதிகளில் விடுகாலிகள் டயர் கொளுத்துவது எந்த வகை?**

பிடித்து நாலு சாத்து சாத்தி அனுப்புவதற்கு அவர்கள் இல்லையென்று நினைக்கும் போதுதான் மனதிற்குக் கஷ்டமாக இருக்கிறது.




## புதுயுகம் பிறந்திடும்

தையில் பொங்கலும்
மாசியில் மூசிப் பெய்யும் பனியும்
பங்குனியில் திங்களும்
சித்திரையில் வருடம் பிறந்து
கை நிறைய காசும்
வைகாசிக் காற்றும்
ஆனியில் உத்தரம் கண்டு
ஆடிக்கூழும் பாடிக்குடித்து
ஆவணியில் நாயகரை தேடிச்சென்று
பாடி மகிழ்ந்து
சனியன் கழிய
புரட்டாதியில் எள்ளும் எண்ணெயும்
பொட்டலி கட்டி சட்டியில் எரிக்க
ஐப்பசியில் காற்றடித்து
அரக்கரை அழித்து உடலும் மனமும்
புது ஆடை உடுக்க
தீமை கழிந்து
நன்மை பிறக்க
கடவுளை வேண்டி கார்த்திகைத் தீபம்
ஒளிர நிறுத்தி
இருள்ள அகற்றி
பரவசம் பொங்க
மார்கழியில் பாடல் பாடி
திருவெம்பா நாளில் நாமெல்லாம்கூடி
திருப்பாவை நோன்பு நோற்று
இறைவனைத் தேடி
நாளும் ஒன்றாய்க் கூடி
மகிழ்வோடு வாழ
இறைவனை நாடுவோம்
புதிய வருடத்தில் புதுமைகள் படைப்போம்

**நி.கவியழகன்**
**தாவடியூர்**

## இந்த நாள் அன்று போலில்லையே

புலி யுகத்தில் வாழ்ந்தோம்
புதுமைகள் கண்டோம்
பசி பட்டினி இன்றி
பக்குவமாய் இருந்தோம்
வன்மை அறியோம்
வலிகள் நேரவில்லை
எங்கும் பசுமை
எல்லாம் நிறைவு
வழியில் தெருவில்
வலியின்றி நடந்தோம்
களவில்லை பொய்யில்லை
கடத்தல் கூட இல்லை
ஒழிவின்றி மறைவின்றி
தெளிவாக வாழ்ந்தோம்
காலம் மாறியது!
கலியுகம் வந்ததே
வலியும் வேதனையும்
வலிந்து வந்ததே
தலைமைகள் தொலைந்ததே
தாலிகள் கழண்டதே
நிலைகள் சிதறியது
நீர்க்கதி நேர்ந்ததே
இன்னமும் தீரவில்லை
எப்பதான் தீருமோ

**ம.தவமணி**
**திருநெல்வேலி**

## அன்னைக்கோர் மடல்

சாமிக்கும்
மனசில்லை தாயே...
பூமிக்கும் உன்போல்
மனசில்லை தாயே
ஆத்தாளே... என்னை
அணைத்துத் தாலாட்டி
மடிசுமந்து ஆளாக்கி
அரவணைத்தவளே...
கல்லிலும் முள்ளிலும்
கால்பட நெல்லின்
களை பிடுங்கி விற்று
காசாக்கி பசிபோக்கி
பக்குவமாய் பாடம்
சொல்லித் தந்து
பள்ளிக்கு
அனுப்பி வைத்தவளே...
பட்டுடுத்து பாலூட்டி
பொட்டிட்டு
அழுக்குடையை நீ
சுமந்து என்னை
அழகாக்கி
அமுதூட்டியவளே...
அடுத்தவேளை
ஆகாரமின்றி– உன்
வயிறு பசித்தவேளையிலும்
என் பசி தீர்த்தவளே...
சாமியைப் பூக்கொண்டு
பூஜிப்பவனே...
பெற்ற தாயின்
தாளைப் பூஜியடா
நற்பேறுதனை
வந்து சேருமடா...

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**

## தேர்தல் நாடகம்

நடந்து செல்கிறேன்
அந்த வீதி வழியெங்கும்
அத்தனை சுவரொட்டிகள்

சிவப்பு மஞ்சள்
கறுப்பு நீலம்
பச்சை நாவல் என
அசந்து கிடந்த சாலை
"ஊதா கலரு ரிப்பன்"
பாடல் நினைவு வர
சிரித்துவிட்டேன்
வீதியென்றும் பாராமல்

நடந்து நாவரண்டு விட
சாலை ஓரம் இருந்த
தேநீர்க்கடை நுழைந்தேன்

"உழுந்துவடை ஒன்றும் பிளேன்ரீயும்"
ஓடர் கொடுத்துவிட்டு
ஓரிடத்தில் உட்கார்ந்தேன்

வந்தது வடை
வடைக்குள் எண்ணெயா
எண்ணெய்க்குள் வடையா என்ற
எண்ணம் மேலோங்க
எடுத்தேன் ஒரு பேப்பர்
வடையை அதில் வைத்து அழுத்தி
துடைத்தெடுத்தேன்

கிழிந்து நன்றாய்
கசங்கிக் கிடந்த காகிதத்தில்
"அடுத்த தேர்தலுக்கிடையில் அரசியல்தீர்வு"
சம்பந்தன் ஐயா சிரித்தபடி...
தேடினேன் திகதியை – 2012
இப்போது – 2017
அதற்கிடையில் ஏழு தேர்தல்கள்
இப்போதும் ஐயா
சிரித்தபடியே!

**மாவை. நா.கஜேந்திரன்**



# மௌனத்தின் தேடல்– 380

## சிந்திப்பார்களா?

ஒரே குடையின்கீழ் நின்று
ஒற்றுமையாய் உரத்து
குரல் கொடுத்தால்
தமிழருக்கு
நிச்சயம் கிடைத்துவிடும்
சமவுரிமை

**அ.புவனா**
**கறுக்காய்**

## நம் அடையாளம்

வெயில், மழை நம்
உடல் தீண்டாமல்
குடைகள் கையேறி
உடல் காத்தல் அழகு
உடல் தாண்டி உயிர்
பறிக்கும் குண்டு
மழைக்கு குடை கையேறி என்ன
தலைமேல் ஏறி என்ன பயன்
பறிக்கப்பட்டது
எம்மவர் உயிர்கள் மட்டுமா!
எம் மண்ணின் வாசமும்
நம் அடையாளமும்தான்

**அஜித்குமார்**
**வட்டக்கச்சி**

## உயிர்க்காவு

கொதித்தெழும் கடலலையில்
உயிர் காவும் சுனாமிக்கு
ஒரு கவசமுண்டா?
மழைக்கு குடை பிடித்தால்
மேனியைக் காத்திடலாம்
சுனாமியை ஒளித்திட
கைகள் போதவில்லை
காரிருள் சூழ்கிறது
கடலும் வெடிக்கிறது
காலனவனும் அதில் களியுண்டு
உயிர்தனை காவு கொண்டு
களி நடனம் புரிகின்றான்

**ரி.விஜிதா**
**மயிலிட்டி**

## என்று மாறும் இனவாதம்

ஒரே குடையின் கீழ்
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மையுண்டு
இன மத பேதம் மறந்து
இன்பமாக வாழ நினைத்தால்
மிதவாதிகள் மறைந்திருந்து
சதிவேலைகள் செய்து
துரோகம் செய்கிறார்கள்
வேதனையில் மக்கள்
சிக்கித் தவிக்கிறார்கள்

**துரை**
**தென்மட்டுவில்**

## ஒரே குடை வெற்றி

ஒரே குடையின் கீழிருந்து விலங்கு ஒடிப்போம்
மழைபோல் கொட்டும் செல்
குண்டிலிருந்து தப்பிக்கொள்வோம்
அனைவருமே ஒன்றாக நின்றால்
வெற்றி நிச்சயம்

**அபி குமாலிகா**
**சங்கானை**

## அழியாத சுவடுகள்

போரிலிருந்து எம் இனத்தினை
போம் பொழுதினில் மீட்ட
வீரம்கொண்ட புலியாக
வீரியத்துடன் ஆயுதம்தனை ஏந்தி
ஒரு குடையின் கீழ் எம்மை
ஒற்றுமையுடன் ஆண்டிட்ட
அழகான தருணங்கள்
அழியாத சுவடுகள்

**பீ.மேரி சிந்துஜா**
**மிருசுவில்**

## வாக்குத் தேடல்

குட்டுப் பட்டாலும்
திட்டமிட்டபடி
குனியாமல் வருகின்றது
குட்டித் தேர்தல்
மழை வெயில்
இவ்விரண்டிலும்
பாதுகாப்பிற்கு
ஒதுங்கக்கூடிய
குடையெதுவென்றி
எடைபோட்டு
தடைகள் தாண்டி
தடை விரித்தாலும்
கடைசி நேரத்தில்
நிறம் மாறி விலைபேசி
கனவைக் கலைக்கும்
கலையுமுண்டு

**ச.வரதலிங்கம்**
**சாவகச்சேரி**

## தர்மமே விழித்தெழு

குண்டுகளுக்கு அஞ்சி
குடைக்குள் தவித்திருக்கிறது
ஒரு கூட்டம்
துரோக வாள்கொண்டு
புறமுதுகில் குத்தி
குருதி குடிக்கவென
குள்ள நரியொன்றும்
காத்துக் கிடக்கிறது...
துரோகம் மாய்த்து
பலர் மடிந்த
கதை நாமறிவோம்!
இனியொரு தடவை அதை
தாங்கும் வல்லமை எமக்கில்லை
தர்மமே விழித்தெழு!
உன் பிள்ளைகளை மீட்டெடு!!

**த.மோகனரூபன்**
**சுழிபுரம் கிழக்கு**

# மௌனத்தின் தேடல் –381




**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 13.12.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சிறுகதை

# வெற்றி நிச்சயம்

யசிதீபன் அரியாலை

வழமைபோல பொழுது விடிந்தது. பிள்ளையார் கோவில் மணி ஊரை எழுப்பியது. பறவைகள் ஆனந்தமாக குரல் எழுப்பின... அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து முற்றம் கூட்டித் தண்ணீர் தெளித்துக் கோலம் போடாட்டி கோமதிக்கு விடிந்தும் விடியாதது போல் இருக்கும். இன்று வழமை போல் அனைத்தையும் செய்த போதும் அவளுக்கு மனம் ஏதோ சுமையாக இருந்தது. அது ஏன் என்பது அவளுக்கு மட்டும் தான் தெரியும்... மனச் சுமை தாங்க முடியாதவளாக திண்ணையொட் டில் மெல்லச் சாய்ந்தாள்... அருகி லிருந்த அவள் மாமனார் வீட்டு வானொலியில் "வாசலில பூசணிப் பூ வைத்துப் பிட்டாள்.... வைத்துப் பிட்டாள்... என்னும்பாடல் ஒலித்தது. அந்தக் காலத்தில் மட்டுமல்ல இந்தக் காலத்திலும் கோமதிக்கு மிகவும் பிடித்த பாடல் இது. அதனைக் குழப்புவது போல் தேர்தல் முடிவுகள் சொல்லப்பட்டது. "மற்றுமொரு தேர்தல் முடிவு தேர்தல் மாவட்டம் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி நல்லூர் எனச் சொல்லிக் கொண்டிருந்தபோது மின்சாரம் தடைப்பட்டது... அடக் கடவுளே இந்த மனுசனுக்கு இடம் கிடைத்ததா? இல்லையா? எனத் தெரிந்துகொளவம் என்றால் அதற்குள் மின்சாரம் தடைப்பட்டுவிட்டது என எண்ணியவள் நினைவுகள் இருபது வருடங்கள் முன்னோக்கி நகர்ந்தது...

இருபத்தாறு வயசு சித்திரைத் திங்கள் கோமதிக்கும் கோபிக்கும் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து இரண்டு மாதம் கழித்து ஒரு தேர்தல் நடந்தது. அப்போது வாக்களிக்கப் போவோம் வாங்கப்பா...என்று கோமதி கோபியைக் கேட்க எனக்கு அரசியல் பிடிக்காது. அதனால நான் வாக்களிக்கப் போவதில்லை நீர் விருப்பம் என்றால் போம். உம்முடைய சுதந்திரத்தை நான் பறிக்கவில்லை. அரசியல்வாதிகள் எல்லாம் ஓட்டு வாங்கும் வரைக்கும் தான் கும்பிடு போடுவாங்கள். தேர்தல் முடிந்து சீட்டு கிடைத்ததும் தாம் எதற்கு கும்பிடு போட்டோம் என்பதனை மறந்து விடுவார்கள். அதனால் நான் வரவில்லை. நீர போய்ப் போட்டிட்டுவாரும் என்றான்" உடனே 'கோமதி" அப்படிச் சொல்லாதுங்கோ அப்பா. சில நல்ல அரசியல்வாதிகளும் வாழ்ந்திருக்கிறார். சிலர் இப்பவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பதினெட்டு வயதைக் கடந்த ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கும் உரிமை உண்டு. எம்மை நாமே ஆள்வதற்கு எமக்காக சேவை செய்வதற்கு உரிய நபரைத் தெரிந்தெடுப்பதற்குத் தேர்தல் தான் ஒரு நல்லவழி. நீங்கள் வராவிட்டால் நானும் போகவில்லை" என்றாள் கோமதி. அவள் ஒரு நடுநிலையானவள் என்பது கோபிக்குத் தெரியும். அதனால் கோபி சொன்னான் "இஞ்சபாரும் ஜனநாயக நீரோட்டத்தில் வாக்களிக்காது விடுவது மாபெரும் மன்னிக்க முடியாத குற்றம். அதனால வாரும் போய் வாக்களித்திட்டு வருவம்" உடனே கோமதி தன் மனதினுள் "உண்மையில் எனது சொந்தம்,பந்தம்,தெரிந்தவன் என்று பாராது யார் இதய சுத்தியுடன் மக்கள் நலனுக்காக சேவை செய்யக் கூடியவரோ அவரைத் தெரிந்தெடுக்க வேண்டும்.மக்களுக்குச் சேர வேண்டிய அரச பணத்தில் ஒரு சதத்தைக்கூட தனது குடும்ப நலனுக்குச் செலவிடாது இந்தியாவில் இருந்த காமரா ஜர் போல இங்குள்ளவர்களும் இருக்கவேண்டும். அப்படியானவரைத் தேர்ந்தெடுப்போம்" என எண்ணியவள்" வாங்கப்பா வெயிலுக்கு முன் போட்டு வருவம்" என்று அவனை முதலாவது தடவையாகத் தேர்தலில் வாக்களிக்க வாக்களிப்பு நிலையம் நோக்கிக் கூட்டிச் சென்றாள். அப்ப அரசியலே பிடிக்காமல் இருந்த கோபி எப்படி அரசிய லுக்கு வந்து இன்று தேர்தலில் வேட்பாளரானான் என்பதே ஒரு புதிர் கதை தான்....



"அரசியல் பிடிக்காது. அதனால நான் வாக்களிக்கப் போவதில்லை. நீர் விருப்பம் என்றால் போம். உம்முடைய சுதந்திரத்தை நான் பறிக்கவில்லை. அரசியல் வாதிகள் எல்லாம் ஓட்டு வாங்கும் வரைக்கும் தான் கும்பிடு போடுவாங்கள் தேர்தல் முடிந்து சீட்டு கிடைத்ததும் தாம் எதற்கு கும்பிடுபோட்டோம்என்பதனை மறந்து விடுவார்கள்."

ஆம் அன்று மார்கழி மாதம் வழமைபோல் தனது வேலைகளைச் செய்துவிட்டு நான்கு பிள்ளைகளையும் மார்கழி விடுமுறையில் அப்பம்மா, அப்பப்பாவுடன் சந்தோசமாக இருப்பதற்காக கொண்டு போய்த் தன் தாய் வீட்டில் விட்டுவிட்டு ஆஸ்பத்திரி வீதிவழியாகச் சென்று கொண்டிருந்தபோது பல அம்புலன்ஸ் வண்டிகள் வேகமாக போதனா வைத்திய சாலைக்குள் சென்று கொண்டிருப்பதை அவதானித்தான். ஒரே பரபரப்பாக வைத்தியசாலை வளாகம் காணப்பட்டது. காயப்பட்டவர்கள் இறந்தவர்கள் என பலரைக் காவிக் கொண்டுவந்த அம்புலன்ஸ் வண்டிகள் அவர்களை இறக்கிவிட்ட வண்ணம் இருந்தன. உதவிக்கு போதியளவு ஆட்கள் இல்லாதிருந்தது. தன்னை அறியாமல் உதவி செய்யச் சென்றான் கோபி... காயப்பட்ட ஒருவரைத் தூக்கிக் கொண்டு போகும் போதுதான் கோபிக்குத்தெரியவந்தது சுனாமியின் கொ ரம் தான் இது என்று. மக்களை வாழவைத்த கடல் அவர்களைக் காவுகொண்ட கதை அது. அப்படிப்பட்ட நேரத்தில் சமூக சேவையில் ஈடுபட்ட கோபி தொடர்ந்தும் சமூக சேவைகளில் ஈடுபட்டான். இரத்ததான முகாம் நடத்தல், வறியவர்களுக்குத் தன்னால்முடிந்த உதவிகளை வழங்கல், கல்வி கற்பதற்கு ஆற்றலும் விருப்பமும் இருந்தும் வசதியில்லாதவர்களுக்கு தனது வெளிநாட்டு நண்பர்களின் மூலம் நிதி பெற்று வசதியளித்தல் என்று நன்னா லான உதவிகளைச் செய்து வந்தான் கோபி... இவனது சமூக சேவைகளைப் பார்த்த பல கட்சிக்காரர்கள் கோபியைத் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ள ஆர்வம் காட்டினார்கள். ஆனாலும் கோபி விடாப்பிடியாக தான் அரசியல் பக்கம் போவதில்லை என்றிருந் தான். நான் எனது விரலுக்கேற்ற வீக்கம் போல் என்னால் முடிந்த உதவிகளை நான் மற்றவர்களுக்குச் செய்வேன் என கூறி தேடி வந்த கட்சிகளை திருப்பியனுப்பினான். கடைசியாக இவனது உயிர் நண்பன் மூலம் இவனை அணுகிய அ.அ.அ கட்சி இவனை ஒருவாறு அரசியலுக்கு பிரவேசிக்க வைத்தது. வேட்பாளராக இல்லை கட்சித் தொண்டனாக தன்னை இணைத்துக் கொள்வதாக எண்ணி இணைந்தான் கோபி.

ஆனால் இன்று அ.அ.அ. கட்சியின் முதன்மை வேட்பாளர் என நினைத்துக் கொண்டிருந்த கோமதிக்கு அவன் மகனின் குரல் நிஜ உலகிற்குள் புகவைத்தது. "அம்மா.. அம்மா..இதுவரை சொன்ன முடிவுகளின் பிரகாரம் அப்பாவுக்கும் ப.ப. பகட்சி முத்தையா அண்ணா வுக்கும் சரியான போட்டியாம். இன்னமும் சிலதொகுதித் தேர்தல் முடிவுகள் அறிவித்த பிறகு தான் தெரியும் யாருக்கு ஆசனம் என்று. அதற்குள் தேநீரை போடுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்க மின்சாரம் வந்தது. தடைப்பட்ட வானொலி தொடர்ந்தது... இராமன் ஆண்டா என்ன இராவணன் ஆண்டா என்ன என்ற சிலோன் சிங்காரத்தின் நிகழ்ச்சிபோய்க் கொண்டிருந்தது....அம்மா கேட்டீங்களோ எனத் தொடர்ந்தான் நிக்சன் "நேற்று தேர்தல் நடந்தது எங்கட நாட்டில தான் பல கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகிறது வழக்கம். சில வளர்ச்சியடைந்த நாடுகளில இரு கட்சி முறைமைதான் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட நாடுகளில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து நல்லாட்சி செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினைப் பேணும்" அப்படி எங்கட நாட்டிலேயும் வரனும் எல்லா மக்களுக்கும் உணர்வு உண்டு என்பதனைப் புரியனும். எங்கட மக்களுக்கு நல்லதொரு எதிர்காலம் பிறக்கனும். எங்கட வீட்ட நான் ஒரு பக்கம் தம்பிமார் இருவரும் வெவ்வேறு பக்கம் தங்கச்சி ஒருபக்கம் என வேறு வேறு திசைகளில் சென்றால் எங்கட வீடு சிதைந்து சின்னாபின்னமாகப் போயிடும். எனவே நாங்கள் எல்லாரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் எங்கட வீடு நல்லா இருக்கும். அப்படித்தான் அரசியல் தலைமைகளும் சின்னச் சின்ன சுய இலாபத்திற்காக பொது நலன்களை விட்டுக் கொடுக்கக்கூடாது. ஒரு நல்ல தலைமையை அமைத்து எதிர்வரும் காலங்களில் தேர்தலில் நிற்க வேண்டும். அப்போதுதான் நாங்கள் கௌரவத்துடன் நாமாக வாழ முடியும் என்று சொல்லி வாய்மூட முன் முந்திக் கொண்ட கோமதி" நீயும் அரசியலுக்கு வருகின்ற திட்டமா? பேசாமல் வகுப்புக்குப் போ படித்து நல்லா வரப்பார் என்றாள்" இப்படிக் கதைத்துக் கொண்டிருக்கும் போது மிகவும் சந்தோசமாக ஓடிவந்தான் கோபி. அப்பா இஞ்சப்பா எங்கட கடவுள் கைவிடவில்லை. நான் வெற்றி பெற்று விட்டேன். ஆசனம் கிடைத்து விட்டது. நடுநிலையான நல்லவனாய் என் மக்களுக்குச் சேவை செய்யப் போகிறேன் என்றதும் குடும்பமே பலத்த சந்தோசம் அடைந்தது.

கோமதிக்குத் தெரியும் இந்த வீட்டை நன்றாகப் பார்த்த கோபி எங்கள் மக்களுக்காக உண்மையான சேவகனாக தொழிற்படுவான் என்று...அவள் மனது சுமை இறங்கி இலேசானது...

# கேரளக் கஞ்சா இன அழிப்பின் பிள்ளையார் சுழியா

தேவயசி வீரசிங்கம்
ஊடகக் கற்கைகள்,
யாழ்.பல்கலைக்கழகம்





"உதவாது இனியொரு தாமதம் உடனே விழி தமிழா...!" புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அப்போதே கூவி முடித்திருக்கின்றான். செவிடர்களாக, குருடர்களாக மாறிவிட்டோமோ நாம், இல்லை சுரணைதான் கெட்டுப் போய்விட்டோமா? கவிபாடிய அத்தனை கவிஞர்களும் எச்சரிக்கை மணி அடித்து விட்டுத்தான் சென்றிருக்கிறார்கள். நமக்கென்னவென்று நாமும் கண்டுகொள்ளாமல் கடந்து சென்று விட்டோம். கண்மூடியே கிடக்கின்றோம். நாம் எதையும் அறியாமல், எதையும் உணராமல்..! அடையாளங்களை அழிக்கவும் தகர்க்கவும் எடுக்கப்பட்ட படையெடுப்புக்களை முறியடித்த எம்மவர்களால் கலாசாரத்தைச் சீரழிக்கும் போதையிலிருந்து மீள முடியவில்லை என்பது வேதனைக்குரியதுதான்.

கலாசாரத்தையும் கலையையும் கட்டிக்காத்த எமது ஈழ தேசத்தின் மனித மனங்களும் சரி உறவுகளும் சரி கட்டற்ற முறையில், முறையற்ற வகையில் தவறான பாதையில் போகின்றதே... யார் காரணம்? மனித மனங்களா? அதிலேற்படும் மாற்றங்களா? ஒரு தனி மனிதனின் தவறான நடத்தை ஒரு சமூகத்தையே சீரழித்துக் கொன்றுவிடும். இதுபோன்ற முறையற்ற கலாசாரங்களுக்கெல்லாம் நாகரிகம் என்கின்ற மாயையில் எம் மக்கள் தடம்மாற்றி அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்.

நாகரிகம் என்கின்ற மாயையில் பல தேவையற்ற விடயங்கள் உலகமயமாதல் என்கின்ற பெயரினால் மனித மனங்களிலும், நடத்தையிலும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டு விட்டன. பீட்சா, பர்கர், கே. எப். சி. சிக்கன் போன்ற உணவு வகைகளும் சரி, மெஹந்தி, லெகங்கா, சங்கீத் போன்ற இந்திய முறைத் திருமணச் சடங்குகளும் சரி எம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கேற்ப இயைபாக்கமும் அடைந்துவிட்டோம். கேரள வீட்டு அலங்காரத்தில் தொடங்கி, கேரள நாட்டு ஜிமிக்கி கம்மல் வரை இரசித்த நாங்கள்தான் கேரளக் கஞ்சாவையும் நுகர்ந்துள்ளோம்.

ஆம், அத்துமீறி நுழைந்து இளைஞர்கள், மத்தியில் மோசமாகப் பரவிவரும் ஒன்று கேரளக் கஞ்சாதான். பாடசாலை மாணவர்களிலிருந்து பல்கலைக்கழக மாணவர்கள் வரை வேரூன்றிக் களையெடுத்துக் கொண்டிருக்கின்றது கேரளக் கஞ்சா.

கேரளக் கஞ்சா? தமிழ் நாடு கேரள எல்லையில் கொடைக்கானல் மலைத் தொடர்கள் சந்திக்கும். அங்கிருக்கும் கேரள இளைஞர்கள் எட்டு மாதம் முகாமிட்டுக் கஞ்சா பயிரிடுவார்கள். அதனைக் கோடைகாலங்களில் அறுவடைசெய்து உலர்ந்த கஞ்சாவினை எடுத்துச் சென்று பத்திரப்படுத்திவிட்டு ஆளாளுக்குப் பிரிந்து சென்றுவிடுவார்கள். பதப்படுத்தப்பட்ட இடத்தில் துப்பாக்கியுடன் காவலுக்கு ஆட்கள் இருப்பார்கள். அவர்கள் மூலமாகவே தேவைப்பட்ட இடங்களுக்குக் கேரளக் கஞ்சா பரிமாற்றம் செய்யப்படும்.

பரிமாற்றம் செய்யப்பட்டு வரும் இவ்வகைக் கஞ்சா, இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தை ஆக்கிரமித்துள்ளது. இது திட்டமிடப்பட்ட சதியா? இல்லை ஒரு இன அழிப்பிற்கான பிள்ளையார் சுழியா? என விடைதெரியாத வினாக்கள் தான் பல. இந்தியாவின் கேரள எல்லையிலிருந்து புத்தளம், மன்னார், யாழ் உள்ளிட்ட கரையோரங்கள் வழியாகவும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளான தாளையடி, உடுத்துறை, ஆழியவளை மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளினூடாக தற்போது கஞ்சா கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்த காலப்பகுதியில் இலங்கை இராணுவம் கடற்படை முகாம் அமைக்கப்பட்டிருந்த வேளையில் இடம்பெற்ற கடலின் மூலமான கடத்தல்கள் பற்றிய தகவல்கள் எதுவுமில்லை.

தற்போது பாதுகாப்புத் தகர்த்தப்பட்ட வேளையில் மாதகல், மன்னார், தலைமன்னார் மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் அதிகளவில் கடத்தல்கள் இடம்பெறுகின்றன.

இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளினூடாகக் கடத்தப்பட்ட சுமார் 510 கிலோகிராம் கேரளக் கஞ்சா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதாகவும் 103 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதே வேளை வடக்குக் கடற் பரப்பு மற்றும் புத்தளம் கடற்பரப்புக் கள் உள்ளடங்கலாக சுமார் 3660 கிலோகிராம் கஞ்சா, 2 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் 1660 கிலோகிராம் கேரளக் கஞ்சா மற்றும் ஒரு கிலோகிராம் ஹெரோயின் மாத்திரமே கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

வேகமாகப் பரவிவரும் கேரளக் கஞ்சாவைத் தடுக்க நாம் முயற்சிகள் செய்வோம். கலையை இரசித்து வரவேற் போம், இன அழிப்பை முற்றாக எதிர்த்துப் போராடுவோம்!.

# உன்னை அறிந்தால்



'ஒருவரின் மனப்பான்மை பலவீனமாக இருந்தால், அவருடைய குணமும் பலவீனமாக மாறிவிடும்' என்கிறார் விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். இழப்புகள் மனிதர்களுக்குத் தவிர்க்க முடியாதவை. நெருக்கமானவர்களைப் பறிகொடுத்தல், வியாபாரம் நொடித்துப் போவது, விபத்துகளில் உடல் உறுப்புகளை இழப்பது... என மனித வாழ்வில் இழப்புகள் எண்ணிலடங்காதவை. அவற்றை ஏற்றுக் கொள்ளும் பக்குவமான மனநிலை வாய்த்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஒருவேளை உங்களின் மிகப் பெரிய பலவீனமே பலமாக மாறலாம் என்பதை தெளிவுபடுத்தும் கதை இது.

அந்தச் சிறுவனுக்குப் பத்து வயது. ஜூடோ கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவனின் தீராத ஆசை. இத்தனைக்கும் அவன் இருந்தது ஜப்பானின் பெரிய நகரம் ஒன்றில். ஜூடோவுக்குப் பேர் போன நாடு. அவன் இருந்த ஊரிலும் ஜூடோ கற்றுத்தரப் பல பள்ளிகள் இருந்தன. ஒன்றே ஒன்றுதான் ஜூடோ கற்றுக்கொள்ள அவனுக்குத் தடையாக இருந்தது. ஒரு வருடத்துக்கு முன்னர் அவனுக்கு நடந்த கார் விபத்து. அதில், அவன் தன் இடது கையைப் பறிகொடுத்திருந்தான்.

சிறுவனின் தாய், ஜூடோ பள்ளிகளை அணுகினார். 'இரு கைகள் இல்லாமல் ஜூடோவா..? அது மிகச் சிரமம்' என்பதே பதிலாகப் பல பள்ளிகளில் கிடைத்தன. ஒரு பள்ளியில் மட்டும் ஜூடோ மாஸ்டர் சிறுவனைச் சேர்த்துக்கொள்ள ஒப்புக்கொண்டார்.

அடுத்த நாள்... சிறுவன், குரு சொன்ன நேரத்துக்கு ஜூடோ பள்ளிக்குப் போனான். அவர் கற்றுக் கொடுத்த பயிற்சிகளைச் செய்ய ஆரம்பித்தான். மூன்று மாதங்கள் முடிந்தன. நல்ல பயிற்சிதான்... என்ன... அவனுடைய குரு அவனுக்கு அது வரை ஜூடோவில் ஒரே ஒரு அசைவை, நுட்பத்தைத்தான் கற்றுத் தந்திருந்தார்.

ஒருநாள் குருவிடமே கேட்டுவிட்டான்... 'மாஸ்டர்... எனக்கு ஜூடோவுல ஒரே ஒரு நுட்பத்தை மட்டும்தான் கத்துக் குடுத்திருக்கீங்க... வேற எதுவும் கத்துத் தர மாட்டீங்களா?"

'உண்மைதான். ஜூடோவுல இந்த ஒரே ஒரு நுட்பம் மட்டும்தான் உனக்குத் தெரியும். ஆனால், இதை மட்டும்தான் நீ அவசியம் தெரிஞ்சிருக்கணும்.' அதற்குப் பிறகு குரு பேசவில்லை.

உள்ளூரில் ஒரு ஜூடோ போட்டி. அதில் கலந்துகொள்ள பள்ளியின் சார்பாக அந்தச் சிறுவனின் பெயரையும் கொடுத்திருந்தார் மாஸ்டர்.

சிறுவனுக்கு ஒரே ஒரு சந்தேகம்தான். அவன் பள்ளியில் பல மாணவர்கள். ஜூடோவில் பல நுட்பங்களைக் கற்றறிந்தவர்கள். அவனுக்குப் பல மாதங்களாகப் பயிற்சியளிக்கப்பட்டிருந்தாலும், அவனுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே ஒரு நுட்பம்தான். இதை வைத்துக்கொண்டு போட்டியில் ஜெயிக்க முடியுமா?

ஒரு கையை வைத்துக் கொண்டு அவனால் ஜூடோ போட்டியில் பங்கேற்க முடியுமா? போட்டியில் அவனுக்கு அடி எதுவும் படாமல் இருக்க வேண்டுமே என்கிற பயம் அம்மாவுக்கு. போட்டி தினம் வந்தது. அந்தச் சிறுவன் பங்கேற்ற முதல் போட்டி... அவன்தான் ஜெயித்தான். கூட்டம் அதிசயத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது. குரு கற்றுக்கொடுத்த ஒரே ஒரு ஜூடோ நுட்பத்துக்கு இவ்வளவு சக்தியா? சிறுவன் ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தான். இரண்டாவது போட்டி... அதிலும் அந்தச் சிறுவனுக்கே வெற்றி. மூன்றாவது போட்டி. கூட்டம் மொத்தமும் மூச்சு விடாமல் பார்த்துக்கொண்டிருந்தது. அதிலும் அவன் ஜெயித்துவிட்டான். கூட்டம் எழுப்பிய ஆரவாரமும் கைதட்டலும் அடங்க வெகு நேரமானது.

இறுதிப் போட்டி நடக்கும் நாள் வந்தது. சிறுவனின் எதிர்ப் போட்டியாளன் ஆஜானுபாகுவாக இருந்தான். அவனுக்கு முன்னால் சிறுவன் குட்டி ஆடுபோலத் தெரிந்தான். போட்டியை நடத்தும் நடுவர், சிறுவனின் குருவிடம் வந்தார்.

'இந்தப் பையன் பாவம் ஐயா.. வேணாம். போட்டியிலிருந்து அவனை விலகச் சொல்லிடுங்க' என்றார். "பரவாயில்லை. ரெண்டு பேரும் மோதட்டும்" என்று சொல்லிவிட்டார் குரு.

போட்டி ஆரம்பமானது. இரண்டுமுறைதான் அந்தச் சிறுவன் தடுமாறினான். மூன்றாம் முறை வெற்றி பெற்றுவிட்டான். அந்த ஆண்டு, அந்த நகரத்தில் நடந்த ஜூடோ டோர்னமென்ட்டில் அந்தச் சிறுவன்தான் சம்பியன்.

அடுத்த நாள் சிறுவன், தன் குருவிடம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டேவிட்டான். "குருவே.. நீங்க கத்துக்குடுத்த ஒரே ஒரு நுட்பத்தை வெச்சுக்கிட்டு நான் எப்பிடி ஜெயிச்சேன்?"

"நீ ஜெயிச்சதுக்கு ரெண்டு காரணம்தான். ஜூடோவுல எதிராளியைத் தூக்கி வீசியடிக்கிற வித்தையிலேயே கஷ்டமான ஒண்ணுல நீ மாஸ்டராகிட்டே. இன்னொண்ணு, அந்த நுட்பத்தை உன் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தும்போது எதிராளி உன் இடது கையைத்தான் இழுக்க முடியும். அது சாத்தியமில்லை. அதனாலதான் நீ ஜெயிச்சே!"

# இலங்கை நலனில் அக்கறை கொள்ளும் இந்தியா ஏன்? எதற்கு?

இலங்கை உட்பட பத்து கரையோர நாடுகளுடன் இந்தியா தனது கடல்சார் புலனாய்வு தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக நவம்பர் 1 அன்று இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா அறிவித்திருந்தார். இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கோவா கடல்சார் கருத்தரங்கிலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்தியாவின் இந்த அறிவிப்பானது இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதை நோக்காகக் கொண்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்திய மாக்கடலில் சீனாவின் கப்பல்கள் நடமாடுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கும் இராஜதந்திர நலன்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளதாக கருதப்படுகிறது.

**ஆங்கிலத்தில்-Pankaj Yadav**
**வழிமூலம்-Ceylon today**
**மொழியாக்கம்- நித்தியபாரதி**

'சீனாவால் தயாரிக்கப்பட்ட கடன் பொறியிலிருந்து' இலங்கையை மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் ம்யற்சிப்பதாக 'ரைம்ஸ் ஒப் இந்தியா' ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியாவின் நலன்களுக்கு எதிராக தென்-மத்திய இந்திய மாக்கடலைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக இந்திய மாக்கடலில் தமது செல்வாக்கை விரிவுபடுத்த விரும்புகின்றன' என 'ரைம்ஸ் ஒப் இந்தியா' ஊடகத்தில் வெளிவந்த பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா தனது கடல்சார் தகவல்களை கரையோர நாடுகளுடன் பகிர்ந்து கொள்வது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானமானது இந்திய மாக்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதற்கான நோக்கைக் கொண்டுள்ளதாக இந்தியாவின் முதன்மை ஊடகமான 'ரைம்ஸ் ஒப் இந்தியா' வில் குறிப்பிடப் பட்டதானது இந்தியாவின் கருத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆனால் இந்தியாவிலுள்ள வல்லுநர்களின் கருத்துக்கள் வேறுபட்டதாகவும் உள்ளன. அதாவது இலங்கை சுயாதீனமான பொருளாதாரக் கோட்பாட்டைக் கொண்டுள்ள ஒரு நாடாக உள்ளதாகவும் போரின் பின்னரான இக்காலப் பகுதியில் பல்வேறு கட்டுமான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளதால் அது, சீனாவின் உதவியை நாடியுள்ளதாகவும் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

'போருக்குப் பின்னர் இலங்கை தனது கட்டுமான அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு பல நாடுகளின் உதவியைப் பெறுவதால் இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற அதிகாரத்துவ நாடுகளின் மத்தியில் சமவலுவைப் பேணுவதில் இடர்களை எதிர்கொள்ளும்.

ஆகவே மாறி மாறி ஆட்சிக்கு வரும் இலங்கை அரசாங்கங்கள் சீனாவுடன் நட்புறவைப் பேணுகின்றதா? அல்லது இல்லையா? என்பதை இந்தியா கவனத்திற் கொள்ளாது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியுடன் மேற்கொண்டது போன்று சுயாதீன பூகோள-மூலோபாயக் கோட்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இதன்மூலம் இலங்கையுடனும் ஏனைய அயல் நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு அந்த நாடுகளின் உள்விவகாரங்களில் பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் தொடர்பைப் பேணுகின்றனவா? என்பது இந்தியாவிற்கு பிரச்சினையாக அமையாது' என கண்காணிப்பு ஆய்வு நிறுவகத்தின் சென்னைக் கிளைக்கான இயக்குநரும் மூத்த அதிகாரியுமான என்.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

'தாம் செல்வாக்குச் செலுத்த விரும்பும் வேற்றுப் பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் தமது சொந்த பூகோள-மூலோபாய நலன்களை சிறிய நாடுகளில் கூட செலுத்த முடியாவிட்டால் அவை இந்த நாடுகள் மீதான தமது ஆர்வத்தை இழப்பதுடன் இப்பிராந்தியத்தை விட்டு வெளியேறி தமது பாரம்பரிய பிராந்தியங்களுக்குத் திரும்பிச் சென்றுவிடும் நிலை உருவாகும்' என இயக்குநர் சத்தியமூர்த்தி மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையுடனான இந்தியாவின் கரையோர ஒத்துழைப்பு புதியதல்ல எனவும் இந்தியா ஏற்கனவே இலங்கைக்கு கரையோர கண்காணிப்பு படகுகள் இரண்டை வழங்குவதாக உறுதியளித்ததாகவும் இதில் ஒரு படகு கடந்த செப்டெம்பரில் வழங்கப்பட்டதாகவும் மற்றையது அடுத்த ஆண்டு வழங்கப்படும் எனவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இதேபோன்ற கரையோர கண்காணிப்புப் படகுகள் 2006 மற்றும் 2008இல் இலங்கைக்கு வழங்கப்பட்டன. இந்திய மாக்கடலில் உள்ள சிஷெல்ஸ், மாலைதீவு, மொரிசியஸ் போன்ற நாடுகளுக்கு இந்தியாவினால் கப்பல்கள், கண்காணிப்புப் படகுகள், குறுக்கீட்டுப் படகுகள் போன்றன வழங்கப்படுவதுடன், இந்த நாடுகளின் திறன் மேம்படுத்தலிற்கும் இந்தியா உதவுகின்றது. இது இந்திய இராஜதந்திரத்தின் மிக முக்கிய கூறாகும்.

இவை தவிர, இந்தியா தனது அயலிலுள்ள தீவுகளுக்கு அவற்றின் கரையோர கண்காணிப்பு வலைப்பின்னலை உருவாக்குவதற்கும் உதவுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இலங்கை கடற்படையைச் சேர்ந்த 450 வீரர்களுக்கு இந்தியா பல்வேறு கடல்சார் பயிற்சிகளை வழங்குகின்றது.

இந்திய மற்றும் இலங்கை இராணுவத்தினர் நீண்டகாலமாக மிக நெருக்கமான நல்லுறவைப் பேணி வருகின்றனர். இவர்கள் பல்வேறு மட்டங்களிலும் தமக்கிடையே இராணுவப் பயிற்சிகளை பரிமாறிக் கொள்கின்றனர். இதுமட்டுமல்லாது இராணுவத் தகவல்களும் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ந்தும் பரிமாறப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் இத்தகவல்கள் இலங்கை இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை வெற்றிகரமாகக் கடலில் தடுத்து நிறுத்துவதற்கும் உதவியுள்ளன.

ஆபத்து விளைவிக்காத ஆயுதங்களை இலங்கை கொள்வனவு செய்வதற்கு 100 மில்லியன் டொலரை கடனாக வழங்குவதென இந்தியா தீர்மானித்துள்ளது. கடந்த 18 ஆண்டுகளில், இந்தியாவினால் இலங்கைக்கு L-70 விமான எதிர்ப்பு ஆயுதங்கள் - 24, USFM கண்காணிப்புக் கருவிகள்- 11, நிலக்கண்ணிவெடி பாதுகாப்பு வாகனம் -10, போர்க்களக் கண்காணிப்பு ராடர்கள் -24 போன்றன வழங்கப்பட்டுள்ளன.

அரசியல் ரீதியாகக் கூட இலங்கையும் இந்தியாவும் மிக நெருக்கமாகவுள்ளன. கடந்த மே மாதம் இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் செய்தமையானது ஊடகங்களால் முதன்மைப்படுத்தப்பட்டன.




ஏனெனில் இந்தியப் பிரதமர் ஒருவர் 28 ஆண்டுகளின் பின்னர் முதன் முதலாக இலங்கைக்குப் பயணம் செய்த முதலாவது அரசமுறைப் பயணமாக பிரதமர் நரேந்திர மோடியின் பயணம் அமைந்திருந்தது.

அத்துடன் சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரித்திருந்த நிலையில் சீனாவுடன் நெருங்கிய உறவைப் பேணியதுடன் இந்தியாவுடனான அரசியல், மூலோபாய மற்றும் பாதுகாப்பு உறவை முறித்துக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்த காலப்பகுதியில் நரேந்திர மோடி அங்கு பயணம் செய்ததானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

குறிப்பாக இலங்கை துறைமுகத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் மீண்டும் மீண்டும் தரித்து நின்ற போது இந்தியா அதனை எதிர்த்திருந்தது.

சீனாவை இந்தியா எதிர்த்த போதிலும் முற்றுமுழுதாக இந்தியாவால் சீனாவை ஓரங்கட்ட முடியவில்லை. ஏனெனில் இந்தியாவும் சீனாவும் வருடாந்தம் 71.5 பில்லியன் டொலர் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. இன்று சீனாவானது இந்தியாவின் மிகப் பாரிய வர்த்தகப் பங்காளி நாடாகவுள்ளது. கடந்த ஆண்டு சீனாவிடமிருந்து இந்தியா 61.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதுடன், சீனாவிற்கு இந்தியா 10.2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகச் செயற்பாடுகள் சில ஆண்டுகளுக்கு முன்னர் 37.2 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

ஆனால் இன்று இத்தொகை 51.1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. ஆகவே இப்புள்ளிவிபரமானது இந்தியாவின் கணிசமான பொருளாதாரமானது சீனாவுடனான வர்த்தகத்தில் தங்கியுள்ளதை சுட்டிநிற்கிறது.

**ஜூனியர் விகடன்**

“கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய உலகின் முக்கிய தலைவராக அறியப்படும் நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்கப் பெண்களின் உரிமைகளின் மீட்பராக இருந்தார்.”



# தென்னாபிரிக்காவின் கறுப்புச் சூரியன்

எளிமையான தலைவராக இருந்த அவரை உலக அரங்கில் ஒரு மாபெரும் வரலாற்று நாயகனாக உயர்த்தியது இவரின் போராட்ட குணம்தான். அவர் இம்மண்ணை விட்டு நீங்கி நான்கு ஆண்டுகள் ஆகின்றன.

பல தொன்மையான வரலாறுகளின் உறைவிடமாக இருந்த ஆபிரிக்கக் கண்டம், பதினேழாம் நூற்றாண்டிற்குப் பிறகு, ஐரோப்பியர்களின் ஆட்டக்களமாகவும் சோதனைக் கூடமாகவும் மாறியது. தென்னாபிரிக்கப் பிள்ளைகள் உருட்டி விளையாடிய கற்கள் எல்லாம் வைரக்கற்கள் என்று அறிந்தால் சும்மாவா இருக்கும் ஐரோப்பியர்களின் மூளை? அவர்களுக்குள்ளேயே ஒப்பந்தங்கள் போட்டுக்கொண்டார்கள். விளைவு, தங்களின் வளங்களை எல்லாம் ஐரோப்பியர்கள் சுரண்டிச் சாப்பிடுவதற்கு ஆபிரிக்கர்களே அடிமைகளாக மாறி ஏவல் செய்தார்கள். ஆபிரிக்கர்களின் கல்விமுறை ஐரோப்பிய மயமாக்கப்பட்டது. ஆபிரிக்கக் குழந்தைகள் பாடசாலையில் சேரும்போது, அவர்களுக்கு ஐரோப்பியப் பாணியிலான பெயர்கள் சூட்டப்பட்டன. அப்படி வந்ததுதான், மண்டேலாவின் முதல் பெயரான நெல்சன் என்பதும்.

பிறந்தவுடன் மண்டேலாவின் அப்பா வானத்தை நோக்கிக் கூவிய பெயர் ‘ரோலிலாலா’ என்பதுதான். பெயர் என்னும் ஒற்றைச்சொல் வரலாற்றின் எச்சமாக இருப்பது. அந்தப் பெயரையே மாற்றியதால் தன் பிள்ளையைப் பறித்துக்கொண்ட உணர்வு. தந்தை காட்லா ஹென்றிக்கு திடீரென்று, தன்னுடைய பாட்டனாரின் பெயரான மண்டேலாவைச் சேர்க்கின்றார் தந்தை. அன்றுமுதல் இவர், நெல்சன் மண்டேலா என்று வரலாற்றினால் அழைக்கப்பட்டார்.

சுதந்திரம் நிறைந்த ஒரு குழந்தைப் பருவம் மண்டேலாவிற்குக் கிடைத்தது. ஆனால், தன்னுடைய ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். தாய் நோசெகேனி, மண்டேலாவை தன் கணவரின் தோழரும், சோஸா இனக்குழுவின் பிரதிநிதியுமான ஜோன்ஜின்டேபாவிடம் ஒப்படைக்கின்றார். வாலிபப் பருவத்தை முழுமையாக அந்த அரண்மனையிலேயே கழிக்கின்றார் மண்டேலா. இடையில் ஒரு காதல் தோல்வி. அங்குதான் தன் மக்கள் அடிமைப்படுத்தப்பட்ட வரலாறு அனைத்தையும் அறிந்துகொள்கின்றார். மெல்ல அரசியல் ஆர்வம் பிறக்கின்றது. சட்டம் பயின்றார். கிளார்க் கல்லூரியில் திறமையான மாணவராக வலம் வருகின்றார். வளர்ப்புத் தந்தையிடமிருந்து ஏற்பாடு செய்யப்பட்ட திருமணத்திலிருந்து தப்பிக்க, உறவினர் கார்லிக் பேகேனியிடம் தஞ்சம் புகுந்தார். அவர் மூலம் தன் அரசியல் குருவான வால்டர் சிசுலுவைச் சந்திக்கின்றார் மண்டேலா. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸில் இணைந்து நாட்டுக்காகப் பணியாற்றத் தொடங்கினார். பிறகு எவ்லினுடன் திருமணம். அவர்களின் அன்பிற்கு அடையாளமாகத் தெம்பி என்ற ஆண் மகவு பிறக்கின்றது. சிறிது காலத்திற்கு மட்டுமே அவர்களின் திருமண வாழ்க்கை இனிக்கின்றது. மூன்று குழந்தைகளுக்குப் பெற்றோரான பிறகு, அவர்களுடைய திருமண வாழ்வு முற்றுப் பெறுகின்றது.

பெரிதும் அறிமுகம் இல்லாத காரணங்களினால் இந்தியர்கள் மீதும், காந்திய வழிப் போராட்டத்தின் மீதும் ஈடுபாடு கொள்ளாத மண்டேலா, இந்தியர்கள் தென்னாபிரிக்காவில் நிகழ்த்திய அறவழிப் போராட்டத்தின் மீது பெரும் மதிப்பு கொண்டிருந்தார். காந்தியமும், பிறகு கார்ல் மார்க்ஸ் எழுதிய மூலதனம், கம்யூனிஸ்ட் அறிக்கையும் அவருக்குள் புதிய பார்வைகளைத் தோற்றுவிக்கின்றன.

ஒரு தீர்க்கமான போராட்டத்தை நிகழ்த்த வேண்டும் என்ற முனைப்பில் மண்டேலா செயற்பட்டுக் கொண்டிருக்கும் போது, சட்டபூர்வமாகத் தன்னுடைய நிற வெறிக்கு ‘அபார்தெய்ட்’ என்ற பெயர் சூட்டப்படுகின்றது. தென்னாப்பிரிக்க மக்கள் அனைவரையும் இனவாரியாகப் பிரிப்பதுடன், வேற்றுமைப்படுத்துகின்றது. பொது இடங்கள், போக்குவரத்து ஆகிய அனைத்திற்கும் வெள்ளையர்கள் அல்லாதவர்களுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது.

இவை அனைத்தையும் எதிர்த்து 1960-ம் ஆண்டு, கிட்டத்தட்ட ஐந்தாயிரம் மக்கள் ஒன்று கூடினர். அப்போது, அங்கிருந்த காவலர்கள், கிட்டத்தட்ட அறுபத்து ஒன்பது மக்களைச் சுட்டுத்தள்ளினர். உலக நாடுகள் மத்தியில் பெரும் அவப்பெயரைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தென்னாபிரிக்க அரசு தள்ளப்பட்டது. இதன் காரணமாக, நெல்சன் மண்டேலா தன் அரசியல் ஆசான் வால்டர் சிசுலு மற்றும் பலரைக் கைது செய்ய தென்னாபிரிக்க அரசு முடிவு செய்தது. ஆனால், மண்டேலா தப்பித்து, எதியோப்பியா, சூடான், கானா, அல்ஜீரியா, லண்டன் மற்றும் பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் செய்து தங்கள் நாட்டிற்கு இழைக்கப்படும் அநீதியை எடுத்துரைத்தார் மண்டேலா. இது உலக நாடுகள் அனைத்திற்கும் அவருடைய ஆளுமையைப் பரப்பியது. மண்டேலாவின் மூலம் தென்னாபிரிக்க அரசின் அராஜகப் போக்கினை அறிந்த ஐ.நா. சபை, அதனை வன்மையாகக் கண்டித்தது.

“நான் வெள்ளையர்களின் அதிகா ரத்தை எதிர்க்கிறேன். அதுபோல் கறுப்பர்களின் அதிகாரத்தையும் மறுக்கிறேன். தென்னாபிரிக்கா, ஒரு சுதந்திர பூமி. இங்கு அனைத்து மக்களும் சம அதிகாரத்துடன், சகோதரர்களாகக் கைகோர்த்து வாழ வேண்டும். இதுவே என் கனவு. எனது இந்தக் கனவு முழுமையாக நிறைவேறும்வரை, என்னுடைய போராட்டம் தொடரும். இதற்காக என் உயிரையும் இழக்கச் சித்தமாக இருக்கிறேன் - ஜூன் 12, 1964-ம் ஆண்டு, தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா நீதிமன்றத்தின் குற்ற வாளிக்கூண்டில் நிறுத்தப்பட்ட நெல்சன் ரோலிலாலா மண்டேலா உதிர்த்த வார்த்தைகள்தான் இவை ”

நேர்மறையான மாற்றங்கள் நிகழும் என்று எதிர்பார்த்து, நாட்டிற்குத் திரும்பிய மண்டேலாவிற்குக் காத்திருந்தது நீண்ட நெடிய சிறைவாசம். 1962 ஒக்டோபர் 2 அன்று புகழ்பெற்ற பிரிட்டோரியா நீதிமன்றத்திற்கு, சைரன் ஒலியுடன் வந்த பொலிஸ் வாகனத்திலிருந்து இறங்கி நடந்து வந்தார் மண்டேலா.

ஆனால், அவர் இறங்கி நடந்து வந்த தோற்றம், அங்கிருந்த ஐரோப்பிய நீதிபதிகள் உட்பட அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. தன் புராதன உடையில், புலித்தோல் போர்த்தியபடி, ஒரு சிங்கம் போல நடந்து வந்தார் மண்டேலா. பின்பு கூட்டத்தினரை நோக்கி, தன்னுடைய வலக்கரத்தை உயர்த்தி, ‘அமெண்டா’ என்று முழங்கினார். அமெண்டா என்றால் ‘உறுதி’ என்று பொருள். அவருக்கு மரண தண்டனை அளிக்கும் அளவிற்கு அவர்மீது அதிருப்தியில் இருந்த தென்னாபிரிக்க அரசு, பிற உலக நாடுகளைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக, அவருக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனையை விதிக்கின்றது. இத்தனை ஆண்டுகள் சிறைவாசம் அவரின் மன உறுதியில் எத்தகைய மாற்றங்களையும் கொண்டு வரவில்லை. அவர் சிறையிலிருந்த காலத்தில் மண்டேலாவின் தாயார் உயிர் நீத்தார். தாயின் இறுதிச் சடங்குகளைச் செய்வதற்குக்கூட மண்டேலாவுக்கு அந்நாட்டு அரசு அனுமதிக்கவில்லை. அதன்பின் ஓராண்டு கழித்து மண்டேலாவின் மூத்த மகன் தெம்பி ஒரு வீதி விபத்தில் உயிரிழந்தார்.

தன் மன உறுதி குலைந்தால் தன்னுடைய சக தோழர்களுக்கும் மன உறுதி குலையும் என்பதற்காக, அந்த இழப்பைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நாளும், உடலையும் மனதையும் உறுதி செய்துவந்தார் அவர்.

1990ஆம் ஆண்டில் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்படுகின்றார். பின்பு அந்நாட்டின் தலைவராகவும் பொறுப்பேற்கின்றார்.

அறிவியலைத்தன்னுடைய இனமே சிறந்தது என்று நிரூபிக்கப் பயன்படுத்திய ஐரோப்பியர்களின் செயலுக்கு ஒரு காத்திரமான உதாரணம், சாரா பார்ட்மன். ஆபிரிக்கப் பெண்ணான. இவருடைய உடல் ஆராய்ச்சி என்ற பெயரில் பல்வேறு துன்புறுத்தலுக்கு உள்ளானது. இவருடைய மார்பகங்களும், பின்பகுதியும் வழக்கத்திற்கு மாறாகப் பெரிதாக இருந்ததால், மரபணுக்களில் குரங்கினுடைய கலப்பு உண்டா என்று ஆராய்ச்சி செய்தார்கள் ஐரோப்பியர்கள். தனக்கு நேர்ந்த உடல் ரீதியான கொடுமைகளாலும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களாலும் அவர் தன்னுடைய 26-ம் வயதில் மரணம் அடைந்தார்.

இறந்த பிறகும் அவருடைய உடல் விபரிக்க இயலாத துன்பத்திற்கு ஆளானது. அவருடைய உடலுறுப்புகள் தனியாகப் பிரிக்கப்பட்டு, அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டன. இவற்றோடு அவருடைய உடலின் மாதிரியும் அங்கு வைக்கப்பட்டது.

ஆனால், 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி மண்டேலா, “சாராவின் உடல் கண்ணியமான முறையில் அடக்கம் செய்யப்பட வேண்டும்” என்று பிரான்ஸ் நாட்டிடம் கோரிக்கை விடுத்தார்.

பல கட்ட முயற்சிகளுக்குப் பிறகு, அத்தனை ஆண்டுகளாக ஒரு காட்சிப் பொருளாகப் பார்க்கப்பட்ட ஆபிரிக்கப் பெண்ணின் உடல், கடைசியாக 2002-ம் ஆண்டு தென்னாபிரிக்காவின் தேசியப் பெண்கள் தினத்தன்று அடக்கம் செய்யப்பட்டது.

காட்சிப் பொருளாகப் பார்க்கப்பட்ட ஒரு ஆபிரிக்கப் பழங்குடிப் பெண்ணின் கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்று எண்ணிய மண்டேலாவின் உள்ளத்திண்மை, அவர் ஆட்சி புரிந்த ஆண்டுகளில் மிகக்குறைந்த இரத்தச் சேதாரத்துடனும், அதே சமயம், ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தமிட்ட முதலீடுகளை வெற்றிகரமாகவும் நிறைவேற்ற உதவியது.

ஒரு தேர்ந்த மேன்மையான தலைவன் பெரும்பான்மைவாதத்தினை ஒருபோதும் கையில் எடுப்பதில்லை. தென்னாபிரிக்காவின் பன்மைத்துவத்தினைப் பெரிதும் போற்றிப் பாதுகாத்ததால்தான், இன்று மண்டேலா மக்கள் மத்தியில் உத்தமராக உயர்ந்து நிற்கின்றார்.

இன்று பெரும்பான்மைவாதத்தினையும், பிரிவினைவாதத்தையும் முன்னிறுத்தும் அனைத்து ஆட்சியாளர்களுக்கும் மண்டேலாவின் வாழ்க்கை ஒரு பாடமாகும்.



# இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில்

## முதிர்ச்சி அடையும் டெஸ்ட் போட்டி

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான டெல்லி டெஸ்ட் போட்டியின் ஐந்தாவது நாள் காலையில் அஞ்சலோ மத்தியூஸ் ஆட்டமிழந்த போது, பகல் போசணத்துடன் அனைத்தும் முடிந்துவிடும் என்று ஊடக அறையில் முணுமுணுப்பு ஒலி கேட்டது.

இலங்கை அணி போட்டியிடுவதற்கு தைரியம் இல்லாமல் டில்லி காற்று மாசுபடுவதை கையில் எடுத்திருப்பதாக இந்திய ஊடகங்கள் பக்கம் இருந்து குற்றச்சாட்டுகள் எழுந்தன.

போதிய பலம்பொருந்திய அணியாக இந்தியாவை அடைந்த இலங்கை பலமிழந்த அணியாக நாடு திரும்பப்போகிறது என்று நம்பிக்கை இழந்திருந்த நேரமது. ஆனால், அதற்குப் பின்னர் இலங்கை அபார போராட்டத்தை வெளிக்காட்டியது. ஐந்தாம் நாள் முழுவதிலும் இலங்கை அணி வெறும் இரண்டு விக்கெட்டுகளையே இழந்தது. உண்மையில் அது ஒரு தேர்ந்த ஆட்டமாக இருந்தது. ஐந்தாவது நாள் ஆடுகளத்தில் எப்படி துடுப்பெடுத்தாட வேண்டும் என்ற சிறந்த உதாரணமாகவும் இருந்தது.

போட்டியின் ஒன்றரை நாட்கள் இருக்க விராட் கோலி இலங்கைக்கு 410 என்ற ஓட்ட இலக்கை நிர்ணயித்தபோது விருந்தாளிகள் எப்படி இந்த காலத்தில் துடுப்பெடுத்தாடப் போகிறார்கள் என்ற கேள்வி மாத்திரமே எழுந்தது. இலங்கை அணி இந்த சவாலை வெல்ல வேண்டுமானால் மூன்று முன்னணி துடுப்பாட்ட வீரர்களான திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ் அல்லது தினேஷ் சந்திமால் ஆகியோரில் ஒருவரேனும் இன்னிங்ஸ் முழுவதும் ஆட வேண்டும் என்று கருதப்பட்டது.

இந்தியாவுக்கு எதிராக கருணாரத்னவின் மோசமான ஆட்டம் தொடர்ந்தது. அவர் இலகுவாக தனது விக்கெட்டை பறிகொடுத்து வெளியேறினார். இறுதி நாள் காலையின் ஐந்தாவது ஓவரில் கசப்பு மாத்திரை ஒன்றை விழுங்குவது போல் மத்தியூஸின் விக்கெட் பறிபோனது.

இந்த சரிவுக்கு இடையே தனன்சய டி சில்வா தொடர்ந்து துடுப்பெடுத்தாடினார். நாம் ஒரு கச்சிதமான மூன்றாம் வரிசை வீரரை கண்டுபிடித்து விட்டோமா? என்று மாத்திரமே அப்போது கூறிக்கொண்டோம். அந்த இடத்தில் நிலைபெற குசல் மெண்டிஸ் எதிர்பார்த்தபோதும் எதிரணியினர் அவரை முன்கூட்டியே வெளியேற்றிவிட்டனர். மெண்டிஸ் மீண்டும் அணிக்கு திரும்ப தற்போது கடுமையாக போராட வேண்டியிருக்கும்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தனது கன்னி தொடரில் சதம் பெற்ற பின் தனன்சய மற்றொரு தொடரான சிம்பாவேக்கு எதிராகவும் அதிக ஓட்டங்கள் பெற்று சதம் குவித்தார். அப்போது அவர் ஆறாவது வரிசையில் துடுப்பெடுத்தாடினார். என்றாலும் இலங்கை அணி தென்னாபிரிக்கா சென்றபோது அவருக்கு நான்காவது இடத்தில் களமிறங்க வாய்ப்பு கிடைத்தது. இப்படியான ஒரு பரிசோதனை முயற்சிக்கு தென்னாபிரிக்கா பொருத்தமான இடமாக இருக்கவில்லை. அங்கு சோபிக்கத் தவறிய அவர் இறுதியில் தரமிறக்கப்பட்டு 'A' அணிக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

மேற்கிந்திய தீவுகளில் இலங்கை A அணியை வழிநடத்திய அவர் தொடரில் ஒரு சதம், இரு அரைச் சதங்களோடு வெற்றியுடன் திரும்பினார். இதன்மூலம் இலங்கை அணியில் தனது இடத்தை உறுதி செய்துகொண்டார். மேற்கிந்திய சுற்றுப்பயண முடிவின்போது, இந்த 26 வயது வீரரின் தன்னலமற்ற அணுகுமுறை பற்றி அணி முகாமையாளர் சரித் சேனநாயக்க பெருமிதத்தோடு குறிப்பிட்டிருந்தார்.

இந்திய சுற்றுப்பயணத்தில் ரவிச்சந்தரன் அஸ்வினுக்கு எதிராக தனது பொறுமையை வெளிக்காட்ட முடியாமல் தடுமாறிய லஹிரு திரிமான்னவை டில்லியில் நடக்கும் கடைசி டெஸ்டில் நீக்குவதற்கு தேர்வாளர்கள் தீர்மானித்தார்கள். அணியின் உபதலைவரை இவ்வாறு அடிக்கடி நீக்கும் வழக்கம் இல்லாத நிலையில் இது ஒரு தீர்க்கமான முடிவாக இருந்தது. என்றாலும் இந்த தைரியமான முடிவின்மூலம் அணிக்கு வந்த தனன்சய தனக்கு கிடைத்த வாய்ப்பை பற்றிப் பிடித்துக் கொண்டார்.

ஆட்டமிழக்காமல் அவர் பெற்ற 119 ஓட்டங்களும் வருகை தந்த துடுப்பாட்ட வீரர் ஒருவர் இந்தியாவில் நான்காவது இன்னிங்ஸில் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக உள்ளது. தனன்சய விவ் ரிச்சட்ஸை தாண்டியே இந்த சாதனையை படைத்தார். ரிசட்ஸ் ஆட்டமிழக்காது பெற்ற 109 ஓட்டங்கள் கூட டில்லியில் பெறப்பட்டதாகும். இது இந்திய அணியின் கோட்டையில் அந்த அணி 30 ஆண்டுகளுக்கு முன் கடைசியாக தோல்வியை சந்திக்க காரணமானது.

டெஸ்ட் போட்டியில் நான்காவது இன்னிங்ஸில் இலங்கை துடுப்பாட்ட வீரர் ஒருவர் சதம் பெற்ற நான்காவது சந்தர்ப்பமாக இது இருந்தது. கடைசியாக பத்து ஆண்டுகளுக்கு முன் ஹோபார்டில் குமார் சங்கக்கார நான்காவது இன்னிங்ஸில் 192 ஓட்டங்களைப் பெற்றார்.


தனன்சயவுடன் ரொஷேன் சில்வாவும் 'A' அணி சுற்றுப் பயணத்தில் இணைந்திருந்தார். முதல்தர கட்டமைப்புக் கொண்டதும் குறைந்த போட்டித்தன்மை உடையதுமான 'A' அணி தொடர் அதிக சவால் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டுக்கான வீரர்களை தயார்படுத்துவதற்கு தீர்வாக உள்ளது.

ரொஷேன், இந்தியாவுடனான முதல் இன்னிங்ஸில் பூஜ்யத்திற்கு ஆட்டமிழந்தபோது அவர் பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்தார். தமது திறமையை வளர்த்து இந்த இடத்திற்கு வர அவர் நீண்ட காலம் காத்திருந்தார். ரொஷேன் அளவுக்கு டெஸ்ட் அணிக்கு தகுதி பெறுவதற்கு பொருத்தமான வேறு ஒருவர் இல்லை. அவர் தனது கன்னி டெஸ்டில் ஆடுவதற்கு முன் 100க்கும் அதிகமான முதல்தரப் போட்டிகளில் ஆடி 6,000க்கும் அதிகமான ஓட்டங்களை பெற்றிருக்கிறார்.

முதல் இன்னிங்ஸில் அவரை ஆட்டமிழக்கச் செய்த அஸ்வின், கடைசி நாளில் இலங்கை போட்டியை காப்பாற்ற போராடிய நிலையில் அவர் துடுப்பெடுத்தாட களமிறங்கியபோது எதேச்சையாக அதே அஸ்வினே பந்து வீசிக்கொண்டிருந்தார். காலை வேளையில் இலங்கை அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த நிலையில் அணித் தலைவர் தினேஷ் சந்திமால் இரண்டு மணி நேரத்துக்கு மேல் துடுப்பெடுத்தாடி விக்கெட்டுகளை காத்துக்கொண்டிருந்தார்.

அந்த நிலையான ஆட்டத்தையே ரொஷேன் தொடர வேண்டி இருந்தபோதும் அவரது அனுபவமின்மை பெரிய நம்பிக்கை தரவில்லை. ஆனால் அவர் அந்த சந்தர்ப்பத்தில் சிறப்பாக செயற்பட்டார்.

அஸ்வினின் மூன்று பந்துகளை பதற்றத்துடன் முகம்கொடுத்த ரொஷேன் இந்திய சுழற்பந்து வீச்சாளர் லெக் திசையில் பந்தை வீசியபோது அதனை தட்டிவிட அது லெப்-கனி (leg-side) திசையில் இருக்கும் செடேஷ்வர் புஜாராவை கடந்து பௌண்டரிக்கு சென்றது. அது தொடக்கம் அவரது மன உறுதி வலுப்பெற்று நேர்த்தியாக பந்தை அடித்தாட ஆரம்பித்தார்.



உண்மையில் ரொஷேன் ஓப் திசையில் பந்தை அடிப்பதில் வலுவான வீரராவார். ஓப் திசை சுழற்பந்து வீச்சாளர்களுக்கு அவர் அதிரடி பௌண்டரிகளை விளாசினார். ஒரு தடவை ஜடேஜா தூக்கிப் போட்ட பந்தை முன்னால் வந்து எக்ஸ்ட்ரா கவர் (extra cover) திசையில் விளாசி தனது கன்னி அரைச் சதத்தை பெற்றார். அதேபோன்று ஓன் திசையிலும் சிறப்பாக ஆடிய அவர் வேகமாக தனது கால்களை நகர்த்தி முன்னால் வந்து லாவகமாக டிரைவ் செய்து பௌண்டரி விளாசினார். தனன்சயவைப் போலவே அவரது ஆட்டத்தை பார்க்க பெரும் விருந்தாக இருந்தது.

தனன்சய மற்றும் ரொஷேன் சரியான முறையில் டெஸ்ட் கிரிக்கெட்டை ஆடிய நிலையில், நிரோஷன் திக்வல்ல இந்திய அணியை வீழ்த்தும் ஓர் ஆட்டத்தை ஆட முயன்றார்.

ரொஷேனுடன் அவர் ஆடுகளத்தில் இருந்த போது தனது சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் அந்தஸ்தில் இருந்து விலகி எதிர் முனை வீரருக்கு சதம் பெற இடம்விட்டார்.

பின்னர் 117 ஓட்ட இலக்கை எட்ட 50 நிமிடங்கள் எஞ்சி இருப்பதாக கூறப்பட்டபோது திக்வல்ல அதனை விரட்ட முயன்றார். அதனை கைவிட ரொஷேன் புத்திசாலித்தனமான யோசனை கூறினார்.

திக்வல்ல போன்ற வீரர்கள் எமக்கு தேவைப்படுகின்றனர். அவரது குறும்புத்தனங்களை உலகக் கிரிக்கெட் தொடர்ந்து பார்க்கத்தான் போகிறது.

இதன் மூலம் இலங்கை கிரிக்கெட் அற்புதமான காலத்தை எதிர்கொண்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. (க)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : அவன்தான் மனிதன்
இசை: எம்.எஸ்.விஷ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்
பாடல் வரிகள்: கண்ணதாசன்



மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று

தந்தை தவறு செய்தார் தாயும் இடம் கொடுத்தாள்
தந்தை தவறு செய்தார் தாயும் இடம் கொடுத்தாள்
வந்து பிறந்து விட்டோம் வெறும் பந்தம் வளர்த்து விட்டோம்
மனது துடிக்கின்றது மயக்கம் வருகின்றது
அழுது லாபம் என்ன அவன் ஆட்சி நடக்கின்றது
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று

காட்டு மனமிருந்தால் கவலை வளர்ந்து விடும்
காட்டு மனமிருந்தால் கவலை வளர்ந்து விடும்
கூட்டைத் திறந்து விட்டால் அந்தக் குருவி பறந்து விடும்
காலில் விலங்கு விட்டோம் கடமை என அழைத்தோம்
நாலு விலங்குகளில் தினம் நாட்டியம் ஆடுகின்றோம்
மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று

விதியின் ரதங்களிலே நாம் விரைந்து பயணம் செய்தால்
மதியும் மயங்குதடா சிறு மனமும் கலங்குதடா
கொடுக்க எதுவுமில்லை என் குழப்பம் முடிந்ததடா
கணக்கை முடித்து விட்டேன் ஒரு கவலை முடிந்ததடா

மனிதன் நினைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று
இறைவன் நினைப்பதுண்டு பாவம் மனிதனென்று

# உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வாரத் தொடர்ச்சி)

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் தலையாய பதவியிலுள்ளவர்களாகவும் அஞ்சாதவர்களாகவும் தாம் ஏற்றுக் கொண்ட செயல்களில் மன உறுதி கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

அவர்கள் பேசுவதின் முடிவுகள் பளிச்சென்று தெரியும். எதையும் மறைவின்றிச் சொல்லி விடுவார்கள். ஆகையால் இவர்களை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு எதிரிகளாக மாறி விடுவார்கள்.

தாம் செய்யும் செயல்களிலேயே முழுக் கருத்தையும் செலுத்துவார்கள். இவர்கள் எண்ணுவதைத் தவிர வேறு எந்தவிதமான வேறுவழியும் இவர்கள் எடுத்துக் கொண்ட செயலில் இருக்க நீதியில்லை என்று முயற்சி செய்வார்கள்.

மூலம் ஏழைகளுக்குத் தர்மம் செய்வார்கள். ஆனால் தனிப்பட்ட மனிதனாக வரும் எந்த ஏழைக்கும் உதவி செய்யாமல் தாம் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களுக்கு அனுப்பி விடுவார்கள். தன்னால் வாழ்பவர்களிடமும் தனக்கு வாழ்வளிப்பவர்களிடமும் இவர் மிக கவனத்துடன் நடந்து கொள்ளுவார்கள்.

தொழிலில் பெருமளவில் வெற்றியடைய இவர்களுக்கு வாய்புண்டு. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொழிலில் மட்டும் ஒட்டியிருக்க மாட்டார்கள். ஏதாவது ஒரு வழியில் வெற்றி பெற்றால் கடைசி வரையில் அதே தொழிலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இவர்கள் எண்ணுவதில்லை. ஆகாயால் பாதணி விற்பவர்கள் பங்கு மார்க்கட்டில் கூட புகுந்து விடுவார்கள். பேராசிரியர்களாக இருப்பார்கள். அந்தத் தொழிலை விட்டு விட்டு வியாபாரம் செய்யப் போய் விடுவார்கள்.

## நவம்பர் 21-டிசெம்பர் 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

இவர்கள் மூளை மிக விரைந்து வேலை செய்யும். மற்றவர்கள் பேசும் போது இடையிடையே குறுக்கிட்டுப் பேசுவார்கள். இவர்கள் சொல்லுவதுதான் முடிவு என்று எப்போதும் எண்ணுவார்கள்.

களைப்படைந்து வரும் வரைவில் இவர்கள் ஏற்றுக் கொண்ட வேலைகளைச் செய்து கொண்டேயிருப்பார்கள்.

பொதுவாகவும் குறிப்பாக மற்றவர்கள் தம்மை நம்பும் போது மதிப்புள்ளவர்களாக நடந்து கொள்ளுவார்கள்.

உண்மையைக் கடைப் பிடிக்கக் கடுமையான சோதனைகளைத் தாங்குவார்கள். ஏமாற்றுவதை இவர்கள் விரும்புவதில்லை. தம்மையோ மற்றவர்களையோ ஏமாற்றுபவர்களை இவர்கள் எளிதில் விட மாட்டார்கள். வாழ்க்கையின் தத்துவங்களை ஏற்று நல்லவற்றை எப்போதும் செய்ய முன் வந்து நிற்பார்கள். இவர்கள் தனிப்பட்ட முறையிலுள்ள நிறுவனங்கள்

கருத்தொருமித்த செயற்பாடு

கருத்துடன் எதையும் செய்வதில் இவர்கள் எந்தப் பணியில் இறங்கினாலும் வெற்றியைக் காண முடிகிறது.

ஆனால் இவர்கள் தமக்கு ஏற்ற தொழில் எதுவென்று தாமே தேர்ந்தெடுப்பார்கள். மற்றவர்களின் யோசனைகளைத் திரும்பத் திரும்பப் பரிசிலிப்பார்கள்.

இவர்களுள் சிலர் பணத்தைப் பொறுத்த வரையில் மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டும் மிக மட்டமாகவும் மற்றவர்களிடம் நடந்து கொள்ளுவார்கள். விளம்பரத்துக்காகப் பெரும் பணம் தருவார்களே தவிர, உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஒருவருக்கும் உதவி செய்ய மாட்டார்கள்.

(தொடரும்

# அறிவோம் அறிவை

பார்வதி மகன் அன்பு.

புதைவெடியில் சிக்கி தனது ஒரு காலையிழந்தான். பாவம் அப்பாவுக்கும் இரு காலுமில்லை. இருவரும் ஒரு குடிசையில் ஒன்றாக...

அன்புவின் சகோதரிகள் மூவர். அம்மாவும் யாவரும் ஊனமான அந்தப் பாச உள்ளங்களை கண்டு கொள்வதில்லை. எந்நேரமும் மெகாசீரியல் பார்ப்பது அவர்களின் வேலை...ரி.வி. பார்ப்பது தவறல்ல. வாழ்வுக்குத் தேவையான விடயங்களை பாரும். நல்லதைக் கூட்டும்

கெட்டதைக் கழியும்

அறிவைப் பெருக்கும்

அன்பை பிரிக்காமல் இரும்.

ரி.வியில் சரித்திர நாயகர்கள் வரலாற்றைப் பாரும். சரித்திரக் கதைகளை அறியும். புராணக் கதைகளைப்பாரும். பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடும். போதி தர்மன் இருந்தாரென்று ஏழாம் அறிவு திரைப்படம் வந்தபின் யாவருக்கும் தெரியும். புதுப்படமானாலும் அது போதி தர்மன் கதையென்றால் பல விஞ்ஞான அறிவுரையைத் தந்தது. வெற்றியும் பெற்றது.

சிறியோர் முதல் பெரியோர் வரை போதி தர்மனை அறிந்து கொண்டோம். புதிய திரைக் காவியமானாலும் அது போதி தர்மனின் கதையென்பதால் பல கோடி மக்களுக்கு தெரிந்தது. அதுபோன்ற திரைப்படங்களைப் பாரும். அறியாத விடயங்களை அறியும். சிறிய வட்டத்துக்குள் இராதீர். அதையும் தாண்டி பெரிய வட்டம் உள்ளது. அதற்குள் வாரும் அறியாத விடயங்களை அறியும்.

**ஆர். மணிமாறன்**
**மயிலங்காடு**

- விழாமல் வாழ்ந்தேன் என்பதே பெருமையல்ல விழுந்தாலும் எழுந்தேன் என்பதே பெருமை.

- ஒரு மரத்தில் இருந்து ஒரு இலட்சம் தீக்குச்சிகள் செய்யலாம். ஆனால் ஒரு தீக்குச்சி ஒரு இலட்சம் மரங்களைக்கூட எரிக்கும்.

- பல தேவையற்ற சிந்தனைகளை விட சில நல்ல சிந்தனைகள் மேல்.

- உன் அழகைப் பற்றி கனவு காணாதே. அது உன் கடமையை பாதிக்கும்.

# பாவச் செயல்கள்

- நல்லோர் மனதை புண்படச் செய்வது
- தானம் கொடுப்பவரை தடுப்பது
- நட்பிற்கு துரோகம் இழைப்பது
- ஏழைகளின் வயிற்றெரிச்சலை கொட்டிக்கொள்வது
- பசித்தோருக்கு அன்னமிடாமல் இருப்பது
- கோள்மூட்டி குடும்பத்தை கெடுப்பது
- குருவை அவமதிப்பது
- உணவில் கலப்படம் செய்வது
- ஞானிகளையும் துறவிகளையும் கேலி செய்வது
- தெய்வ நிந்தனை செய்வது
- பெற்றோரை மதிக்காமல் வசை பாடுவது
- கெட்டுப்போன பொருளை பிறருக்கு அளிப்பது
- பெரியவர்களுக்கு எதிரில் பணிவில்லாமல் மரியாதை குறைவாக நடந்து கொள்வது.

சினிமா செய்தி

# திரைவிமர்சனம்




சிபிராஜ் நாய்கள் ஜாக்கிரதை படத்திற்கு பிறகே ஒரு ஹிட் கொடுப்பதற்காக தடுமாறி வருகின்றார். எப்படியாவது தமிழ் சினிமாவில் ஒரு இடத்தை பிடிக்க வேண்டும் என்று போராடி வரும் இவருக்கு இந்த சத்யா அப்படி ஒரு இடத்தை கொடுத்ததா? பார்ப்போம்.

சிபிராஜ் அவுஸ்திரேலியாவில் பெரிய சாப்ட்ஃவேர் கம்பெனி ஒன்றில் வேலைபார்த்து வருகின்றார். திடீரென்று ஒரு கோல் அவருடைய வாழ்க்கையை திருப்பி போடுகின்றது, அது தான் இப் படத்தின் ஒன் லைன்.

ரம்யா நம்பீசன் சிபிராஜின் முன்னாள் காதலி, ஒரு நாள் சிபிக்கு போன் செய்து என் மகளை கடத்திவிட்டார்கள், உன்னை தவிர எனக்கு வேறு யாரையும் தெரியவில்லை, ஏதாவது செய் என்று அழுகிறார்.

அதை தொடர்ந்து சிபி சென்னை வந்து இதை கண்டுபிடிக்க முயற்சி செய்ய, பிறகு தான் தெரிகின்றது, அப்படி ஒரு குழந்தையே இல்லை, ரம்யா நம்பீசனுக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது என்று.

ஆனால், ரம்யா கடைசி வரை தனக்கு குழந்தை இருப்பதாக சொல்ல, அந்த குழந்தை உண்மையாகவே உள்ளதா? இல்லை ரம்யாவிற்கு தான் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதா? என்பதை மிக சுவாரஸ்யமாக கூறியுள்ளார் ப்ரதீப் கிருஷ்ணமூர்த்தி.

சிபிராஜ் நாய்கள் ஜாக்கிரதை என்ற படத்திற்கு பிறகு நீண்ட நாட்கள் கழித்து ஒரு தரமான கதையை தேர்ந்தெடுத்துள்ளார். காதலியை பிரியும் இடத்திலும் சரி, தன் முன்னாள் காதலி மகள் கடத்தப்பட்டாள் என்று தெரிந்து அவருக்காக அலையும் இடத்திலும் சரி சிபி நடிப்பில் பல மடங்கு முன்னேறிவிட்டார்.

சிபியை தாண்டி படத்தில் சதீஷ், ஆனந்த்ராஜ் மிகவும் கவர்கின்றனர். அதிலும் சதீஷ் காமெடியை விட குணச்சித்திர கதாபாத்திரத்தில் அசத்தியுள்ளார். இனி இதுபோன்ற கதாபாத்திரங்கள் வந்தாலும் ஆச்சரியம் இல்லை, அதை விட ஆனந்த்ராஜ் ஒவ்வொரு படங்களிலும் சிக்ஸர் அடிக்கின்றார்.

இசை வெளியீட்டு விழாவில் ஆனந்த்ராஜ் சொன்னது போலவே சத்யராஜை மனதில் வைத்தே தான் வசனம் எழுதியிருப்பார்கள் போல. அத்தனை நக்கல் அவர் பேசும் வசனங்களில், வரலட்சுமி சில காட்சிகள் வந்தாலும் சர்ப்ரைஸ் கொடுக்கின்றார்.

படம் முழுவதும் ஒரு குழந்தையை தேடும் கதை, அதை விட குழந்தை இருக்கின்றதா? என்ற சந்தேகத்தையும் கடைசியில் ஒவ்வொரு முடிச்சுக்களையும் அவிழ்க்கும் போதும் பரபரப்பிற்கு பஞ்சமில்லை என்றாலும், கிளைமேக்ஸ் கொஞ்சம் யதார்த்தம் விலகியே உள்ளது.

சிபியும் ஏதோ இண்டர்நஷ்னல் பொலிஸ் போல் அசால்ட்டாக எல்லாத்தையும் செய்து முடிப்பது, அதை விட பொலிஸிற்கே இதை செய்யுங்கள், அதை செய்யுங்கள் என சொல்வது கொஞ்சம் ஓவர்.

படத்தின் மிகப்பெரும் பலம் பின்னணி இசை, சைமனின் இசையில் படத்தின் பரபரப்பு நம்மையும் தொற்றிக்கொள்கின்றது. கூடவே அருண்மணி பழனியின் ஒளிப்பதிவும் அதற்கு உதவுகின்றது.

படத்தின் திரைக்கதை, கடைசி வரை சுவாரஸ்யம் குறையாமல் எடுத்துள்ளனர். ஆனந்த்ராஜ், சிபிராஜ், சதீஷ் ஆகியோரின் நடிப்பு. கடைசி வரை டுவிஸ்ட்டை கொண்டு சென்ற விதம். கிளைமேக்ஸ் நல்ல டுவிஸ்ட் என்றாலும், கொஞ்சம் யதார்த்தம் விலகியே உள்ளது. மொத்தத்தில் குழந்தையை சத்யா கண்டுப் பிடித்தாரா என்பதை விட வெற்றியை கண்டுபிடித்துவிட்டார்.

# கொடிவீரன்



சசிகுமார் மிகுந்த துயரத்தை தாண்டி கொடி வீரன் படத்தை எப்படியோ ரிலீஸ் செய்துவிட்டார். சமீப காலமாக தோல்வியை சந்தித்து வந்த இவருக்கு நம்பிக்கை தரும் வகையில் மீண்டும் தன் நண்பர் முத்தையாவுடன் இணைந்து கொடுத்துள்ள படம் தான் கொடி வீரன். சசிகுமாருக்கு வெற்றியை கொடுத்ததா? இந்த கொடி வீரன் பார்ப்போம்.

சசிகுமார் சிறு வயதிலேயே தன் தாயை இழக்கின்றார். அன்றிலிருந்து தன் தங்கையை அவர் தான் பார்த்துக்கொள்கின்றார். தன் தங்கைக்கு ஒன்று என்றால் ஊரே எதிர்த்து வந்தாலும் உண்டு. இல்லை என்று பார்த்துவிடுவார்.

அப்படியிருக்க அதே ஊரில் பசுபதி அவருடைய தங்கை கணவனுடன் சேர்ந்து கொண்டு பல நாச வேலைகளை செய்து வருகின்றார். இதை அந்த ஊர் வருவாய் துறை அதிகாரி விதார்த் தட்டி கேட்கின்றார்.

விதார்த்திற்கும் சசிகுமார் தங்கைக்கும் திருமணம் நடக்க, பிறகு என்ன தன் மச்சான் பிரச்சினை இனி என் பிரச்சினை என சசிகுமார் இவர்களை காப்பாற்ற செய்யும் வேலையே மீதிக்கதை.

சசிகுமார் பிரம்மா, பலே வெள்ளையத்தேவா என பலரூட்டில் சென்று நமக்கு இது தான் சரி என்று கிராமத்து வீரனாக களம் இறங்கிவிட்டார். தன் தங்கைக்காக எதையும் செய்யும் தைரியம், தன் மச்சானுக்காக எதிரிகளை வெட்டி சாய்க்கும் வீரம் என தனக்கே உரிய ஸ்டைலில் கலக்கியுள்ளார். ஆனால், படம் முழுவதும் இவரை 10 பேர் 10 பன்ச் பேசி பில்டப் செய்துக்கொண்டே இருக்கின்றார்கள், அது தான் ஏன் என்று தெரியவில்லை.

பசுபதி நீண்ட இடைவேளைக்கு பிறகு மிரட்டல் வில்லனாக கலக்கியுள்ளார். ஆனால், சமீபத்தில் வந்த கருப்பன் படத்தின் சாயல் மிகவும் அப்பட்டமாக தெரிகின்றது, ஏன் கதையிலேயே தெரிகின்றது. படத்தின் மிகப்பெரும் பலமே செண்டிமெண்ட் காட்சிகள் தான்.

பசுபதி தன் தங்கை பூர்ணா மீது உயிராக இருக்கின்றார், சசிகுமார் தன் தங்கை சனுஷா மீது உயிராக இருக்கின்றார். இவர்கள் இருவரின் பாசத்தில் வென்றது யார் என்ற ஒன்லைனை மிகவும் ஜனரஞ்சகமாக சொல்ல முயற்சித்துள்ளார் முத்தையா? ஆனால், படத்தில் எதற்கு இத்தனை வெட்டுக்குத்து, அதிலும் பாடல் வரிகளில் எல்லாம் 'உன் தலையை வெட்டி வைப்பேன்' என்று படம் முழுவதும் வன்முறை தலைவிரித்து ஆடுகின்றது.

படத்தில் பெண்களுக்கான காட்சிகள் மிகவும் அழுத்தமாக உள்ளது, சனுஷா ரேணிகுண்டாவிற்கு பிறகு ஒரு நல்ல கதாபாத்திரம், அதிலும் கிளைமேக்ஸில் பூர்ணாவிடம் சென்று சசிகுமாருக்காக பேசும் காட்சியில் கவர்கின்றார். பூர்ணாவிற்கும் நீண்ட நாட்களுக்கு பிறகு ஒரு அழுத்தமான கதாபாத்திரம், மிரட்டியுள்ளார்.

கதிரின் ஒளிப்பதிவில் கிராமத்து பகுதிகளை கண்முன் கொண்டு வந்துள்ளார். ரகுநந்தன் இசையும் நம்மை அப்படியே அந்த காட்சிகளுக்குள் இழுத்து செல்கின்றது. பின்னணியில் அசத்தியுள்ளார். படத்தின் இரண்டாம் பாதி விதார்த்திற்கு என்ன ஆகும். சசிகுமார் காப்பற்றுவாரா என்ற பரபரப்பு தொற்றிக்கொள்கின்றது.

செண்டிமெண்ட் காட்சிகள் ரசிக்க வைக்கின்றது. படம் முழுவதும் வரும் வன்முறை காட்சிகள். இன்னும் இதே கதைக்களத்தில் முத்தையா எத்தனை படம் தான் எடுப்பார் என கேட்க தோன்றுகின்றது. மொத்தத்தில் கொடிவீரன் பமிலி ஆடியன்ஸ் மனதை வெல்கிறான்.

இன்று மனித உரிமைகள் தினம். அதனை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

# மறுக்கமுடியாத மனிதவுரிமைகள்




மனிதன் ஒரு சமூகப்பிராணி என்பது சில சமூகவியலாளர்களின் கருத்து. ஆனால் தனது இனத்தைச் சார்ந்தவர் களையே காட்டுமிராண்டித்தனமாக கொடுமைப்படுத்தி அல்லலுக்கு ஆளாக்கும் விநோதம் மனிதர்களிடையே மட்டுமே நாம் காண இயலும்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் ஆண்டுதோறும் டிசெம்பர் 10ஆம் திகதி அனுசரிக்கப்படுகிறது. இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றபோது நடந்த சொத்து இழப்பு, படுகொலைகள், அட்டூழியங்கள் மற்றும் மனிதப் பேரழிவுகளின் பின்னர் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டதே இந்த மனித உரிமைப் பிரகடனம். மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க முடியாத, மறுக்க முடியாத உரிமைகளை மனித உரிமைகள் என்று அழைக்கிறோம்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைவருக்கும் வலியுறுத்தும் நோக்கில் 1948, டிசெம்பர் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் உலக மனித உரிமைகள் தினம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1950ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.

விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் அதி உச்சத்திலிருக்கும் காலகட்டத்தில் நாம் வசித்து வருகிறோம். மனித உரிமைகள் பற்றியும், ஊடக சுதந்திரம் பற்றியும் மிக அதிகமாகவே பேசி வருகிறோம். ஆனால் நாகரிகமடைந்த சில மனித மனங்கள் மிருகங்களை விட மோசமான நிலையிலேயே இருந்து வருகிறது என்பதற்கு நாம் வாழும் உலகிலேயே பல நிதர்சனங்களை சந்தித்து வருகிறோம்.

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவான அடுத்தாண்டு, பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி ஐக்கிய நாடுகள் "மனித உரிமை ஆணைக்குழு" உதயமானது. ஐம்பத்து மூன்று நாடுகளை அங்கமாகக் கொண்ட இக்குழு, முதல் வேலையாக "சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

இக்குழுவின் சிபாரிசின் படி 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

டிசெம்பர் 10, 1948ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இந்தப் பிரகடனத்திற்கு 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கியது. டிசெம்பர் 10 என்ற இதே நாளை 1950 ஆம் ஆண்டிலிருந்து "சர்வதேச மனித உரிமைகள் தினமாக" அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது.

உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையைதான் இந்தநாளில் உலகம் உரத்துக் கூற வேண்டியது. மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தும் வகையிலும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கத்துடனும் இந்த தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

1979இலிருந்து பல நாடுகள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்காணிக்க தொடங்கின. 1995 இல் எல்சல்வடோர், கம்போடியா, ஹெயிட்டி, ருவண்டா, புரூண்டி ஆகிய நாடுகளில் ஐ. நா தன் கவனத்தைச் செலுத்தியது. 1993 ஜூன் 14 இல் வியட்நாமில் நடந்த 2ஆவது மனித உரிமைகள் மகாநாடு பெண்கள் உரிமைகள் பற்றி கவனம் செலுத்தியது.

இலங்கையில் யுத்த நிலையின் போது உரிமை மீறல்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்தது. இப்பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் இலங்கை ஐ.நாவில் அங்கம் பெற்றிருக்கவில்லை. ஆனால் ஆங்கிலேய காலனித்துவத்திடமிருந்து இலங்கை அதே ஆண்டில் தான் சுதந்திரத்தை பெற்றுக் கொண்டது.

நாம் ஏற்கனவே பார்த்த சர்வதேச மனித உரிமை பிரகடனத்தின் சரத்தில் எவற்றை இலங்கைத் தீவில் வாழும் மக்களுக்கு சாதகமாக இலங்கை ஆட்சியாளர் பாவித்துள்ளார்கள்?

**நடராஜன் ஹரன்**

**1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட "சர்வதேச மனித உரிமைகள் சாசனம்" 30**

❖ சமத்துவ உரிமை - சகல மனிதர்களும் சுதந்திரமாக பிறக்கின்றனர். அவர்கள் பெருமானத்திலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும், மனச்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள்.

❖ ஏற்றத்தாழ்வுகள் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை - இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் மற்றும் தேசிய அல்லது சமூகம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்துகளால் வேறுபடுத்த முடியாமல் உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் சம உரிமை பெற்றவர்கள்.

❖ சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு.

❖ யாரையும் அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை.

❖ சித்திரவதைக்கு, மனிதத் தன்மையற்ற தாக்குதல்களுக்கும் உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

❖ சட்டத்தின் முன் அனைவருக்கும் சம உரிமை

❖ பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் பாதுகாப்புக்கும் எல்லோரும் உரித்தானவர்கள்.

❖ ஒருவரின் உரிமை மதிக்கப்படாத போது சட்ட உதவியை நாடும் உரிமை.

❖ சட்டத்துக்கு புறம்பாக ஒருவரை காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ யாருக்கும் உரிமை இல்லை.

❖ நீதியான, பகிரங்கமான விசாரணைக்கான உரிமை

❖ குற்றஞ்சாட்டப்படுவோர், குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என நிரூபிக்க வாய்ப்பு வழங்கும் உரிமை.

❖ தனிப்பட்ட அல்லது அந்தரங்க விடயத்தில் எவரும் தலையிடாமல் இருப்பதற்கான சுதந்திரம்.

❖ ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் சுதந்திரமாக நடமாடுவதற்கும், நாட்டை விட்டு வெளியேறவும், திரும்பி வரவும் உரிமை.

❖ ஆபத்து காலத்தில் பிற நாட்டில் தஞ்சம் கேட்க உரிமை உண்டு.

❖ ஒவ்வொரு பிரஜைக்கும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற தேசிய இனத்தை மாற்றிக்கொள்ள உரிமை.

❖ எந்த ஆணும், பெண்ணும் விரும்பினால், திருமணம் செய்துகொண்டு பாதுகாப்புடன் குடும்பம் நடத்துவதற்கான உரிமை. சமுதாயத்தாலும், அரசாலும் இது பாதுகாக்கப்பட வேண்டும்.

❖ சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை. தனியாகவும், கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

❖ சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

❖ கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எவருக்கும் உண்டு. எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகள் இன்றி தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரம்.

❖ எந்த ஒரு கூட்டத்திலும் கலந்துகொள்ள, சங்கத்தில் உறுப்பினராக யாருக்கும் உரிமை உண்டு.

❖ அரசியல் உரிமை - அரசாங்கத்தில், சுதந்திரமான தேர்தலில் பங்குபெறவும், பொதுச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.

❖ சமூகப் பாதுகாப்பிற்கும், நன் நிறன்களை வளர்த்துக்கொள்ளவும் உரிமை.

❖ ஒவ்வொருவரும் விரும்பிய தொழில் செய்யவும், வேறுபாடு எதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம்பெறுவதற்கு உரிமை கொண்டவர்கள். ஒவ்வொருவருக்கும் தொழிற்சங்கம் அமைக்க உரிமை. அவற்றில் சேர்வதற்கும் உரிமையுண்டு.

❖ இளைப்பாறுவதற்கும், ஓய்வெடுக்கவும் உரிமை.

❖ ஒவ்வொருவரும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவக் காப்பு, அவசியமான சமூக சேவைகள் உட்பட தமது குடும்பத்தினாலும், உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்துக்கு உரிமை உடையவர். அத்துடன் வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு பெறவும் உரிமை உண்டு. தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேட கவனிப்பு மற்றும் உதவியை பெற உரிமை கொண்டவை.

❖ ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது ஆரம்ப அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமாக இருந்தல் வேண்டும்.

❖ சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்குகொள்வதற்கும், கலை மற்றும் அறிவியல் முன்னேற்றத்திலும், அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.


❖ மனித உரிமைகளை உறுதிசெய்யும் சமூக அமைப்புகளில் பங்குபற்றும் உரிமை.

❖ ஒவ்வொருவரும் பிறரது உரிமையை மதிக்க வேண்டும்.

❖ இந்த பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள எந்த ஒரு உரிமையையும் ஒருவர் பெறுவதற்கு தடையாக இருக்க உரிமை கிடையாது.

# facebook

# தங்கத் தூண்டில்



வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள். மீன் பிடித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அவர்களிடம் அவன், சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு தாருங்கள்! என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் அவனுக்கு உணவு தந்தான்.

இதைப் பார்த்த சுந்தர், அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது!" என்று எரிச்சலுடன் சொன்னான். அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அவனுக்கு வசந்த் உணவு தந்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர்.

சோம்பேறிப்பயலே! அடுத்த முறை உன்னை இங்கே பார்த்தால் தொலைத்து விடுவேன்! என்று கத்தினான் சுந்தர்.

மூன்றாவது நாளும் பிச்சை கேட்டு அங்கே வந்தான் அவன். கோபத்தால் துடித்த சுந்தர் அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு ஏரிக்கரைக்கு வந்தான்.

"இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக் கொள்! என்றான்.

அவனுக்கு மீன் பிடிக்கக் கற்று கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பிறகு அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டிற்கு வருவதே இல்லை.

பல ஆண்டுகள் சென்றன. செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் அங்கே வந்தார்.

அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர்.

தங்கத் தூண்டிலை சுந்தரிடம் தந்தார் அவர். என் அன்புப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

தன் வீட்டிற்கு வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்த்துக்கு தெரிந்தது.

கோபத்தால் துடித்த அவன், நீ சாகப் பிழைக்க இங்கே வந்தாய். உனக்கு உணவு தந்து காப்பாற்றியவன் நான். எனக்குத்தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் தா! என்று கத்தினான்.

ஆனால், அவரோ, "இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது! என்று உறுதியாகச் சொன்னார்.

இதை வசந்த் ஏற்றுக் கொள்ளவில்லை. வழக்கை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றான். நடந்ததை எல்லாம் விசாரித்தார் நீதிபதி.

வசந்த்தைப் பார்த்து அவர், நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான்.

நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினார். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்தார்.

நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே என் தீர்ப்பு!" என்றார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1274


அபி அபிநயா





அர்ச்சனா





நிரஞ்சனா




அனோஜன்




தீனதயாளன்




ரஜீவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்ப்பாணம்
விஷன் கெயார் கிளையிடமிருந்து
இலவசமாக! பரிபூரண கண் பரிசோதனையுடன்
சகலவிதமான மூக்குக்கண்ணாடிகளுக்கும்
டிசம்பர் 16 ஆம் திகதியன்று

20%
விலைக்கழிவு



மேலும்..
டிசம்பர் 31 ஆம் திகதி வரை
கூலிங் கிளாஸ்களுக்கு 20% விலைக்கழிவு

கேட்டல் புலன் கருவிகளுக்கு
20% வரையான விலைக்கழிவு

VISION CARE
OPTICAL SERVICES

அழையுங்கள்: 077 342 6515

விஷன் கெயார் ஒப்டிகல்ஸ் (பிரை) லிமிடட்.
இல.108, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். 021 222 1808



Hero
பண்டிகைக் காலத்தில்
ஹீரோ
மைஸ்ட்ரோ எட்ஜ் ஸ்கூட்டர்களுக்கு
ரூ.10,000/- தள்ளுபடி

5 WARRANTY

MAESTRO EDGE



ஜெக்கட் 2 இலவசம்

~~ரூ. 239,999/-~~
ரூ. 229,999/-
டிசம்பர் 31ம் திகதிவரை மாத்திரம்

☎:0115 777 000 R.G. டிரேடர்ஸ் - 0777 340056
நாடளாவிய அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும்
அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans